## (எ) அரசாங்க நிதி

### 1. முன்னுரை

அரசாங்க நிதி நடவடிக்கை பற்றிய பின்வரும் பகுப்பாய்வானது, முன்னைய ஆண்டுகளைப் போலல்லாமல், அரசாங்கக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள வாறான, தரவுகளையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசாங்கச் செலவின், வருவாய்ப் பகுப்பாய்வானது, பொருளாதாரம் நிதி என்பன சார்ந்த திருத்தியமைக்கப்பட்ட பாகுபாட்டின் அடிப்படையில், இக்கணக்குகள் மறுபாகுபாடு செய்யப்படுவதன்மூலம், வழக்கமாகச் செய்யப்பட்டு வந்தது. 1969 தொடக்கம் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்நடைமுறை, தரவுகள் நேரகாலத்திற்குக் கிடைக்காமையினால் இங்கு கடைப்பிடிக்கப் படவில்லை. எவ்வாறாயினும், மத்திய வங்கியின் மாதாந்தச் செய்தித்திரட்டில் ஒரு முக்கிய குறிப்புரையாக வழக்கமான பகுப்பாய்வைக் கூடிய விரைவில் பிரசுரிப்பதற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 11 (எ) 1இல், 1971/72ஆம் நிதியாண்டிற்குரிய அரசாங்க நிதி நடவடிக்கைகள் பற்றிய முக்கிய அம்சங்கள், முந்திய 9 நிதியாண்டிற்குரிய அதே தொடர்பான தரவுகள், மற்றும் 1973ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக் கப்பட்ட மதிப்பீடுகள் என்பன தரப்பட்டுள்ளன. 1971/72ஆம் நிதி யாண்டானது, 1971ஆம் ஆண்டு ஒற்றோபர் முதலாம் திகதியில் இருந்து 1972ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதி வரையுள்ள 15 மாதங்களைக் கொண்டதாகும். 1973ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இருந்து கலண்டர் ஆண்டையே நிதியாண்டாகக் கைக்கொள்வதென அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவே இதற்குக் காரணமாகும். பின்வரும் அட்டவணைகளிலும் உரையிலும், பொருத்தமான இடங்களிலெல்லாம் 1971/72 நிதியாண்டின் 15 மாதகாலப் பகுதிக்குரிய எண்தொகைகளை, முன்னைய நிதியாண்டுகளுடனும், பின்வரும் ஆண்டுகளுடனும், பொருள் பொதிந்த முறையில் ஒப்பீடு செய்ய ஏதுவாக, அவ்வெண்தொகைகள் 12 மாதகால அடிப்படையிலான விகிதசம முறையில் தரப்பட்டுள்ளன.

1971/72 நிதியாண்டில் மொத்த வருவாய் ரூபா 41,020 இலட்சமாகவும், மொத்த செலவினம் ரூபா 58,090 இலட்சமாகவும் விளங்கியது. 1971/72இன் மொத்தச் செலவினமானது, ரூபா 42,330 இலட்சம் மீண்டெழும் செலவினம், ரூபா 15,070 இலட்சம் மூலதனச் செலவினம் முற்பணக் கணக்குகளினதும் ரூ. 680 இலட்சங்கொண்ட தேறிய கொடுப்பனவுகள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுமிடத்து, 12 மாதகால விகிதசம அடிப்படையில், 1971/72ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவின அதிகரிப்பானது, ரூபா 5,040 இலட்சமாக (12 சதவீதம்) விளங்க மொத்த வருவாய்க்கும் ரூபா 4,670 இலட்சத்தால் (17 சதவீதம்) கணிமானளவு அதிகரித்தன. முன்னைய நிதியாண்டினைப்போல், மீண்டெழும் செலவினம் ரூபா 4,050 இலட்சத்தால் (14 சதவீதம்) அதிகரித்தமையே, மொத்தச் செலவினம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும். 1970/71ஆம் ஆண்டில் மாற்றமுறாது

## அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின்

| விடயங்கள் | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 |
|---|---|---|---|---|
| 1. வருவாய் .. ... . ... | 1,593 | 1,759 | 1,816 | 1,833 |
| 2. செலவு ... . ... .. | 2,032 | 2,278 | 2,337 | 2,515 |
| 2. 1 மீண்டெழுஞ் செலவு (ஆ) ... ... | 1,643 | 1,891 | 1,893 | 1,976 |
| 2. 2 மூலதனச் செலவு (இ) ... .. | 403 | 403 | 471 | 528 |
| 2. 3 முற்பணக் கணக்குகளும் ஏனையவையும்... | —14 | – 16 | – 28 | 10 |
| 3. வரவு செலவுத்திட்டப் பணக்குறை ... ... | 439 | 519 | 520 | 682 |
| 4. படுகடன் மீளக் கொடுப்பனவு (ஈ) ... ... | 47 | 57 | 90 | 116 |
| 5. தேறிய பணக்குறை ... ... ... | 392 | 462 | 430 | 566 |
| 6. தேறிய பணக் குறையின் நிதியீட்டம் | | | | |
| 6.1 உள்நாட்டு சந்தையல்லாக் கடன்பாடு ... | – 34 | – 2 | 50 | 112 |
| 6.2 உள்நாட்டு சந்தைக் கடன்பாடு ... | 372 | 368 | 334 | 498 |
| 6.3 வெளிநாட்டு நிதி .. ... | 100 | 108 | 117 | 154 |
| 6.4 பண நிலுவைகளின் வீழ்ச்சி ... ... | ... | 45 | 20 | – 82 |
| 7. தேறிய பணக்குறையின் நிதியீட்டம் . | | | | |
| 7.1 உள்நாட்டு சந்தையல்லாக் கடன்பாடு ... | – 34 | – 2 | 50 | 112 |
| 7.2 உள்நாட்டு சந்தைக் கடன்பாடு ... | 333 | 323 | 261 | 418 |
| 7.3 வெளிநாட்டு நிதி ... ... | 92 | 95 | 100 | 118 |
| 7.4 பண நிலுவைகளின் வீழ்ச்சி ... ... | | 45 | 20 | – 82 |
| 8. நிதித் தொழிற்பாட்டின் விரிவுத்தாக்கம் ... | 162 | 163 | 35 | 122 |
| 9. வெளிநின்ற பொதுப்படுகடன் (தேறிய) ... | 3,065 | 3,436 | 3,772 | 4,268 |

(அ) பின்னிணைப்பு II இன் அட்டவணைகள் 31 இலும் 33 இலும் உள்ள அடிக்குறிப்புகளிற் தரப்பட்டுள்ள காரணங்களுக்கமைய இவ்வெண்தொகைகள் அரசாங்கக் கணக்குகளிலிருந்து வேறுபடும்.

(ஆ) 1968/69 தொடக்கம் மூலதனச் செலவாகப் பாகுபடுத்தப்பட்டு வந்த கடன்கரைப்பு நிதியக் கொடுப்பனவுகள், படுகடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவு, பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் என்பன ஒப்பிடுவதற்காக மீண்டெழுஞ் செலவுக்கு மாற்றப்பட்டுள்ளன,

## சுருக்கக்குறிப்பு 1962/63 — 1973 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 அங்கீகரிக்கப்பட்ட 15 மாத காலப் பகுதி | 1971/72 தற்காலிகமானவை | | 1973 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 15 மாதங்கள் | 12 மாதங்கள்* | |
| 1,955 | 2,156 | 2,497 | 2,736 | 2,815 | 3,945 | 4,102 | 3282 | 3,880 |
| 2,677 | 3,007 | 3,445 | 3.886 | 4,143 | 5,743 | 5,809 | 4,647 | 5,161 |
| 2,012 | 2,321 | 2,544 | 2,873 | 3,225 | 4,432 | 4,645 | 3,716 | 4,133 |
| 625 | 714 | 852 | 812 | 810 | 1,186 | 1,096 | 877 | 928 |
| 42 | - 29 | 49 | 201 | 108 | 125 | 68 | 54 | 100 |
| 723 | 850 | 947 | 1,150 | 1,327 | 1,798 | 1,707 | 1,366 | 1,281 |
| 117 | 135 | 160 | 214 | 244 | 384 | 412 | 330 | 406 |
| 607 | 716 | 788 | 936 | 1,083 | 1,414 | 1,295 | 1,036 | 874 |
| 72 | 10 | 52 | 16 | 140 | — | 249 | 199 | 50 |
| 418 | 630 | 358 | 815 | 693 | 1,086 | 1,004 | 803 | 690 |
| 256 | 247 | 426 | 345 | 370 | 712 | 598 | 478 | 541 |
| - 22 | - 36 | 111 | — 26 | 123 (உ) | — | - 144 | - 115 | — |
| 72 | 10 | 52 | 16 | 140 | — | 249 | 199 | 50 |
| 348 | 552 | 271 | 720 | 585 | 920 | 835 | 668 | 515 |
| 209 | 190 | 354 | 226 | 235 | 494 | 355 | 284 | 309 |
| - 22 | - 36 | 111 | — 26 | 123 (உ) | — | - 144 | - 115 | — |
| 56 | 267 | 181 | 425 | 218 | 446 | 139 | 112 | 90(ஊ) |
| 4,782 | 5,689 | 6,239 | 7,237 | 8,108 | வி. கி. | 9,448 | 7,558 | வி.கி. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இ) தேசிய அபிவிருத்தி ஒதுக்குகளுக்கான செலவுக் கட்டணத்தையும் உள்ளடக்கும்.
(ஈ) கடன்கரைப்பு நிதியத்தின் கொடுப்பனவுகளையும், நேரடியான படுகடன் திருப்பிக் கொடுப்பனவுகளையும், பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளையும் உள்ளடக்கும்.
(உ) 1971–க்குறிய ஆண்டறிக்கையின் 176ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.
ஊ) அட்டவணை 2 (வ) 14 க்குரிய அடிக்குறிப்பு (ஆ) 204 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
* விகிதசம அடிப்படையில்.

இருந்த, மூலதன வாக்குப்பணத்துக்குரிய செலவினம், 1971/72ஆம் ஆண்டில் ரூபா 670 இலட்சத்தால் (அல்லது 8 சதவீதத்தால்) அதிகரித்தது, எவ்வாறுயினும், முற்பணக் கணக்குகள், தொடர்பான கொடுப்பனவுகள் ரூபா 540 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்தன.

1970/71ஆம் ஆண்டு வரைக்கான கணக்குகள், உணவு உதவிப்பணத் தரவுகளைத் தேறிய அடிப்படையில் தான் காட்டுகின்றன. அதாவது, மொத்த உணவு உதவிப் பணத்தில் இருந்து விற்பனையிலான இலாபங்கள் கழிக்கப்பட்ட தொகையாகும். அத்தோடு இத்தொகையானது கணக்குகளில் செலவினமாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. எவ்வாறுயினும், 1971/72ஆம் ஆண்டில் இருந்து உணவு உதவிப்பணமானது, மொத்த அடிப்படையில் செலவினத்தின் ஒரு பகுதியாகவும், உணவு விற்பனைகளில் இருந்து பெற்ற இலாபம் வருவாயின் ஒரு பகுதியாகவும் காட்டப்பட்டது. எனவே, 1971/72ஆம் ஆண்டிற்குரிய செலவினமும், வருவாயும் அவ்வாண்டில் உணவு விற்பனைகளில் கிடைத்த இலாபமான ரூபா 430 இலட்சத்தால் கூட்டிக் காட்டப்பட்டிருக்கலாம். இவ்விடயத்திற்கு இடமளித்துப் பார்ப்பின், 1970/71ஆம் ஆண்டிற்குரிய மொத்த வருவாய் ரூபா 4,240 இலட்சத்தால் (15 சதவீதம்) அதிகரித்திருக்க, மொத்தச் செலவின அதிகரிப்பானது ரூபா 4,610 இலட்சமாக (11 சதவீதம்) இருக்கும்.

முன்னைய ஆண்டுடன் நோக்குமிடத்து, 1971/72ஆம் ஆண்டிற்குரிய வருவாயிலான, குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (விகிதசம) வெ. செ. உ. சா. வின் விற்பனையிலான கூடிய கிடைப்பனவுகள் (ரூபா 1,400 இலட்சம்) சாராய விற்பனையிலான இலாபம் (ரூ. 950 இலட்சம்) மொத்த விற்பனை வரி (ரூபா 690 இலட்சம்) புகையிலை வரி (ரூபா 660 இலட்சம்) அரசாங்க வர்த்தக முயற்சிகளின் கிடைப்பனவுகள் (ரூபா 350 இலட்சம்) (அதாவது புகையிரத சேவை, அஞ்சல் தொலைதொடர்புச் சேவை, துறைமுகம்) என்பவற்றினாலேயே ஏற்பட்டது. இம் மூலங்களில் இருந்த கிடைத்த அதிகரித்த கிடைப்பனவுகளும் மற்றைய வருவாயில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்புகளும், உணவு விற்பனையிலான இலாபங்கள் (ரூபா 370 இலட்சம்) ஏற்றுமதித் தீர்வைகள் (ரூபா 320 இலட்சம்) இறக்குமதித் தீர்வைகள் (ரூபா 240 இலட்சம்) என்பவற்றின் வருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சியினை பெருமளவுக்கு ஈடு செய்தன. இவ்வாண்டு காலத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட பெருமளவிலான பிற்போட்ட கொடுப்பனவுகளால், அதாவது குறிப்பாக முன்னைய ஆண்டில் உணவு ஆணையாளரால் செய்யப்பட்ட சீனி இறக்குமதிகளின் பேரிலான கொடுப்பனவுகளினாலேயே வெ. செ. உ. சா. இல் இருந்து கூடுதலான கிடைப்பனவுகள் ஏற்பட்டன. கூடுதலான அளவு சாராய விற்பனை இம்மூலத்தில் இருந்து ஏற்பட்ட கணிசமான வருவாய் அதிகரிப்புக்குக் காரணமாக இருக்க, புகையிலையில் உள்ள உண்ணாட்டு வரி வீதத்தினை ஒரு இறாத்தலுக்கு ரூபா 5/- இனால் உயர்த்தியமை புகையிலை வரியில் ஏற்பட்ட கூடுதலான கிடைப்பனவுகளுக்குக் காரணமாகும். மொத்த விற்பனைவரிக் கிடைப்பனவுகள் அதிகரித்தமைக்கு அதனைச் சிறந்த முறையில் உள்நாட்டு இறை வரித்திணைக்களம் நடைமுறைப்படுத்தியமையே காரணமாகும். நடைமுறைப்

படுத்தும் முயற்சிக் காலத்தில் இத்திணைக்களமானது, 5,000 வியாபார நிறுவனங்களைச் சோதனை செய்ததுடன், மேலும் 2,500 புதிய தொழில் முயற்சிகளையும் பதிவு செய்தது. 1970/71ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட அமைதியற்ற நிலைமைகளினால், மிகவும் மோசமாக, தாக்கப்பட்ட புகையிரத சேவை, அஞ்சல் தொலைபேசித் தொடர்பு என்பவற்றின் வருவாயானது இந் நிதியாண்டுக் காலத்தில் முறையே ரூபா 300 இலட்சம், ரூபா 200 இலட்சம் கொண்ட அதிகரிப்புகளைக் காட்டியது. இந்நிதியாண்டுக்காலத்தின்போது தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளும் இவ்வருவாய் அதிகரிப்புகளுக்கு ஓரளவு காரணமாய் அமைந்தன.

கணிசமானளவால் செலவினம் அதிகரித்தபோதிலும், மொத்த வருவாயில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, வரவுசெலவுத் திட்டக் குறையினை ரூபா,17,070 இலட்ச அளவில் மட்டுப்படுத்தி வைப்பதற்கு உதவியது. இக்குறையானது, 12 மாதகால விகிதசம அடிப்படையில், ரூபா 13,660 இலட்சமாகவிருக்கும், இத்தொகை முன்னைய நிதியாண்டிலும் பார்க்க ரூபா 390 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்துக் காணப்படுகிறது. ரூ.17,070 இலட்சங் கொண்ட இக்குறைவில் ரூபா 10,040 இலட்சங்கொண்ட கணிசமானளவு தொகை உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளாலும், ரூபா 5,980 இலட்சம் வெளிநாட்டு நிதியினாலும், ரூபா 2,490 இலட்சம் ஒப்பீடாக அதிகளவிலுள்ள சந்தையற்ற கடன்பாடுகளாலும் (தேறிய நிர்வாகக் கடன்பாடுகள்) நிதியீட்டம் செய்யப்பட்டது. வரவுசெலவுத்திட்டக் குறையினை நிரப்பிய பின்பு, இம்மூலங்களில் இருந்து ஏற்பட்ட மிகையானது பண நிலுவைகளை (வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதியங்கள் உட்பட) ரூபா 1,440 இலட்சத்தால் அதிகரிப் பதற்குக் காரணமாக இருந்தது. எவ்வாறுயினும், வர்த்தக வங்கி ஊழியர்களின் 3 மாதகால வேலைநிறுத்தின்போது, அரசாங்கத்திற்குரிய வருவாய் கிடைப்பனவுகளின் பாய்வில் ஏற்பட்ட தடைகளின் காரணமாக திறைசேரி உண்டியல்களால் (உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள்) ரூபா 3,000 இலட்சம் திரட்டவேண்டிய கட்டாயநிலைக்கு அரசாங்கம் உட்படுத்தப்பட்டது. நிதியாண்டு முடிவுறுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு, வேலைநிறுத்தம் முடிவுற்றமை காரணமாக, அரசாங்கத்தின் பேரில் வரையப்பட்ட காசோலைகள் பணமாகக் கைவரப்பெற்றமையினால் ஆய்வுக்குரிய[1] நிதியாண்டினிறுதியில் பணநிலுவைகள் ரூபா 1,440 இலட்ச அளவிற்கு மிகவும் உயர்ந்த மட்டத்திற்குச் செல்வதற்கு உதவின. 1971-72ஆம் ஆண்டின்போது கடன் திருப்பிக் கொடுப்பனவுகள் ரூ. 4,120 இலட்சமாக விருந்தன. எனவே இந்த ஆண்டுக்கான தேறிய பணக் குறை ரூ. 12,950 இலட்சமாகும்.

1971/72 ஆம் ஆண்டில் மொத்தச் செவினமானது, இவ்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளை, ரூபா 660 இலட்சத்தால் விஞ்சியது. மீண் டெழும் செலவினமானது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ரூபா 1850 இலட்சத் தால் மிஞ்சிக் காணப்பட, மூலதன வரக்குப்பணச் செவினமானது மூலமதிப் பீட்டு எதிர்பார்ப்புக்களினை விட ரூ. 900 இலட்சம் குறைவானதாகவிருந்தது.

1. மறுபுறத்தில், திறைசேரியினால் செய்யப்படும் கொடுப்பனவுகளின் பேரில் உள்ளபற்றுப் பதிவுகள், காசோலைகள் வரையப்படும் நேரத்திலேயே செய்யப்படுகின்றன.

வரவு செலவுத் திட்ட மூலமதிப்பீட்டு எடுத்துரைப்புக்களுடன் ஒப்பிடுமிடத்து முற்பணக்கணக்குகளைப் பொறுத்தவரையிலான கொடுப்பனவுகள் ரூபா 570 இலட்சம் குறைவானதாகவிருக்க கடன் கரைப்பு நிதியங்களுக்கான உதவு தொகைகளும் பொதுப்படுகடனுக்குரிய நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகள் மூலமதிப்பீடுகளிலும் பார்க்க ரூபா 280 இலட்சத்தால் அதிகரித்துக் காணப் பட்டது.

முக்கியமாகத் துணை வாக்குப்பணங்கள் காரணமாக இவ்வாண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளை மீண்டெழும் செலவினங்கள் விஞ்சியுள்ளன மீளாய்வுக்குரிய நிதியாண்டுக் காலப்பகுதியின்போது, மீண்டெழும் வாக்குப் பணங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூ. 40,480 இலட்சங்கொண்ட தேறிய தொகையுடன், ரூ 1460 இலட்சம் தொகை கொண்ட துணை மதிப்பீடு களும் தேசிய அரசுப் பேரவையால் நிறைவேற்றப்பட்டது. முக்கிய துணைமதிப் பீடுகள் பின்வரும் முறையில்அமைந்திருந்தன. ஓய்வூதியத்திற்கும் அரசாங்க சேவை சேமநிதியங்களுக்கு ரூ. 310 இலட்சமும், பொதுப்படு கடனின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்கு ரூ. 300 இலட்சமும், பாதுகாப்புப் படைக்கு ரூ. 230 இலட்சமும், ஒதுக்கப்பட்டிருந்தன. மூலதன வாக்குப் பணங்களுக்கான ரூ. 790 இலட்சங்கொண்ட துணை ஏற்பாடுகளும் இவ்வாண்டின்போது, பேரவை யில் நிறைவேற்றப்பட்டன. இருந்தபோதும், மூல மதிப்பீட்டில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த தொகையிலும் குறைவுடையதாகவே மூலதனச் செலவினம் அமைந்திருந்தது. இவ்வேற்பாடுகளை ஒட்டிய கணிசமானளவு குறைச் செலவே இதற்கு முக்கிய காரணமாகும். வருவாய்ப் பக்கத்தில், இதனைப் பொறுத்த செயலாற்றமானது, ஊக்கமளிக்கும் முறையில் அமைந்திருந்தது மொத்த வரு வாயானது மூலமதிப்பீட்டில் எடுத்துக் கூறியதனைவிட ரூ.1,570 இலட்சம் கூடுத லானதாக விளங்கியது. இதன் விளைவாக, வரவு செலவுத் திட்டக்குறை மூலமதிப் பீட்டுத் தொகையிலும்பார்க்க ரூ. 910 இலட்சத்தால் குறைந்து காணப்பட்டது. இக்குறையை நிதியீட்டம் செய்வதில், உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடு, மூல மதிப்பீட்டில் எடுத்துக் கூறப்பட்டிருந்த தொகையினைவிட. ரூ. 820 இலட்சம் குறைவாகவே உதவியது. வெளிநாட்டு நிதியும் மூலமதிப்பீட்டு எதிர்பார்ப்புக் களைவிட ரூ. 1,140 இலட்சத்தால் குறைவுற்றே விளங்கியது. இக்குறைவுகள், உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடுகளினால் மேலதிகமாக ஈடு செய்யப் பட்டன. அதாவது அக்குறைவுகள் வரவு செலவுத்திட்ட மூலமதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்டிராததேறிய நிர்வாகக் கடன்களாகிய ரூ. 2,490 இலட்சத்தி னால் ஈடு செய்யப்பட்டன. வெளிநாட்டு இணைக்கிணை நிதியங்களை உள்ளடக்கிய பண நிலுவைகளை ரூபாய் 1,440 இலட்சமளவிற்கு அதிகரிப்பதற்கு இந்நட வடிக்கைகள் துணை புரிந்தன.

1971/72 இல் வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளின் தேறிய விரிவுத்தாக் கம் ரூ. 1,390 இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில், 1971/72 இனைவிட, குறிப்பிடத்தக்களவு குறைவானதாக இருந்தது. 1971/72 இற்கான வரவு செலவுத்திட்ட எடுத்துரைப்புக்களிற் சில பின் வாங்கப்பட்டமை வரவு செலவுத் திட்டத்தின் நிரப்பப்படாத இடைவெளியை ரூ. 4,460 இலட்சத்திற்கு அதிகரித் திருந்தது. எனினும் கவர்ச்சியூட்டும் வருவாய்ச் செயலாற்றம் விரிவுத்தாக்

கத்தை மூலமதிப்பீட்டிலிருந்த நிரப்பப்படாத இடைவெளியிலுள்ள ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க உதவியது. எனினும் மூலமதிப்பீடு எதிர் பார்ப்புக்களுக்குக் குறைவாக மூலதனச் செலவினம் வீழ்ச்சியுற்றுள்ளதென்பது இங்கு நினைவு கொள்ளுதற்குரியது. வெளிநின்ற தேறிய பொதுப்படுகடன் இவ் வாண்டுக் காலப்பகுதியின்போது, ரூ. 13,400 இலட்சத்தினால் அதிகரித்து, 1971/72 இன் இறுதியில் ரூ. 94,480 இலட்சமாக விளங்கியது.

நடைமுறை நிதியாண்டான 1973 இல் வருவாயும், செலவினமும் முறையே ரூபாய் 38,800 இலட்சமாகவும், ரூபாய் 51,610 இலட்சமாகவும் விளங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளன. இறுதியில் குறிக்கப்பட்ட செலவினம் ரூ. 37,270 இலட்சம் கொண்ட மீண்டெழும் செலவினத்தையும் ரூ. 9,280 இலட்சம் கொண்ட மூலதனச் செலவினத்தையும் முற்பணக் கணக்குகளைப் பொறுத்துச் செய்யப்பட்ட ரூ. 1,000 இலட்சம் கொண்ட தேறிய கொடுப்பனவுக்கான ஏற் பாட்டையும் உள்ளடக்கும். 1973 இன் வரவு செலவுத்திட்டப் பணக்குறை ரூ. 12,810 இலட்சமாக விளங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரூ. 6,000 இலட்சம் கொண்ட உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டினாலும் ரூ.5,410 இலட்சம் கொண்ட வெளிநாட்டு நிதியினாலும், ரூபா 500 இலட்சம் கொண்ட நிர்வாகக் கடன்பாட்டினாலும் இக்குறை நிதியீட்டப்படலாமெனக் கருதப்பட்டது. மீதித் தொகையாகிய ரூ. 900 இலட்சம் வங்கித்துறையிலிருந்து பெறப்படும்[1].

1971/72 இல், வளர்ந்துவரும் வரவுசெலவுத் திட்டக் குறையை ஓரளவு தடுக்க உதவும் முறையில் 1971/72 இன் செலவின் அதிகரிப்பு வீதத்துக்கு மேலாக வருவாய் அதிகரிப்பு வீதம் இருந்ததெனினும், கடந்த பத்து ஆண்டு களில் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஏற்ப வருவாயின் அதிகரிப்பு அமையவில்லை என்ற உண்மையை அட்டவணை II (எ) 1 காட்டுகிறது. எனினும் 1962/63 இலிருந்து அரசாங்க வருவாய் 102 சதவீதத்தால் அதிகரித்திருந்த செலவினத்தின் அதிகரிப்பு 126 சதவீதமாக அமைந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இப்பணக்குறையின் சராசரி மட்டம் ரூபாய் 11,280 இலட்சமாக விளங்க, இதற்கு முந்திய ஐந்து ஆண்டுகளில் இப்பணக்குறையின் சராசரி மட்டம் 5,770 இலட்சமாக விளங்கியது.

கடந்த பத்து ஆண்டுகளாக வருவாய் அதிகரிப்பு வீதம் ஆண்டொன்றுக்கு 8.1 சதவீதமாக (கூட்டு) விளங்க, ஆண்டொன்றுக்கான செலவின அதிகரிப்பு வீதம் 9.5 சதவீதமாக (கூட்டு) இருந்துள்ளது. (மீண்டெழுஞ் செலவினம் 9.3 சதவீதமாகவும் மூலதானச் செலவினம் 9.0 சதவீதம்மாகவும்) கடந்த ஐந்து ஆண்டுகளில், 10 8 சதவீதம் கொண்ட வருவாய் அதிகரிப்பு ஆண்டுச்சராசரி வீதத்திற்கும் (கூட்டு) 11.3 சதவீதம் கொண்ட (கூட்டு) செலவின அதிகரிப்பு ஆண்டுச்சராசரி வீதத்திற்கும் (12.1 மீண்டெழும் செவினத்திலும் 5.3 சதவீதம் மூலதனச் செலவினத்திலும் ஏற்பட்டது) இடையிலுள்ள ஒப்புமையற்ற தன்மை ஓரளவு சுருக்கப்பட்டுள்ளது. வரவேற்கப்படத்தக்க முறையில் அப்போக்கு அமையினும், கடந்த ஐந்து ஆண்டுகளின் மீண்டெழும் செலவினத்தின் அதி

1. அட்டவணை 2 (எ) 14 இன் அடிக்குறிப்பு (ஆ)ஐ பக்கம் 204 இல் பார்க்கவும்.

கரிப்பு வீதம் விரைந்து செல்ல மூலதனச் செலவின அதிகரிப்பு வீதம் தொடர்ச்சியாக குறைந்து சென்றுள்ளது. மீளப்பார்வையிடும் நிதியாண்டில் உண்மை நியதிகளின்படி பார்க்கின் மூலதனச் செலவினத்தின் அதிகரிப்பு 1968/69 இன் மட்டத்தை மீண்டும் அடைந்துள்ளது.

1967/68 ஐ அடுத்து மேலதிக வளங்களைத் திரட்டுவதற்கு, உறுதியான முயற்சி எடுக்கப்பட்டது. அத்துடன் மீளாயப்படும் இவ்வாண்டில் வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் பெறப்பட்டுள்ளன. எனினும் ஆண்டு தோறும் மீண்டெழும் செலவினத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் அதிகரிப்பு, வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைத் தொடர்ச்சியாக மிஞ்சும் நிலையிலேயே விளங்குகின்றது. இதனால் ஏற்பட்ட ஆகக்கூடிய நன்மை முக்கியமற்ற மிகைகளே யாகும். மிகப் பாதகமான நிலையெனக் கணிக்கின், அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கில் பணக்குறைவினை ஏற்படுத்தியது. வருவாய்ப் பக்கத்தில் பெறப்பட்ட குறிப்பிடத்தக்க நன்மைகள் வீண்போகாது இருக்க வேண்டின், மீண்டெழும் செலவினத்தைக் குறிப்பாக மாற்றக் கொடுப்பனவுகளைத் தடை செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான நோக்குத் தேவையென்பது தெளிவு. உற்பத்தியை ஊக்குவிக்கும் பெரும் பொறுப்பினை ஏற்றுள்ள இச்சூழ்நிலை மூலதனச் செலவினத்தின் அதிகரித்த சேவையை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியுள்ளது. இச்செலவு அதிகரிப்புக்கள் ஆண்டுகள்தோறும் வரவுசெலவுத் திட்டக்குறைகளில் படிப்படி அதிகரிப்புகள் ஏற்படக் காரணமாயிருந்தன. இது மட்டும் தனியே எமக்குப் பெரும் கவலையினை ஏற்படுத்தாதபோதும் வருங்காலத்திற்குரிய நடைமுறைக் கணக்கில் போதியளவும், தானாக இயங்கத்தக்கதுமான மிகைகளை அரசாங்கம் உருவாக்கமுடியாமல் இருப்பதுவே வருங்காலத்தில் எமது ஆழ்ந்த கவனத்திற்குரிய விடயமாக இருக்கிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படும் கடன்பாடுகளை அதிகரிப்பதன் மூலமே, படிப்படியாக அதிகரித்துவரும் வரவு செலவுத்திட்டப் பணக்குறை நிதியீட்டப்பட்டு வந்துள்ளது. இந்த முறையானது, கடன் அழிப்பு, கடன் முகாமை ஆகியவற்றில் சிக்கல்களை ஏற்படுத்தியே தீரும். வெளிநாட்டு உதவியை போதியளவு பெறுவதில் அதிகரித்துச் செல்லும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய இவ்வேளையில் வரவுசெலவுத் திட்டத்தின் பணக்குறையைக் குறைப்பதில் உள்நாட்டுக்கடன்பாடுகள் பெருமளவு பங்கினை அண்மை ஆண்டுகளில் வகித்துள்ளன. 1968/69 இல் வரவு செலவுத் திட்டப் பணக்குறையின் ஏறக்குறைய 45 சதவீதத்தை நிதியீட்ட உதவிய வெளிநாட்டு வளங்கள் இக்காலப்பிரிவுக்குப் பின் படிப்படியாகக் குறைந்த விகிதத்திலேயே வரவு செலவுத்திட்டப் பணக்குறைக்கு நிதி உதவி செய்துள்ளன. 1971/72 இல் இவற்றின் பங்கு 35 சதவீதத்துக்கு மீண்டுமொருமுறை அதிகரித்தது உண்மையெனினும் கடந்த சில ஆண்டு காலப்பகுதியின்போது வெளிநாட்டு நிதியின் உண்மைப் பெறுகைகள், ஆண்டு வரவுசெலவுத் திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகளினை விடக் குறைவுடையதாகவே தொடர்ந்து விளங்கி வந்துள்ளன[1]. வெளிநாட்டு நிதியின் ஒப்பீடான பங்கு வீழ்ச்சியுற்றி

1. அட்டவணை 2 (எ) 12 ஐ பக்கம் 195 இல் பார்க்கவும்

ருப்பது உள் நாட்டு வளங்கள் அதிகரித்த நிலையில் திரட்டப்படும் மாறி வரும் நிலையில் எடுத்துக்காட்டுகிறதெனினும் இதன் விளைவாக உள்நாட்டுக் கடனில் ஏற்படும் வளர்ச்சியையும் இக்கடன்களைத் தீர்ப்பதில் எழக்கூடிய சிக்கல்களையும் நாம் கவனமாகப் பார்த்துக்கொள்ளல் வேண்டும். உள்நாட்டு கடனுக்கும் வெளிநாட்டுக் கடனுக்கும் செலுத்தப்பட்ட வட்டி 1971/72 இல் விகிதசம அடிப்படையில் ரூபாய் 4,130 இலட்சமாக விளங்கியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்தகைய கொடுப்பனவுகளின் அதிகரிப்பு வீதம், முன்னைய ஐந்து ஆண்டுகளின் 14 சதவீத அதிகரிப்பு வீதத்துக்கு மாறாக, 25 சதவீத (கூட்டு) மாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வருங்காலத்தில் அரசாங்கத்திற்கு கடனைத் தீர்ப்பது ஒரு முக்கிய சிக்கலாக இல்லாதிருக்க வேண்டின் இந்நிதிகளைக் கடன்பாடுகளாகப் பெற்றதற்கான செலவின்கணிசமான ஒரு பகுதியையாகுதல் உள்ளடக்குமுறையில் இம்முதலீடுகளிலிருந்து பெறப்படும் விளைவுகள் அமைய வேண்டியது தவிர்க்கமுடியாததொன்ருகும்[1]. உள்நாட்டு நிதியின் உறுதித்தன்மைபற்றி நாம் கவனத்திற்கு எடுக்கவேண்டின், நிதி நடவடிக்கைகளின் விரிவுத்தாக்கத்தைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

பதினைந்து மாதகாலப் பிரிவுகொண்ட 1971/72 இல் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியில் ரூ. 1,140 இலட்ச வீழ்ச்சியும், உள்நாட்டுச் சந்தைக் கடன் பாடுகளில் ரூபாய் 820 இலட்ச வீழ்ச்சியும் காணப்பட்டது. இவ் வீழ்ச்சி நிர்வாகக் கடன்பாடுகளில் ஏற்பட்ட 2,490 அதிகரிப்புகளினல் மேலதிகமாக நிரப்பப்பட்டது. உள்நாட்டு மூலங்களிலிருந்தும் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெற்ற கடன்பாடுகள் 1971/72 இன் முடிவில் வெளிநின்ற தேறிய படுகடனில் ரூபா 13,400 இலட்ச அதிகரிப்பை ஏற்படுத்தியது. இவ்வதிகரிப்பு உள்நாட்டு படுகடனின் ரூபா 7,550 இலட்சத்தினையும் வெளிநாட்டுப் படுகடனில் ரூபா 5,850 இலட்சத்தையும் உள்ளடக்கியுள்ளது. மீளப்பார்வையிடப்படும் இவ்வாண்டினிறுதியில் வெளிநின்ற தேறிய பொதுப்படுகடன் ரூபா 94,480 இலட்சமாக விளங்கியது. இது ரூபாய் 70,950 இலட்ச உள்நாட்டுப்படுகடனையும், ரூபாய் 23,530 இலட்சம் கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கும்.

## 2. பணக்குறையின் நிதியீட்டம்

1971/72 ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்பட்ட தேறிய பணக்குறை ரூ. 14,140 இலட்சமாகும். எவ்வாருயினும் வரவு செலவுத்திட்ட இறுதி விளைவுகளாக ரூ. 12,950 இலட்சங்கொண்ட குறையே ஏற்பட்டது. 12 மாத விகிதசம அடிப்படையில். இக்குறை ரூ. 10,360 இலட்சம்கொண்ட தொகையாகவிருக்கும். இத்தொகை முன்னைய நிதி ஆண்டின் பணக்குறையைவிட ரூ. 470 இலட்சம் குறைவானதாகும். மேலும் இது இவ்வாண்டுக்கான மூல மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட தேறிய பணக்குறையினைவிட ரூ. 1190 இலட்சம் குறைவானதாகும். அண்மை ஆண்டுகளில் தேறிய பணக்குறையில் காணப்பட்ட

---

1. கடன்முகாமை பற்றி எழுந்துள்ள சிக்கல்கள் பொதுப்படுகடன் என்ற குறிப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பக்கம் 179இலிருந்து 201 வரை பார்க்கவும்.

படிப்படியான அதிகரிப்புப்போக்கு இவ்வாறு, 1971/72 ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டுள்ளதுபோலக் காணப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் பின் வரும் பிரிவில் ஆராயப்பட்டுள்ளது.

நடைமுறை நிதியாண்டாகிய 1973 இல் தேறிய பணக்குறை ரூ.1,620 இலட்சம்கொண்ட தொகையால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து,ரூ.8,740[1] இலட்சமாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மீண்டெழும் செலவினம், மூலதனச் செலவினம் "முற்பணக் கணக்குகள் கொடுப்பனவு" என்பவை முறையே ரூ. 3410 இலட்சம், ரூ 510 இலட்சம், ரூ. 460 இலட்சம் ஆகிய தொகைகளால் உயரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வருவாயில் எதிர்பார்க்கப்படும் கணிசமானளவு அதிகரிப்பாகிய ரூ. 5980 இலட்சம், இவ்வதிகரிப்புகளை மேலதிகமாக ஈடுசெய்யுமெனவும் இதன்விளைவாக தேறிய பணக்குறை 1971/72 ஆம் ஆண்டின் (18 மாத விகிதசம அடிப்படையில்) மட்டத்திலைவிட குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிமூலங்கள் தொடர்பானதும், தேறிய பணக்குறையின் விளைவுத்தாக்கம் தொடர்பானதுமான, 1968/69 இலிருந்து 1971/72 வரையுள்ள காலப்பகுதிக் குரிய தரவுகளை, 1973க்குரிய தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளு டன் அட்டவணை II (எ) 2 தருகின்றது.

1971/72 ஆம் ஆண்டின் (15 மாதங்கள்) ரூ. 129,550 இலட்சங்கொண்ட தேறிய பணக்குறையானது உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து கடனாகப் பெறப்பட்ட ரூ. 5,520 இலட்சத்தாலும், உள்நாட்டு சந்தையல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூ. 2,490 இலட்சத்தாலும், உள்நாட்டு வங்கித் துறை மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூ. 2 830 இலட்சத்தாலும் வெளிநாட்டு நிதிகளாகிய ரூ. 3,550 இலட்சங்கொண்ட தொகையாலும் நிதியீட்டஞ்செய் யப்பட்டது. தேறிய பணக்குறையினை நிரப்பிய பின்னர் உள்ள மிகைவளங் கள் ரூ. 1,440 இலட்சம்கொண்ட பண நிலுவையை ஏற்படுத்தின.

1973 ஆம் ஆண்டில், மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 8.740 இலட்சம்கொண்ட தேறிய பணக்குறை, உள்நாட்டு வங்கியல்லா சந்தை மூலங்களிடமிருந்து ரூ. 4,250 இலட்சங்களைத் திரட்டுவதன் மூலமும் இலட்சங்களை வெளிநாட்டு நிதியாக ரூ. 3,100 இலட்சத்தைப் பெறுவதன் மூலமும் நிதியீட்டம் செய்யப்படும். ரூ. 500 இலட்சம்கொண்ட தொகையை நிர்வாகக் கடன்பாடுகள் மூலம் திரட் டுவதற்கும் வங்கித்துறை மூலம்[2] ரூ. 900 இலட்சத்தைக் கடனாகப் பெறுவ தற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

1971/72 ஆம் ஆண்டுக்கான அரசாங்க நிதி நடவடிக்கைகளின் தேறிய விரிவுத்தாக்கம் ரூ. 1,390 இலட்சமாக விளங்கியது. 12 மாத விகித சம

---

1. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடுகளின்படி.
2. அட்டவணை 11 (எ) 14 ன் அடிக்குறிப்பு ஆ ஐப் பார்க்கவும். பக்கம் . 204

## அட்டவணை II (எ) 2

## தேறிய பணக்குறையை நிதியீட்டல் — 1968/69 — 1973 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்கள் | 1968/69(ஆ) | | | 1969/70 | | | 1970/71 | | | 1971/72 (தற்காலிகமான) 12 மாத காலப்பகுதி* | | | 1971/72 (தற்காலிகமான) 15 மாத காலப்பகுதி | | | 1973 அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வெளிநாட்டு நிதி | | | | | | | | | | | | | | | | |
| (அ) செயற்றிட்டக் கடன்கள் (மொத்தம்) ... | 93.9 | | | 53.3 | | | 140.1 (ஈ) | | | 93.3 | | | 116.6 (ஈ) | | | |
| கடன்கரைப்புநிதிய உதவுதொகைகளையும் திருப்பிக்கொடுப்பனவுகளையும் நீக்கி ... | 47.0 | 46.9 | | 72.5 | -19.2 | | 82.8 | 58.3 | | 95.8 | -2.5 | | 119.8 | -3.2 | | |
| (ஆ) செயற்றிட்டமல்லாக் (பண்டக்) கடன்கள் (மொத்தம்) | 312.2 | | | 229.1 | | | 169.0 | | | 325.3 | | | 406.6 | | | |
| திருப்பிக் கொடுப்பனவுகளை நீக்கி ... | 25.0 | 287.2 | | 46.5 | 182.6 | | 52.8 | 116.2 | | 98.2 | 227.1 | | 122.7 | 283.9 | | |
| (இ) நன்கொடைகள் ... | | 19.5 | 353.6 | | 62.8 | 226.2 | | 59.9 | 234.4 | | 59.7 | 284.3 | | 74.6 | 355.3 | 309.5 |
| 2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | | | 52.2 | | | 15.5 | | | 140.5 | | | 198.8 | | | 248.6 | 50.0 |
| 3. வங்கித் தொழில் முறையிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு (இ) ... | | | | | | | | | | | | | | | | |
| (அ) மத்திய வங்கி ... | | 114.9 | | | 376.4 | | | -160.9 | | | 168.2 | | | 210.2 | | |
| (ஆ) வர்த்தக வங்கிகள் ... | | -45.3 | 69.6 | | 74.1 | 450.5 | | 93.6 | 254.5 | | 58.2 | 226.4 | | 72.7 | 282.9 | 89.5 |
| 4. வங்கியல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு (இ) | | | | | | | | | | | | | | | | |
| கடன்பெற்ற மொத்தத் தொகை ... | | 286.3 | | | 362.2 | | | 591.1 | | | 577.0 | | | 721.2 | | |
| கடன்கரைப்புநிதிய உதவுதொகைகளை நீக்கி ... | | 85.3 | 201.0 | | 93.2 | 269.0 | | 107.4 | 491.7 | | 135.4 | 441.6 | | 169.3 | 551.9 | 425.1 |
| 5. பண நிலுவைகளிலும், பண்ட உதவி இணைக் கிணை நிதிகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி ... | | | | | | | | | | | | | | | | |
| (அ) பண நிலுவைகள் ... | | 62.9 | | | -30.6 | | | -3.3 | | | -87.8 | | | -109.8 | | |
| (ஆ) வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிகள் (மொத்தக் வரவுப்பதிவுகள்) ... | -318.7(உ) | | | -268.4(உ) | | | -245.6 | | | -342.6 | | | -428.2 | | | |
| வரவு செலவுத் திட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகைகள் நீக்கி ... | 367.0 | 48.3 | 111.2 | 273.4 | 5.0 | -25.6 | 372.1 | 126.4 | (ஊ) 123.1 | 315.2 | -27.4 | -115.2 | 394.0 | -34.2 | -144.0 | — |
| 6. தேறிய பணக் குறை ... | | | 787.6 | | | 935.6 | | | 1083.3 | | | 1035.8 | | | 1294.7 | 874.1 |
| 7. ஐ. அ. உதவி இணைக்கிணை நிதியின் வீழ்ச்சி | | | -0.3 | | | .. | | | 1.4 | | | — | | | — | — |
| 8. அரசாங்க நிதி இயக்கங்களின் தேறிய விரிவுத் தாக்கம் (3+5+7) ... | | 180.5 | | | | 424.9 | | | 218.1(ஊ) | | | 111.1 | | | 138.9 | 89.5 |

* விகிதசம அடிப்படையில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) சய அடையாள விடயங்கள் 1–4ஐயும் 8ஐயும் பொறுத்தவரையில் திருப்பிக் கொடுப்பனவையும், 5ஐயும் 7ஐயும் பொறுத்தவரையில் அதிகரிப்பையும் குறிக்கின்றன.

(ஆ) 1967/68 நிதியாண்டில் பொதுச் சட்டம் 480இன் கீழ்ப் பெறப்பட்ட ரூ. 289 இலட்சங்கொண்ட கடன்தொகை 1968/69 நிதியாண்டில் பெறப்பட்ட பண்ட உதவிகளாக அரசாங்கக் கணக்குகளில் வரவுவைக்கப்பட்டது. பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்படின் 1968/69 நிதியாண்டுக்குரிய நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம் ரூ. 2094 இலட்சமாக அமையும்.

(இ) இவ்வெண்தொகைகள் வங்கிகள் கொண்டிருந்த அரசாங்க இறக்குமதி (உணவு) உண்டியல்களின் பெறுமதிகளைக் கணக்கில் எடுக்கவில்லை. இவ்வெளிநின்ற உணவு உண்டியல்களின் தொகை 1969ஆம் ஆண்டு செத்தெம்பர் இறுதியில், ரூ. 924 இலட்சமாக இருந்தது. வங்கியல்லா மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டுத் துறைக்குள் இப்போது அடக்கப்பட்ட வங்கித்துறையின் வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் தவிர்த்து

(ஈ) மக்கள் சீனக்குடியரசிடமிருந்து 1970/71ல் பெறப்பட்ட பணக்கடனுகிய ரூ. 1000 இலட்சத்தையும் 1971/72ல் பெறப்பட்ட ரூ. 500 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

(உ) 1968/69 தொட்டு 1971/72 வரையிலான நிதியாண்டுகட்குரிய வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிகளின் வரவுகள், செயற்றிட்டமல்லா (பண்ட) கடன்களின் எண்தொகைகளைவிட அதிகமாகக் காணப்படுகின்றன. இதற்குரிய காரணம் பண்டங்களாகப் பெறப்பட்ட சில நன்கொடைகளும் இணைக்கிணை நிதியில் வரவு வைக்கப்பட்டமையேயாகும்.

(ஊ) 1971உக்குரிய ஆண்டறிக்கையின் 176ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

அடிப்படையாகக் குறைக்கும்போது இத்தொகை 1969/70 இலும் 1970/71 இலும் இருந்த தொகைகளைவிடக் குறிப்பிடத்தக்க அளவுகுறைவாகக் காணப் படுகின்றது. 1970/71 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், வெளிநாட்டு உதவி களின் தேறிய பெறுகைகள் ரூ. 500 இலட்சத்தால் அதிகரித்த அதேவேளை யில், உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட வளங் கள் அதேயளவு தொகையால் வீழ்ச்சியுற்றன. நிர்வாகக் கடன்பாடுகள் ரூ. 580 இலட்சத்தால் அதிகரித்த அதேவேளையில், வங்கித்துறையிலிருந்து பெறப்பட்ட கடன்பாடுகள் ரூ. 1,330 இலட்சத்தால் அதிகரித்தன. வெளி நாட்டு உதவி இணைக்கிணை நிதிகளையும் உள்ளடக்கிய பண நிலுவைகளின் அதி கரிப்பினுக்கு இடமளித்துப் பார்க்கும்போது 1971/72 (12 மாதங்கள்)இன் தேறிய விரிவுத் தாக்கம் முன்னைய ஆண்டினைவிட ரூ. 1070 இலட்சம் குறைவின தாகக் காணப்பட்டது. ஏற்கனவே கவனித்ததுபோல, நிதியாண்டின் இறுதி யில் காணப்பட்ட வழக்கத்துக்குமாறான உயர்ந்த பண நிலுவைகள், வங்கி வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்ட ஓர் தற்காலிகமான நிகழ்ச்சியாகவே கருதப் படலாம். வங்கி வேலைநிறுத்தக் காலத்தின்போது அரசாங்கத்துக்கான பெறு கைகளின் பாய்வு தடைப்பட்டமை காரணமாக, வங்கிக் கடன்பாடுகளில், குறிப்பாக திறைசேரி உண்டியல் மூலமான கடன்பாடுகளில் அதிகரிப்பு ஏற் படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டமையும், இதேபோன்ற எதிர்பாராத நிகழ்ச்சியேயாகும்.

1969/70 ஆம் ஆண்டில் மிக உயர்ந்த சாதனை மட்டமாகிய 45.4 சதவீதத் தையடைந்து, அதன்பின்னர் 1970/71ல் 20.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியுற்ற கூட்டுமொத்த தேறிய பணக்குறையின் விரிவாக்க உறுப்புவிகிதம் 1971/72இல் 20.7 சதவீதத்துக்கு மேலும் குறைக்கப்பட்டது.

1971/72 இல் அரசாங்கம் மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்பாட்டை ரூ. 2,100 இலட்சத்தால் அதிகரித்துக்கொண்டது. இது ரூ. 2,200 இலட்சம் கொண்ட இறைசேரி உண்டியல்களையும் ரூ. 400 இலட்சம் கொண்ட முற்பணங்களையும் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்புக்கள் ரூபாக் கடன்களின் திருப்பிக்கொடுப்பனவாகிய ரூ. 500 இலட்சத்தினால் ஓரளவு எதி ரீடு செய்யப்பட்டது. மறுபக்கத்தில் வர்த்தக வங்கித்துறையிடமிருந்தான அர சாங்கத்தின் கடன்பாடு ரூ. 730 இலட்சமாக விளங்கியது. இக்கடன்பாடுகள் 750 இலட்சம் கொண்ட இறைசேரி உண்டியல்களைக் கொண்டிருந்ததோடு, இத் தொகை ரூபாக்கடன் திருப்பிக் கொடுப்பனவாகிய ரூ. 20 இலட்சத்தினால் ஒர ளவு எதிரீடு செய்யப்பட்டுமிருந்தது. இந்நடவடிக்கைகளின் தேறிய விளைவு யாதெனில் வங்கித்துறைக்கான அரசாங்கத்தின் பொறுப்புக்கள் ரூ. 2,830 இலட்சத்தால் அதிகரித்தமையேயாகும். 12மாத விகித சமஅடிப்படையாகக் குறைக்கும்போது, இது முன்னைய நிதியாண்டினது அதிகரிப்பாகிய ரூ. 940 இலட்சத்தோடு ஒப்பிடுகையில் ரூ. 2,260 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகிறது. உள்நாட்டு வங்கியல்லாத மூலங்களிலிருந்து அரசாங்கத்தால் திரட்டப்பட்ட தேறிய வளங்கள் ரூ. 5,520 இலட்சமாகக் காணப்பட்டன. இது 12மாதங்கட்கான விகிதசம அடிப்படையில், 1970/71 இல் திரட்டப்பட்ட ரூ. 4,920 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், ரூ. 4,420 இலட்சமாக விளங்கியது. இவ்வறிக்கையின் பின்பகுதியில் வரும் பிரிவுகளில் அரசாங்கக் கடன் ஒழுங்குத் திட்டத்தின் விரிவான பகுப்பாய்வு தரப்பட்டுள்ளது.

வங்கியல்லா முதலீட்டாளர் தொகுதிகளின் கடந்த நான்கு நிதியாண்டுகளுக்கான தேறிய உதவு தொகைகளை (அதாவது அரசாங்கப் பிணை உடைமை மாற்றங்களை) அட்டவணை 11 (எ) 3 தருகின்றது.

### அட்டவணை II (எ) 3

### அரசாங்கப் பிணைகளுக்கான(அ) வங்கியல்லா முதலீட்டு தொகுதிகளின் உதவு தொகைகள்

ப. இ. ரூ.

| உதவுநர்கள் | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 12* மாதங்கள் | 1971/72 15 மாதங்கள் | அதிகரிப்பு 1969/70 இலும் மேலாக 1970/71 | அதிகரிப்பு 1970/71 இலும் மேலாக 1971/72 (12 மாதங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு நிறுவனங்கள் ... | 0.6 | 11.0 | 180.7 | 93.8 | 117.3 | 169.7 | – 86.9 |
| 2. ஊழியர் சேமநிதி ... | 101.6 | 98.0 | 143.0 | 164.2 | 205.3 | 45.0 | 21.2 |
| 3 ஏனைய சேம, இளைப்பாறற் சம்பள நிதிகள் | 28.6 | 46.1 | 44.5 | 47.7 | 59.6 | – 1.6 | 3.2 |
| 4. திணைக்கள, ஏனைய அலுவலக நிதிகள் ... | 3.7 | 5.4 | 6.9 | 41.7 | 52.1 | 1.5 | 34.8 |
| 5. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 42.4 | 45.5 | 60.7 | 55.2 | 69.0 | 15.2 | – 5.5 |
| 6. ஏனைய காப்புறுதி நிதியங்கள் ... | 3.5 | 8.8 | – 1.8 | – 9.7 | – 12.1 | – 10.6 | – 7.9 |
| 7. ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | — | – 0.7 | — | – 0.7 | — | 0.7 | — |
| 8. கூட்டுநிலையங்களும், சங்கங்களும், நிறுவனங்களும் ... | 5.6 | 5.6 | 5.6 | – 13.6 | 17.0 | — | 8.0 |
| 9. தனியாட்கள் .. | – 3.2 | 10.5 | 2.5 | – 19 | – 2.4 | – 8.0 | – 4.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* விகித சம அடிப்படையில்

(அ) இவ்வட்டவணையில் தரப்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்கும் ரூபாப் பிணைகள், இறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குப் பத்திரங்கள் முதலியவற்றின் தேறிய மாற்றத்தைக் காட்டும்.

1971/72 ஆம் ஆண்டின் வங்கியல்லா முதலீட்டாளர் தொகுதியின் தேறிய உதவுதொகைகளிற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு, திணைக்கள, ஏனைய அலுவலக நிதியங்கள், ஊழியர் சேம நிதியம் என்பவற்றின் மூலமே ஏற்பட்டது. முன்னைய ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பினைப் பதிவு செய்த அரசாங்கச் சேமிப்பு நிறுவனங்களினது உதவுதொகைகள் (அதாவது தேசிய சேமிப்பு வங்கி) ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 870 இலட்சங்கொண்ட கூரிய வீழ்ச்சியைப் பதிவு செய்தன. கூட்டு நிலையங்களினதும், களரிகளினதும் நிறுவனங்களினதும் உதவுதொகைகள் அளவில் சிறிதாக இருந்தபோதும் 1971/72ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன.

1971/72 இல் உள்நாட்டு வங்கியல்லா சந்தைக் கடன்பாடுகள் ரூ.2,470 இலட்சமாக அமைந்து, அண்மைக் காலங்களைவிடப் பெருமளவுக்கு (19 சதவீதத்துக்கு) பணக் குறையை நிதியீட்ட உதவியது. இவ்வதிகரிப்பு ரூ. 2,540 இலட்சங்கொண்ட வைப்புக்களின் அதிகரிப்பினை நிருவாகக் கடன்பாடுகளின் ரூ. 50 இலட்சங்கொண்ட திருப்பிக்கொடுப்பனவுகள் எதிரீடு செய்தமையால் ஏற்பட்டது.

## அட்டவணை II (எ) 4

## வெளிநாட்டு உதவிகளின் தேறிய வரவுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகையும் மூலமும் | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 (தற்காலிகமானவை) 12 மாதங்கள் | 1971/72 (தற்காலிகமானவை) 15 மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1. கடன்கள்** | **76.5** | **189.3** | **161.2** | **334.1** | **202.8** அ | **220.6** அ | **293.6** | **367.0** அ |
| 1.01 ஆ. அ. வ. ... | — | — | — | — | — | 9.2 | 17.9 | 22.4 |
| 1.02 ப. பு. அ. வ. ... | -1.2 | -0.3 | -7.7 | -8.4 | -9.3 | -7.7 | -10.4 | -13.0 |
| 1.03 ப. அ. ச. ... | — | — | — | — | 4.7 | 20.1 | 17.2 | 21.5 |
| 1.04 கனடா ... | 2.5 | 8.1 | 8.6 | 8.5 | 6.0 | 7.5 | 17.7 | 22.0 |
| 1.05 மக்கள் சீனக் குடியரசு ... | 9.7 | -4.9 | -5.5 | -5.5 | 4.8 | 137.7 | 66.1 | 82.6 |
| 1.06 ஐ. இ. ... | 10.6 | 49.4 | 51.9 | 37.0 | 38.2 | 11.4 | 32.2 | 40.2 |
| 1.07 ஐ. அ. நா. ... | 23.8 | 31.0 | 45.6 | 177.9 | 49.8 | 34.4 | 102.0 | 127.5 |
| 1.08 ஐ. சோ. ச. கு. ... | 9.3 | -10.0 | -8.3 | -9.6 | -9.2 | -7.1 | -7.2 | -9.3 |
| 1.09 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு ... | 6.7 | 66.2 | 25.0 | 17.4 | 29.0 | 1.5 | 9.5 | 11.9 |
| 1.10 யூகோசிலேவியா ... | 0.8 | -1.4 | -0.7 | -0.8 | -0.4 | -1.3 | -0.2 | -0.3 |
| 1.11 போலாந்து ... | 0.1 | 0.1 | 1.4 | -0.6 | -0.9 | -0.9 | -1.3 | -1.6 |
| 1.12 பிரான்சு ... | 1.6 | 10.8 | 22.0 | 1.6 | 10.2 | 1.5 | 7.7 | 9.6 |
| 1.13 யப்பான் ... | 10.0 | 31.3 | 24.0 | 18.3 | 13.7 | 8.2 | 50.5 | 63.1 |
| 1.14 இந்தியா .. | 2.6 | 8.0 | -3.4 | 16.9 | 23.6 | 4.7 | 9.1 | 11.4 |
| 1.15 சேர்மன் சனநாயகக் குடியரசு ... | — | 1.1 | 8.3 | 79.6 | 28.3 | -9.2 | -18.7 | -23.4 |
| 1.16 தென்மாக்கு ... | — | — | — | 1.6 | 8.0 | 3.4 | 4.0 | 5.0 |
| 1.17 இத்தாலி ... | — | — | — | — | 6.3 | 7.2 | -2.3 | -2.9 |
| **2. நன்கொடைகள்** ... | **41.5** | **19.2** | **29.0** | **19.5** | **62.8** | **59.9** | **59.7** | **74.6** |
| 2.01 கொழும்புத் திட்டம் ... | 25.9 | 17.5 | 22.1 | 1.4 | 26.2 | 24.1 | 19.7 | 24.6 |
| 2.01.1 அவுத்திரேலியா ... | 0.3 | 4.6 | — | 0.1 | 4.8 | 6.0 | 5.7 | 7.1 |
| 2.01.2 கனடா ... | 25.6 | 12.8 | 22.1 | — | 18.7 | 18 1 | 14.0 | 17.5 |
| 2.01.3 யப்பான் ... | — | — | — | — | 2.7 | — | — | — |
| 2.01.4 நியூசிலாந்து ... | — | 0.1 | ... | 1.3 | — | — | — | — |
| 2.02 ஏனைய ... | 15.6 | 1.7 | 6.8 | 18.2 | 36.6 | 35.7 | 40.0 | 50.0 |
| 2.02.1 ஐக்கிய நாடுகள் ... | 1.0 | 1.5 | 6.3 | 3.1 | 2.0 | 5.0 | 3.1 | 3.9 |
| 2.02.2 மக்கள் சீனக் குடியரசு ... | 2.5 | — | ... | ... | 4.7 | 7.9 | 11.5 | 13.8 |
| 2.02.3 ஐ. அ. நா. ... | 12.1 | 0.2 | 0.5 | 0.8 | 6.6 | 4.8 | 14.5 | 18.1 |
| 2.02.4 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு .. | — | — | — | — | 9.7 | 5.7 | 0.6 | 0.7 |
| 2.02.5 செக்கோசெலவாக்கியா ... | — | ... | — | — | — | — | — | — |
| 2.02.6 ஐக்கியஇராச்சியம் ... | — | ... | ... | 14.3 | 13.6 | 9.4 | 4.8 | 6.0 |
| 2.02.7 சேர்மன் சனநாயகக் குடியரசு | — | — | — | — | — | — | 0.6 | 0.8 |
| 2.02.8 பிரான்சு .. | — | — | — | — | — | — | 5.4 | 6.7 |
| **3. மொத்தக் கடன்களும் நன்கொடைகளும்** ... | **118.0** | **208.6** | **190.2** | **353.6** | **265.6** | **280.5** | **353.3** | **441.6** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) இந்த மொத்தக் கடன்களின் எண்தொகைகள் பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 31இன்தொடர்பான எண்தொகைகளுடன் ஒத்திருக்காது. ஏனெனில் முறையே 1969/70, 1970/71, 1971/72 ஆண்டுகளின் வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகளுக்குக் கையளிக்கப்படவேண்டிய வெ. செ. உ. சா. தொகையான ரூ. 392 இலட்சம், ரூ. 461 இலட்சம், ரூ. 862 இலட்சம் என்பவை இவ்வட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்படாமையேயாகும்.

* விகிதசம அடிப்படையில்

1971/72 நிதியாண்டில் (15 மாதங்கள்) நிதி நடவடிக்கைகளை நிறைவேற்று வதற்காக அரசாங்கத்துக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த வெளி நாட்டு நிதி ரூ. 5,980 இலட்சமாகும். இத்தொகை ரூ. 1,170 இலட்சங்கொண்ட செயற்றிட்டக்கடன்களையும், ரூ. 4,070 இலட்சங்கொண்ட செயற்றிட்டமல்லா (பண்டம்) கடன்களையும், ரூ. 750 இலட்சங்கொண்ட கொடைகளையும் உள்ள டக்கியுள்ளது. கடன்கரைப்பு நிதியங்களுக்கான உதவு தொகைகளையும் திருப் பிக் கொடுப்பனவுகளையும் தவிர்த்து மிகுதியான வெளிநாட்டுநிதி ரூ. 3,550 இலட்சமேயாகும். 12மாத விகிதசம அடிப்படையில், இது முன்னைய நிதியாண் டின் ரூ. 2,340 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,840 இலட்சமாகவிருக்கும். செயற்றிட்டக் கடன்களைப் பொறுத்தவரையில், ரூ. 30 இலட்சங்கொண்ட திருப்பிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மக்கள் சீனக்குடியரசிடமிருந் தான ரூ. 500 இலட்சங் கொண்ட பெறுகைகளையும் இது உள்ளடக்கும். எவ் வாறுயினும், திருப்பிக்கொடுப்பனவுகள் தவிர்ந்த செயற்றிட்டமல்லா (பண்டம்) கடன்களின் பெறுகை ரூ. 2,840 இலட்சமாக விளங்கியது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, கடன்நிதியானது வெளிநாட்டு நிதியிற் பெரும்பங்கினை வகித்தது. 1971/72 இல் பெறப்பட்ட மொத்தக் கொடைகள், ரூ. 750 இலட்சமாக அமைந்து, இவ்வாண்டில் பெறப்பட்ட மொத்த வெளி நாட்டு நிதியில் 13 சதவீதத்துக்கு வகைகூறியது. விகிதசமஅடிப்படையில் ரூ. 2,270 இலட்சமாக விளங்கிய செயற்றிட்டமல்லா (பண்டம்)க் கடன்களின் தொகை, ரூ. 1,110 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. ஒப்புநோக் குகையில் இக்கடன்கள் 1970/71 இல், முன்னைய நிதியாண்டைவிட ரூ. 660 இலட்சங்கொண்ட தொகையால் வீழ்ச்சியுற்றிருந்தன. செயற்றிட்டமல்லா (பண்டம்) கடன்கள் 1971/72இல் ஏற்பட்ட தேறிய பணக்குறையின் 22 சத வீதத்தை நிதியீட்ட உதவின. மாறாக, இக்கடன்கள் சென்ற நிதியாண்டில் இப்பணக் குறையின் 11சதவீதத்தை ஈடுசெய்ய உதவின.

கடந்த ஏழு ஆண்டுகளிற் பெறப்பட்ட வெளிநாட்டு உதவியின் தேறிய பெறுகைகள் பற்றிய விவரங்கள், அவற்றின் வகைகளின்படியும் அவற்றின் மூலங்களின் படியும் கீழேயுள்ள அட்டவணை 11 (எ) 4 இற் தரப்பட்டுள்ளன.

## 3. தேறிய உணவு உதவிப்பணம்

வருவாய், செலவின மதிப்பீடுகளைக் காட்டும் முறையைப் புதிய பொரு ளாதார, தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கேற்ப அமையும் பொருட்டுச் சென்ற நிதியாண்டைப் போலவே, 1973 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்கத்தின் வருவாய், செலவின மதிப்பீடுகளும் உண்மை உணவு உதவிப்பணச் செலவை (அதாவது, மொத்த உணவு உதவிப் பணத்தை) ஒரு செலவு விடயமாகவும், உணவுப் பொருள் விற்பனை மூலம் கிடைத்த இலாபத்தை வருவாய் விடயமாக வும் காட்டுகின்றன. அரசாங்கத்தின் பங்கீட்டு அரிசி வழங்கலையொட்டிய தேறிய கொடுப்பனவையும் அரிசி, வெங்காயம்,[1] மிளகாய் என்பன உற்பத்தி

---

1. வெங்காயம் இறக்குமதி செய்வதைத் தடுத்ததையடுத்து, இவ்விடயத்தையொட்டிய உற்பத்தியாளருக் குரிய உதவிப்பணம் 1971/72 இல் வழங்கவேண்டிய நிலை ஏற்படவில்லை.

செய்பவர்களுக்கு வழங்கப்படும் உத்தரவாத விலைகள் வடிவிலான உற்பத்தியாளர் உதவிப் பணத்தையும் சேர்த்த தொகையிலிருந்து, உணவுப் பொருள் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபத்தை அதாவது, முக்கியமாக சீனியை இறக்குமதி செய்து விற்பனை செய்வதனூற் கிடைக்கும் இலாபத்தைக் கழிக்க வரும் தொகையே அரசாங்கத்தின் தேறிய உணவு உதவிப் பணமாகும். தேறிய உணவு உதவிப் பணத்தைக் கணிக்கையில், அரிசி, சீனி, கோதுமை மா என்பனவற்றின் வழங்கற் செலவுகளும் ஏனைய கட்டணங்களும் கணக்கிலெடுக்கப் பட்டுள்ளன[1]. ஏனைய உணவுப் பொருட்களாகிய கோதுமை மா, பருப்பு, வெங்காயம், மாசிக் கருவாடு ஆகியவற்றை இறக்குமதி செய்வதில் அல்லது விற்பனை செய்வதில் ஏற்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்கள் எந்தவோ ராண்டிலும் மொத்த உணவு உதவிப் பணத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது உணவுப் பொருள் விற்பனையில் ஏற்பட்ட இலாபங்களின் ஒரு பகுதியாகவோ ஏற்ற முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. 1971/72 இனதும் 1973 இனதும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன், கடந்த மூன்று நிதியாண்டுகளுக்கான மொத்த உணவு உதவிப் பணம். உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபம் என்பனவற்றினை அட்டவணை 11 (எ) 5 காட்டுகின்றது. ஒவ்வோர் ஆண்டுகளுக்குமான தேறிய உணவு உதவிப் பணத்தையும் இவ்வட்டவணை காட்டுகின்றது.

(அ) மொத்த உணவு உதவிப் பணம்

1971/72 இல் (தற்காலிகமானவை) மொத்த உணவு உதவிப்பணம் ரூபா 8,210 இலட்சமாக விளங்கியது. இதனை 12 மாத விகிதசம அடிப்படையிற் கணிக்கில் ரூ. 6,570 இலட்சமாகவிருக்கும். இறுதியிற் குறிக்கப்பட்ட தொகை 1970/71 ஐ விட ரூ. 440 இலட்சம் (அல்லது 7 சதவீதம்) அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டினைவிட 1970/71 இல் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ.390 இலட்சம் (அல்லது 7 சதவீதம்) ஆகும். இவ்வதிகரிப்பு அரிசி உதவிப்பணத்தில் ஏற்பட்ட ரூ. 500 இலட்ச அதிகரிப்பினாலேயே முக்கியமாக ஏற்பட்டது. பருப்பிற்கு வழங்கப்பட்ட உதவிப் பணம் ரூ. 50 இலட்சத்தாலும், சின்ன வெங்காயத்திற்கு வழங்கப்பட்ட உதவிப் பணம் ரூ. 10 இலட்சத்தாலும், சின்ன வெங்காயத்திற்கு (உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டதும் வெளிநாட்டிற் கொள்வனவு செய்யப்பட்டதும்) வழங்கப்பட்ட தொகை ரூபா 20 இலட்சத்தாலும் குறைவடைந்து அரிசி உதவிப்பண அதிகரிப்பை ஓரளவு எதிரீடு செய்தன. கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுக்குப் பதிலாக ஒப்படைக்கப்பட்ட பங்கீட்டுப் புத்தக அரிசியின் பெறுமதியும் உதவிப்பணத்தை ரூ.30 இலட்சத்தாற் குறைத்தது. 1970/71இல் பங்கீட்டுப் புத்தகங்கள் ஊடாக வழங்கப்பட்ட அரிசி 3,45,000 லோங் தொன்களால் அதிகரிக்க, இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினதும், உள்ளூர்

1. மூன்று பண்டங்களையொட்டிய கட்டணங்கள் 1971/72இற்கு முன் அரிசி என்ற துறைக்குள்ளேயே அடக்கப்பட்டன.

## அட்டவணை II (எ) 5

## தேறிய உணவு உதவிப் பணம் 1969/70—1973

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1969/70 | 1970/71 | 1971/72 அங்கீகரிக்கப் பட்ட மதிப் பீடுகள் | 1971/72 தற்காலிகமானவை | | 1973 அங்கீகரிக்கப் பட்ட மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | 15 மாதங்கள் | 13 மாதங்கள் | 12 மாதங்கள்* | |
| **I. மொத்த உணவு உதவிப்பணம்** | | | | | | |
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீது நுகர்வோர்களுக்கான உதவிப் பணம் ... | 254.1 | | | | | |
| 2. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீது உற்பத்தியாளர்க்கும், நுகர்வோர்க்கும் வழங்கிய உதவிப் பணம் 1 ... | 251.5 | 555.2 | 747.1 | 666.5 | 533.2 | 528.9 |
| கூட்டுக: வழங் கற்செலவுகளையும், ஏனைய கட்டணங்களையும் 2 ... | 48.5 | 48.8 | 60.6 | 57.6 | 46.1 | 53.6 |
| 3. பின்வருவனவற்றின் மீதான உதவிப் பணம் | | | | | | |
| (அ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் ... | 4.6 | 3.5 | 9.0 | — | — | — |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய் ... | — | — | — | 9.1 | 7.3 | — |
| (இ) குழந்தைகள் பாலுணவு ... | — | — | — | 3.0 | 2.4 | — |
| 4. பின்வருவனவற்றின் விற்பனையில் ஏற்பட்ட நட்டங்கள் | | | | | | |
| (அ) பருப்பு ... | 12.0 | 6.9 | 6.5 | 15.9 | 12.7 | 13.4 |
| (ஆ) வெங்காயம் ... | 2.0 | — 0.2 | 0.1 | — | | |
| (இ) கோதுமை மா வழங்கற் செலவையும் உள்ளடக்கி ... | — | — | — | 68.5 | 54.8 | 110.7 |
| 5. கடன் திருப்பலுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களால் ஒப்படைக்கப்பட்ட அரிசிக் கூப்பன்களின் பெறுமதி .. | 3.1 | — | — | — | — | — |
| 6. கழிக்க: பல்வகை வருவாய்கள் ... | 2.0 | 2.1 | 0.5 | — | — | 0.5 |
| 7. மொத்த உணவு உதவிப் பணம் ... | 573.8 | 612.3 | 822.8 | 820.6 | 656.5 | 706.1 |
| **II. உணவுப் பொருட்களின் விற்பனவிலிருந்து பெற்ற இலாபங்கள்** | | | | | | |
| 1. சீனி (வழங்கற் செலவு என்பவை தவிர்த்து) 3 ... | 221.1 | 63.5 | 128.4 | 52.3 | 41.8 | 102.8 |
| 2. கோதுமை மா (வழங்கீற் செலவு என்பவை தவிர்த்து) ... | 17.9 | 5.1 | 0.5 | — | — | — |
| 3. மாலைதீவுக் கருவாடு ... | 4.1 | 8.0 | 5.1 | 1.6 | 1.3 | — |
| கூட்டு: அரிசி உதவிப்பண வரி ... | 3.5 | 2.7 | — | — | | — |
| 4. இலாபங்கள் ... | 246.6 | 79.5** | 134.0 | 53.9 | 43.1 | 102.8 |
| **III. தேறிய உணவு உதவிப் பணம்** ... | 327.2 | 532.8 | 688.8 | 766.7 | 613.4 | 603.2 |

மூலம்: உணவு ஆணையாளர்

* விகிதசத அடிப்படையில்.

** வெங்காய விற்பனையிலிருந்து கிடைத்த ரூ. 2 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

1 1969/70 ஆம் ஆண்டின்பின் வழங்கிய முதலாவது, இரண்டாவது (இறக்குமதி செய்யப்பட்டதும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுமான அரிசி) படி அரிசியின் சரியான மதிப்பீட்டினைத் தருதல் சாத்தியமற்றதாகும். இதனால் 1 ஆம் 2 ஆம் விடயங்கள் இந்த இரண்டு ஆண்டுகட்கும் மதிப்பிடப்படவில்லை.

2 1971/72 ஆண்டுக்கு முன்னர் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வழங்கற் கட்டணங்கள் தொடர்பான செலவுகள், அரிசி, சீனி, கோதுமை மா எனும் 3 பண்டங்களினதும் மொத்தச் செலவைக் காட்டுகின்றன. காரணம் இச்செலவுகளின் விபரங்கள் கிடைக்காமையேயாகும். 1971/72 ற்குரிய இச்செலவுகள் ஒவ்வொரு பண்டத்துக்குமாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

3 சீனியின் இறக்குமதி மீதான வெ. சா. உ. சா. கொடுப்பனவின் விளைவைப் பின்வருமாறு உள்ளடக்குகின்றது:

1970/71: ரூ. 1350 இலட்சம்
1971/72: ரூ. 1540 இலட்சம்
1973; ரூ. 1490 இலட்சம்.

அரிசியினதும் கொள்வனவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ரூ. 1,30,000 தொன்களாகவும், 2,39,000 தொன்களாகவும் முறையே விளங்கின. பங்கீட்டு முறையின் கீழ் அரிசி வழங்கலிலேற்பட்ட அதிகரிப்புக்கு 1970 செத்தெம்பர் 26 தொடக்கம் மேலதிகமாக ஒரு கொத்தரிசியை, படி 75 சதப்படி வழங்குவதென்ற அரசாங்கத்தின் முடிவே காரணமாகும். இம்முறை கடைப்பிடிக்கப்பட்ட நிலையிலும் அரிசிக்கு வழங்கப்பட்ட உதவிப் பணத்தின் அதிகரிப்பு ரூ. 500 இலட்சம் மட்டுமேயாகும். இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி இறக்குமதி விலை லோங் தொன்னொன்றுக்கு ரூ. 780/- இலிருந்து ரூ 655/- ஆக வீழ்ச்சியுற்றதே இதற்கு முழுமைக் காரணமாகும். எனவே, இவ்விலை வீழ்ச்சியின் தாக்கம், பங்கீட்டு முறையின் ஊடாக அரிசியின் மொத்த வழங்கலிலேற்பட்ட அதிகரிப்பை மேலதிக எதிரீடு செய்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீது வழங்கப்படும் கூறொன்றிற்கான உதவிப் பணம் உள்ளூர் அரிசிக்கு வழங்கப்பட்ட அவ்வுதவிப் பணத்திலும் பார்க்கக் குறைவுடையதாகவே இருந்ததென்பது இங்கு அவதானிக்கத்தக்கது. பங்கீட்டு முறையின் ஊடாக வழங்கப்பட்ட அரிசியின் அளவு அதிகரித்த போதும் தாமதக் கட்டணச் செலவுகளை வெற்றிகரமாத் தவிர்த்தமை வழங்கற் செலவுகளையும் ஏனைய கட்டணங்களையும் சென்றாண்டிலிருந்த மட்டத்திலேயே வைத்திருக்கத் துணை புரிந்தது.

1971/72இல் (12 மாதங்களில்) மொத்த உணவு உதவிப் பணம் ரூ. 440 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்தது. அரிசிக்கு வழங்கப்பட்ட உதவிப் பணம் ரூ. 220 இலட்சத்தாற் குறைக்கப்பட்ட நிலையிலும் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. பல்லாண்டுக் காலப் பிரிவில் இவ்வாண்டிற்றான் முதன்முறையாக மாவின் விற்பனை நட்டத்தை அடைந்து, மொத்த உணவு உதவிப் பணத்தைக் கணிசமானளவு அதிகரித்தது. அண்மைக் காலங்களில் மாவின் விற்பனை இலாபங்களில் வீழ்ச்சிப் போக்கு ஏற்பட்டதற்கு, கோதுமை[1] கோதுமை மா ஆகியவற்றின் இறக்கற் செலவுகளின் செலவுப் போக்குக்கேற்ற முறையில்[2] விற்பனை விலை சீராக்கஞ் செய்யப்படாததே முக்கிய காரணமாய் விளங்கியது. இதன்விளைவாக, 1971/72இல் இதுவரை வீழ்ச்சியுற்று வந்த இலாபங்கள் ரூபா 600 இலட்சங்கொண்ட நட்டமாக மாற்றப்பட்டன. இப்பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட இலாபங்களிலிருந்து வழங்கற் செலவுகளைக் கழிக்கும் வழமை 1971/72 இல் மேற்கொள்ளப்பட்டமை இந்நட்டங்கள் ஏற்படக் காரணமாயின[3]. ஆனால் இங்கு வலியுறுத்த வேண்டிய உண்மை யாதெனில் இச்செலவுகள் தவிர்க்கப்பட்ட நிலையிலும் இவ்விடயங்கள் ரூ 360 இலட்சங்கொண்ட நட்டத்தைப் பதிவுசெய்தேயிருக்கும். 1971/72 இற் கோதுமை மாவின் சராசரி இறக்கற்செலவும் லோங் தொன் ஒன்றிற்கு ரூ. 722/— இல் இருந்து ரூ. 735/- ஆக அதிகரித்தது. இந்த உயர்ந்த இறக்கற்செலவு, மாவின்

---

1. இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை, அரசி மா அரைத்தற் கூட்டுத்தாபனத்தால் உள்ளூரில் அரைக்கப்பட்டது.
2. அண்மையில் 1973, சனவரியில் மாவின் இருத்தல் ஒன்றுக்கான விலை 38 சதவீதமாகக் கூட்டப்படுவதற்கு முன்னர், 1967இல் இருத்தல் ஒன்றுக்கான விலை 33 சதமாகக் கடைசி முறையாகத் திருத்தியமைக்கப்பட்டிருந்தது.
3. உணவு ஆணையாளரினாற் கையாளப்பட்ட எல்லாப் பண்டங்களினதும் விற்பனையின் பேரிலான வழங்கற் செலவுகள், 1970/71 வரை, அரிசியின் பேரிலேயே பதிவு செய்யப்பட்டன.

நுகர்வு 30,000 தொன்களால் வீழ்ச்சியுற்ற நிலையிலும் மாவுக்கான உதவிப் பணத்தை அதிகரித்தது. இதற்கு மாறாக, அரிசிக்கான உதவிப் பணம் 1971/72 இல் ரூ. 220 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இரண்டாம்படி அரிசியின் விலையை 25 சதத்தில் இருந்து ஒரு ரூபாய்க்கு உயர்த்துவததென்ற முடிவினதும், இதன் விளைவாகப் பங்கீட்டு முறையின் ஊடாக எடுக்கப்படும் இரண்டாம் படி அரிசி 1,06,000 லோங் தொன்களால் குறைக்கப்பட்டமையினதும் கூட்டு விளைவே இதுவாகும். உள்ளூர் அரிசிக்கொள்வனவு 54,000 தொன்களாற் குறைக்கப்பட்டமையும், இறக்குமதி அரிசியின் சராசரி இறக்கற்செலவு லோங் தொன்னொன்றுக்கு, ரூ. 655இல் இருந்து ரூ. 581 ஆகக் குறைக்கப்பட்டமையும் அரிசிக்காக வழங்கப்பட்ட உதவிப் பணத்தின் குறைப்பிற்குக் காரணமாயிருந்தன. இதேவேளையில் சின்னவெங்காயத்தின் இறக்குமதி தடைசெய்யப்பட்டதையடுத்து, உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட வெங்காயத்திற்கான உதவிப்பணம் நீக்கப்பட்டது. இதேவேளையில், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய், உத்தரவாத விலைத்திட்டத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டதையடுத்து, இதற்கு ரூ. 70 இலட்சம் உதவிப்பணம் வழங்கப்பட்டது ஏனைய உணவு பொருட்களான பருப்பு, குழந்தைகளின் பாலுணவு ஆகியவற்றின் விற்பனைகளிலேற்பட்ட நட்டங்கள் முறையே ரூ. 60 இலட்சம் ரூ. 20 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இறுதியிற் குறிக்கப்பட்ட விடயத்தின் விற்பனை முதன்முறையாக உணவு ஆணையாளராற் செய்யப்பட்டது.

1973ஆம் ஆண்டில் மொத்த உணவு உதவிப் பணத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள், முன்னைய நிதியாண்டின் (12 மாதங்கள்) உதவிப் பணத்தைவிட, ரூ. 500 இலட்சம் அல்லது 8 சதவீத அதிகரிப்புக்கு இடமளித்துள்ளன. கோதுமை மா மீதான உதவிப் பணம் ரூ. 560 இலட்சத்தாலும், வழங்கற் செலவுகள் ரூ. 80 இலட்சத்தாலும் அதிகரிக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளையில் அரிசி மீதான உதவிப் பணம் ரூ. 40 இலட்சத்தாற் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கோதுமை மா மீதான உதவிப் பணத்தின் அதிகரிப்பு அதன் சராசரி இறக்கற் செலவு லோங் தொன்னொன்றுக்கு ரூ. 735/- இலிருந்து ரூ 962/- ஆக அதிகரிக்குமென எதிர்பார்ப்பதனாலாகும். இம்மதிப்பீடுகள், அங்கீகரிக்கப்பட்ட வேளையில் நிலவிவந்த சில்லறை விலைகளின்படி இது கொழும்பிலுள்ள நுகர்வோருக்குத் தொன்னொன்றுக்கு ரூ. 253 கொண்ட உதவிப் பணத்தையும், வெளியூர்களில்[1] உள்ள நுகர்வோருக்கு, தொன்னொன்றுக்கு ரூ. 231 கொண்ட உதவிப் பணத்தையும் வழங்குகிறது. வரி செலுத்துவோருக்கும் அவரில் தங்கியுள்ளோருக்கும் வழங்கப்படும் இலவச அரிசிக் கொடுப்பனவை நிறுத்துவதற்கான எடுத்துரைப்பு மூலம், உணவு உதவிப்பணம் ரூ. 250 இலட்சத்தால் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், 1971/72ஆம் (12 மாதங்கள்) ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீதான உதவிப்பணத்தில் ஏற்படும் குறைப்பு ரூ. 40 இலட்சமாக மட்டுமே இருக்குமென எதிர்பார்க்கின்றது. அரிசியின்

---

1. 1973 சனவரி தொடக்கம் கோதுமை மாவிற்கான சில்லறை விற்பனை விலை இரு. 38 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்கற் செலவு தொன்னென்றுக்கு ரூ. 581 இலிருந்து ரூ. 722 ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதே இதற்குப் பெருமளவு காரணமாகும். மேலும், உள்ளூர் அரிசிக் கொள்வனவு (இதன் கூறென்றுக்கான உதவிப் பணம் அதிகமானதாகும்) 1,40,000 லோங் தொன்களால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பங்கீட்டு முறை அரிசியின் நுகர்வு 70,000 தொன்களாற் குறைவடையுமென எதிர்பார்க்கப்படும் அதே வேளையில் கோதுமை மாவின் நுகர்வு பெருமளவுக்கு அதற்கு ஈடாக 68,900 தொன்களால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

(ஆ) உணவுப் பொருட் ளின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள்

1971/72 இல் (12 மாதங்கள்) அத்தியாவசிய உணப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் ரூ. 360 இலட்சம் அல்லது 45 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 1970/71 இலும் இத்தகைய இலாபங்களில் முந்திய ஆண்டிலும் பார்க்க ரூ. 1,670 இலட்சம் அல்லது 68 சதவீதங் கொண்ட கூரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

1970/71 இல் உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களில் ஏற்பட்ட ரூ. 1,670 இலட்சங்கொண்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக, சீனி இறக்குமதியை வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின் கீழ் உட்படுத்தியமையே காரணமாகும். இதன் விளைவாக, சீனியின் விலை ரூ. 1,350 இலட்சத்தால் அதிகரித்தது. அத்துடன் சீனியின் இறக்கற் செலவும் லோங் தொன்னென்று ரூ. 727 இலிருந்து ரூ. 1,003 ஆக அதிகரித்தது. மா விற்பனவிலிருந்து பெற்ற இலாபங்கள் ரூ. 130 இலட்சத்தாற் குறைவுற்றன. இதற்கு இறக்குமதி விலை லோங் தொன்னென்று ரூ. 685 இலிருந்து ரூ. 713 ஆக அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும். மா நுகர்வினை, 57,000 தொன்களாற் கணிசமானளவிற்குக் குறைத்தமையும் இலாபங்களிலேற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணமாகும். இதேவேளையில் மாசிக் கருவாடு விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் ரூ. 40 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டின.

1971/72இல் உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களின் வீழ்ச்சிக்கு சீனியின் இறக்கற் செலவு லோங் தொன்னென்று ரூ. 552 ஆல் ரூ. 1,980உக்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். சீனிக்கு இருமுறை விலை அமைப்பு, புகுத்த எண்ணிய அரசாங்கத் தீர்மானத்தின் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட அதிக இலாபங்களைவிட, விலைகள் மேலதிகமாக விளங்கின. இத்திட்டத்தின்கீழ் இருத்தலொன்று 72 சதப்படி மாதமொன்றில் ஓராளுக்கு 3 இருத்தல்கள் வழங்கப்பட்டன. கூப்பன் இல்லாது விற்கப்பட்ட சீனி, இருத்தலொன்று ரூ. 1.50 ஆக விற்பனை செய்யப்பட்டது.[1] ஆயினும், 1972 மாச்சு தொடக்கம், ஒரு மாதம் ஓராளுக்குப் பங்கீடு செய்யப்பட்ட சீனி 2 இருத்தல்

1, கூப்பன் இல்லாது விற்கப்பட்ட வெள்ளைச் சீனியின் விலை 1972-. 11. 11இலிருந்து இருத்தலொன்று ரூ. 2.50ஆக அதிகரித்து பின் 1972.12.18இலிருந்து இருத்தலொன்று ரூ. 2.00 ஆகக் குறைக்கப்பட்டது.

களாகக் குறைக்கப்பட்டது. மாசிக் கருவாடு விற்பனவின் இலாபங்களிலேற்பட்ட ரூ. 70 இலட்சம்கொண்ட வீழ்ச்சியும் உணவுப் பொருட்களின் (அத்தியாவசிய) விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

சீனி விற்பனையிலிருந்து பெறும் இலாபங்கள் ரூ. 610 இலட்சத்தால் அதிகரிக்குமென 1973இன்[1] அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் எதிர்பார்க்கின்றன. கூப்பன் இல்லாது விற்கப்படும் வெள்ளைச்சீனி விலையை இருத்தலொன்று ரூ. 1.50இலிருந்து, ரூ. 2.50ஆக அதிகரிப்பதனுல் இவ்விலாபம் பெறப்படல் வேண்டும்.[1] வெ. செ. உ. சா. வீதத்தை 10 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக, சீனியின் கொள்வனவுச் செலவிலேற்படும் அதிகரிப்பினுல், விலை அதிகரிப்பிலிருந்து பெறப்படும் இவ்விலாப அதிகரிப்புக்களின் ஒரு பகுதி குறைக்கப்படவிருக்கிறது.

### (இ) தேறிய உணவு உதவிப்பணம்

1971/72 ல் (12 மாதங்கள்) தேறிய உணவு உதவிப்பணம் (அதாவது மொத்த உணவுப் பணத்திலிருந்து உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களை கழித்த தொகை) சென்ருண்டின் ரூ. 2,060 இலட்சம் (அல்லது 63 சதவீதம்) கொண்ட கூரிய அதிகரிப்பிற்கு எதிராக ரூ. 810 இலட்சம் (அல்லது 15 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1970/71 ஆம் ஆண்டின் ரூ 2,060 இலட்சங்கொண்ட தேறிய உதவிப் பணத்தின் அதிகரிப்பிற்கு, சீனி விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களிலேற்பட்ட ரூ 1,580 இலட்சங்கொண்ட கூரிய வீழ்ச்சியே காரணமாகும். 1971/72 இற்கான தேறிய உணவு உதவிப்பணத்தின் ரூ. 810 இலட்சங்கொண்ட அதிகரிப்பிற்கு மா விற்பனையிலேற்பட்ட ரூ.600 இலட்சங்கொண்ட நட்டமும், சீனி விற்பனையின் இலாபங்களிலேற்பட்ட ரூ. 220 இலட்சம் கொண்ட குறைப்புமே காரணமாகும்.

## 4. பொதுப் படுகடன்

1971-72இன் நிதியாண்டின் 15 மாத காலப் பகுதியில் மொத்தப் பொதுப் படுகடன்[1] ரூ. 15,360 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக்காட்டி, 1972, திசெம்பர் இறுதியில், ரூ. 1,03,190 இலட்சமாகக் காணப்பட்டது (அரசாங்கத் திணைக்களங்களின் நிரம்பல் செய்வோர் கொடுகடன் பொறுப்பும் சேர்க்கப்பட்டால் இத்தொகை ரூ. 1,04,010 இலட்சமாகும்[1]). வெளிநின்ற மொத்தப் பொதுப்படு கடனில், ரூ. 79,260 இலட்சம் அல்லது 77 சதவீதம் உள்நாட்டுக் கடன்பாடாகவும், மீதி (ரூ.23,930 இலட்சம் அல்லது 23 சதவீதம்) வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்ற கடன்பாடாகவும் விளங்கியது. ரூபாக்

---

1 'பொதுப்படுகடன்' என்ற பதம், இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்பாடுகளை மட்டுமே இங்கு குறிக்கின்றது. எனவே, அது பொதுக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களின் கடன்பாடுகளைத் தவிர்த்துள்ளது. மேலும், நிரம்பல் செய்வோர் கொடுகடன் திட்டத்தின் கீழ் அரசாங்கத் திணைக்களங்களினுற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரில் 1972, திசெம்பர் 31இல் ரூ. 820 இலட்சமாகவிருந்த படுகடனும் இதனுள் உள்ளடக்கப்படவில்லை.

கடனினதும், ஸ்டேர்லிங் கடனினதும், கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாகப் பார்ப்பின், 1971-72இன் பதினைந்து மாத காலப்பகுதியில் அதிகரிப்பு ரூ. 13,400 இலட்சமாகவும், வெளிநின்ற மொத்தத் தொகை ரூ. 94,480 இலட்சமாகவும் விளங்கியது.

இப்படுகடனின் அமைப்பையும் அதன் உடைமையையும் பற்றிய விவரங்கள், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் உள்ளவாறு, பின்னிணைப்பு 11இன் அட்டவணை 38, 39இற் காட்டப்பட்டுள்ளன. அதன் சுருக்கம் கீழே அட்டவணை 11 (எ) 6 இற்றரப்பட்டுள்ளது.

அட்டவணை II (எ) 6

மொத்தப் பொதுப்படுகடன் 1968—1972 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| நிதியாண்டு இறுதியிலுள்ளபடி | 1967/68 | | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % |
| 1. மொத்தப் படுகடன் | 6,270.8 | 100.0 | 6,888.5 | 100.0 | 7,873.2 | 100.0 | 8,782.8 | 100.0 | 10,318.5 | 100.0 |
| 1.1 வெளிநாட்டு | 1,074.3 | 17.1 | 1,375.5 | 20.0 | 1,578.4 | 20.1 | 1,800.1 | 20.5 | 2,392.5 | 23.2 |
| 1.2 உள்நாட்டு | 5,196.5 | 82.9 | 5,513.0 | 80.0 | 6,294.8 | 79.9 | 6,982.6 | 79.5 | 7,926.3 | 76.8 |
| 2. தேறிய படுகடன் (ஆ) | 5,689.3 | 100.0 | 6,238.9 | 100.0 | 7,236.8 | 100.0 | 8,108.0 | 100.0 | 9,448.1 | 100.0 |
| 2.1 வெளிநாட்டு | 1,038.3 | 18.3 | 1,337.3 | 21.4 | 1,550.9 | 21.4 | 1,767.6 | 21.8 | 2,352.5 | 24.9 |
| 2.2 உள்நாட்டு | 4,651.0 | 81.7 | 4,901.6 | 78.6 | 5,685.9 | 78.6 | 6,340.4 | 78.2 | 7,095.6 | 75.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பின்வருவன நீங்கலாக: (i) 1972 திசெம்பர் இறுதியில், முறையே ரூ. 910 இலட்சமாகவும் ரூ. 323 இலட்சமாகவும் விளங்கிய தேசிய வீடமைப்பு, அரச ஈட்டுவங்கி தொகுதிக் கடன்கள் (ii) நிரம்பல் செய்வோர் கொடுகடனின் கீழ் அரசாங்கத் திணைக்களங்களாற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரிலுள்ள ரூ. 822இலட்சம் படுகடன் (iii) பன்னாட்டு நிதி நிறுவனங்களாற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரில் வெளியிடப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள்.

(ஆ) மொத்தப் படுகடனில், ஸ்ரேலிங் ரூபாக் கடன்களையொட்டிய கடன் கரைப்பு நிதியத் தொகைகள் நீங்கலாக.

மொத்தப் பொதுப் படுகடனிலும், தேறிய பொதுப்படுகடனிலும் ஏற்பட்ட முறையே ரூ. 15,360 இலட்சம், ரூ 13,400 இலட்சங்கொண்ட அதிகரிப்பினை, 12 மாத விகிதசம அடிப்படையிற் பார்ப்பின், இவ்வதிகரிப்பு முறையே ரூ. 12,290, ரூ. 10,720 இலட்சமாகும். இத்தொகைகள் முந்திய நிதியாண்டில் மொத்தப்படுகடனிலும் தேறிய படுகடனிலும் பதிவுசெய்யப்பட்ட முறையே

ரூ. 9,100 இலட்சம், ரூ. 8,710 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைவிட மிக உயர்வாகவிருக்கின்றன 1971-72இன் பதினைந்து மாதகாலப்பகுதியில் மொத்தப் பொதுப்படுகடனிலேற்பட்ட ரூ 15,360 இலட்சங்கொண்ட அதிகரிப்பானது, ரூ. 5,920 இலட்சம் (அல்லது 38 சதவீதம்) கொண்ட வெளிநாட்டுப் படுகடன் அதிகரிப்பினையும், ரூ. 9,430 இலட்சம் (அல்லது 62 சதவீதம்) கொண்ட உள்நாட்டுப் படுகடன் அதிகரிப்பினையும் கொண்டுள்ளது. வெளிநாட்டுப் படுகடனிலும் உள்நாட்டுப் படுகடனிலுமேற்பட்ட சமவிகித அதிகரிப்பானது, முறையே ரூ. 4,740 இலட்சமாகவும், ரூ. 7,540 இலட்சமாகவுமிருக்கும். முன்னைய ஆண்டின்போது, வெளிநாட்டுப் படுகடனில், ரூ 2,220 இலட்சமாகவும் (அல்லது 24 சதவீதம்), உள்நாட்டுப் படுகடனில் ரூ. 6,880 இலட்சமாகவும் (அல்லது 76 சதவீதம் ) இவ்வதிகரிப்பு விளங்கியது.

1971-72இல் (12 மாதங்கள்) வெளிநாட்டுப் படுகடனிலேற்பட்ட முழுமையான அதிகரிப்பு, 1970-71 இலேற்பட்ட அத்தகைய அதிகரிப்பின் இருமடங்கினைவிடக்கூடுதலானதென்பது கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. இலங்கை ரூபாக்களிற் காட்டப்படுகின்ற வெளிநாட்டுப்படுகடன் பொறுப்புக்களில் மேனோக்கிய மாற்றம் செய்தமையின் விளைவாகவே இவ்வதிகரிப்புப் பெருமளவு ஏற்பட்டது. இம்மேனோக்கிய மாற்றம் உலக நாணயங்கள் மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், இக்காரணியினுலேற்பட்ட ரூ. 2,250 இலட்சங்கொண்ட அதிகரிப்புக்கு இடமளிப்பினும், முழுமையான அதிகரிப்பு ரூ. 2,940 இலட்சமாக (12 மாதங்களுக்கு) இருந்து, 1970-71இன் அதிகரிப்பிலும் (ரூ. 2,220 இலட்சம்) உயர்வானதாகவே விளங்குகிறது.

வெளிநாட்டு உதவி மீதுள்ள நம்பிக்கை அதிகரிப்புப் பற்றி சென்றுண்டின் ஆண்டறிக்கையிற்[1] கூறப்பட்டுள்ளது. மொத்தப் பொதுப்படுகடனில் வெளிநாட்டுப்படுகடனின் பங்கு 1966-67 இலிருந்த 13.6 சதவீதத்திலிருந்து 1970/71இல் 20.5 சதவீதத்திற்குத் தளராது அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. 1971-72 நிதியாண்டுக் காலத்தின்போதும், வெளிநாட்டு உதவிமீதான பெருமளவு நம்பிக்கை தொடர்ந்திருந்ததோடு, மொத்தப் படுகடனில், வெளிநாட்டுப்படுகடனின் பங்கு 23.2 சதவீதமாக அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடனிலேற்பட்ட முழுமையான அதிகரிப்பு, வெளிநாட்டுப்படுகடனின் அவ்வதிகரிப்பிலும் மிக உயர்வாக இருந்தபோதும் விகிதசம அடிப்படையில், 1971-72 நிதியாண்டின்போது ஏற்பட்ட 14 சதவீத உள்நாட்டுப்படுகடன் அதிகரிப்பு, 33 சதவீதங்கொண்ட வெளிநாட்டுப்படுகடன் அதிகரிப்பினைவிட மிகக் குறைவானதாகும். இதன்விளைவாக, மொத்தப்படு கடனில் உள்நாட்டுப்படுகடனின் பங்கு, 1971-72 நிதியாண்டிணிறுதியில் 76.8 சதவீதமாகக்குறைந்தது.

1973ஆம் நிதியாண்டில் (அதாவது 1973 சனவரி-திசெம்பர்) அரசாங்கம் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து ரூ. 6,000 இலட்சமும், வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 5,410 இலட்சமும் திரட்ட எண்ணியுள்ளது. பின்னர்,

---

1. ஆண்டறிக்கை 1971, பக்கம் 181 ஐப் பார்க்கவும்.

குறிக்கப்பட்ட தொகை, ரூ. 1,410 இலட்சங்கொண்ட செயற்றிட்டக் கடன்களையும், ரூ. 4,000 இலட்சங்கொண்ட செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்களையும் உள்ளடக்கியுள்ளது.

**உள்நாட்டுப்படுகடன்**

முன்னைய ஆண்டுகளைப்போலல்லாது, 1972, திசெம்பர் 31இல் முடிவுற்ற 1971-72 நிதியாண்டினிறுதியில் வெளிநின்ற மொத்த உள்நாட்டுப்படுகடன், ரூ. 79,260 இலட்சமாகவிருந்தது. இவ்வாண்டினது படுகடனின் அமைப்பும், கடந்த ஐந்து நிதியாண்டுகளுக்கான ஒப்பீட்டுத் தரவுகளும், அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களுடன் சேர்த்து அட்டவணை 11 (எ) 7 இற் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II (எ) 7**

**உள்நாட்டுப் பொதுப்படுகடனின் அமைப்பும் அதன் மாற்றங்களும் 1967—1972 வரை**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முடிவிலுள்ளபடி | ரூபாக் கடன்கள் | | | திறைசேரி உண்டியல்கள் | வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | மத்திய வங்கி முற்பணங்கள் (ஆ) | தேசிய அபிவிருத்தி முறிகள் (இ) | கூட்டுத் தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | கடன் கரைப்பு நிதியம் (அ) | தேறிய | | | | | மொத்தம் | தேறிய |
| 1967 செத்தெம்பர்... | 2,784.8 | 507.8 | 2,276.9 | 1,500.0 | 25.7 | 271.6 | 0.1 | 4,582.2 | 4,074.3 |
| 1968 ,, ... | 3,117.9 | 545.5 | 2,572.4 | 1,750.0 | 24.0 | 304.5 | 0.1 | 5,196.5 | 4,651.0 |
| 1969 ,, .. | 3,409.1 | 611.4 | 2,797.7 | 1,750.0 | 24.5 | 329.3 | 0.1 | 5,513.0 | 4,901.6 |
| 1970 ,, ... | 3,924.9 | 608.9 | 3,316.0 | 1,950.0 | 45.4 | 374.4 | 0.1 | 6,294.8 | 5,685.9 |
| 1971 ,, ... | 4,511.9 | 642.2 | 3,869.6 | 2,025.0 | 66.0 | 379.5 | 0.2 | 6,982.6 | 6,340.4 |
| 1972 திசம்பர் ... | 5,103.4 | 830.4 | 4,273.0 | 2,325.0 | 77.8 | 419.6 | 0.2 | 7,926.0 | 7,095.6 |
| 1968/67 மாற்றம் | + 333.1 | + 37.7 | + 295.5 | + 250.0 | — 1.7 | + 32.9 | — | +614.3 | +576.7 |
| 1969/68 மாற்றம் | + 291.2 | + 65.9 | + 225.3 | — | + 0.5 | + 24.8 | — | +316.5 | +250.6 |
| 1970/69 மாற்றம் | + 515.8 | — 2.5 | + 518.3 | + 200.0 | + 20.9 | + 45.1 | — | +781.8 | +784.3 |
| 1971/70 மாற்றம் | + 587.0 | + 33.3 | + 553.6 | + 75.0 | + 20.6 | + 5.1 | + 0.1 | +687.8 | +654.5 |
| 1972 திசெம்பர் /71 செத்தெ.மாற்றம் | + 591.5 | + 188.2 | + 403.4 | + 300.0 | + 11.8 | + 40.1 | — | +943.4 | +755.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) கடன்கரைப்பு நிதியத்தின் பேரில்வைக்கப்பட்ட முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதியைக் குறிக்கும் (துணைக் கடன்கரைப்பு நிதியங்களும் உட்பட)

(ஆ) பன்னாட்டு நாணய நிதி, பன்னாட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிற்கு உறுப்புரிமைக் கட்டணங்களைக் கொடுப்பதற்கென வழங்கப்பட்ட சிறப்புக் கடன்களும் உட்பட. 1971, செத்தெம்பர் இறுதியிலும், 1972 திசெம்பர் இறுதியிலும் ரூ. 932 இலட்சமாக விளங்கிய இக்கடன்கள் நீங்கலாக, 1971/72 இல் மத்திய வங்கி முற்பணங்கள் ரூ. 401 இலட்சத்தால் அதிகரித்தன. இச்சிறப்புக் கடன்கள் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களைத் தவிர்க்கின்றன.

(இ) வழங்கப்பட்டதும், வெளிநின்றதுமான தேசிய அபிவிருத்தி முறிகளின் பெறுமதி 1971 செத்தெம்பர் இறுதியில் ரூ. 216,894 இலட்சமாகவிருந்து, 1972, திசெம்பர் இறுதிவரை அதே அளவாகவிருந்தது

பதினைந்து மாதங்களைக்கொண்ட 1971-72 நிதியாண்டுக் காலத்தின்போது, மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ. 9,430 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு, ரூபாக் கடனிலேற்பட்ட ரூ. 5,920 இலட்சங்கொண்ட அதிகரிப்பினையும், திறைசேரி உண்டியல்களிலேற்பட்ட ரூ. 3,000 இலட்சங்கொண்ட அதிகரிப்பினையும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களிலேற்பட்ட ரூ. 110 இலட்சங் கொண்ட அதிகரிப்பினையும், மத்திய வங்கி முற்பணங்களிலேற்பட்ட ரூ. 400 இலட்சங்கொண்ட அதிகரிப்பினையும் கொண்டுள்ளது. 12 மாத விகிதசம அடிப்படையில், மொத்த உள்நாட்டுப்படுகடன் அதிகரிப்பானது, முன்னைய நிதியாண்டின் அதிகரிப்பாகிய ரூ. 6,880 இலட்சத்துக்குப்பதிலாக ரூ. 7,540 இலட்சமாக விளங்கும். எவ்வாறுயினும், உள்நாட்டுப் படுகடனில், ரூபாக் கடன் (65 சதவீதம்), திறைசேரி உண்டியல்கள் (29 சதவீதம்), வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ( 1சதவீதம்), மத்திய வங்கி முற்பணங்கள் (5 சதவீதம்) ஆகியன வற்றின் சார்புப் பங்குகள் 1970-71ஐப் போலவே, ஆய்வுக்குட்பட்ட நிதியாண்டினிறுதியிலும் மாற்றமுறாது தொடர்ந்திருந்தன.

1970-71இல் மாற்றற் கடன்களைத் தவிர்த்த, ரூபாக் கடன்கள் வழங்கு வதன்மூலம் பெறப்பட்ட கடன்பாடு, மொத்த உள்நாட்டுக் கடன்பாட்டில், 85 சதவீதத்துக்கு வகை கூறியபோதும், 1971/72இல் அதன்பங்கு 63 சதவீத மாக வீழ்ச்சியுற்றது. ரூபாக்கடன்களின் மீதான அரசாங்க உள்நாட்டுக் கடன்பாடுகளில், முன்னைய இரு நிதியாண்டுகளிற் பெரிதும் காணப்பட்ட நம்பிக்கை அதிகரிப்பானது 1971-72இல் ஓரளவுக்குக் குறைந்துள்ளது. போலத் தோன்றுகிறது. மறுபுறத்தில் திறைசேரி உண்டியல்கள் மூலமான கடன்பாடுகள் ஆய்வுக்குட்பட்ட ஆண்டின்போது கணிசமானளவு அதிகரித்தன இவை 1970-71 இன் ரூ. 750 இலட்சத்திலிருந்து, ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் ரூ. 3,000 இலட்சமாக அதிகரித்தன. 12 மாதகால விகிதசம அடிப்படையில் இத்தொகை, ரூ. 2,400 இலட்சமாகவிருக்கும். எவ்வாறுயினும், திறைசேரி உண்டியல்கள் மூலமான இக்கடன்பாட்டிலேற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு, 1972ஆம் ஆண்டு செத்தெம்பர் 1உக்கும் திசெம்பர் 17உக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் நிலவிய வங்கி வேலை நிறுத்தத்தினுல் உருவாக்கப்பட்ட எதிர் பாராத சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதியின்போது, அரசாங்கத்துக்கான வருமானவோட்டம் தடைப்படுத்தப்பட்டதுடன், அர சாங்கம்இந்த வடிவிலான தற்காலிக வழிமுறைகளைத் தேடி மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கடந்த ஐந்து நிதியாண்டுகளின் இறுதியிலுள்ளபடியான, மொத்த உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சி அமைப்பு அட்டவணை 11 (எ) 8 இல் தரப்பட்டுள்ளது.

உள்நாட்டுப்படுகடனின், நிதியீட்டப்பெற்ற படுகடன் (ரூபாப் பிணைகளையே முற்றிலும் கொண்டவை) நிதியீட்டப்படாத படுகடன் (பெரும்பாலும் திறைசேரி உண்டியல்களைக்கொண்டவை) என்பவற்றின் பங்கு, பெருமளவுக்கு முன்னைய நிதியாண்டினிறுதியிலிருந்த அளவிலேயே, 1971-72 நிதியாண்டினிறு தியிலும் தொடர்ந்திருந்தது. எனவே, 1967 தொடக்கம் நிதியீட்டப்படாத

## அட்டவணை II (எ) 8

### உள்நாட்டுப் படுகடன் — முதிர்ச்சியின்படியான பகுப்பாய்வு

(அரசாங்க நிதியாண்டின் இறுதியிலுள்ளபடி) (அ)

| முதிர்ச்சி யாண்டுகள் | 1967/68 | | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் |
| 1. நிதியீட்டப் படாத படுகடன் (ஆ) | 2,078.6 | 40.0 | 2,103.8 | 38.2 | 2,369.9 | 37.6 | 2,470.6 | 35.4 | 2,822.6 | 35.6 |
| 2. நிதியீட்டப்பட்ட படுகடன் (இ) | 3,117.9 | 60.0 | 3,408.6 | 61.8 | 3,924.9 | 62.4 | 4,511.9 | 64.6 | 5,103.4 | 64.4 |
| 2.1 முதல் 5 ஆண்டுகள் | 452.1 | 8.7 | 534.9 | 9.7 | 491.1 | 7.8 | 397.4 | 5.7 | 428.1 | 5.4 |
| 2.2. 5 முதல் 10 ஆண்டு கள்வரை | 315.7 | 6.1 | 235.8 | 4.3 | 383.2 | 6.1 | 492.7 | 7.1 | 307.0 | 3.9 |
| 2.3. 10 முதல் 15 ஆண்டு கள்வரை | 249.1 | 4.8 | 247.0 | 4.5 | 534.6 | 8.5 | 1,352.4 | 19.4 | 2,277.0 | 28.7 |
| 2.4. 15 முதல் 20 ஆண்டு கள்வரை | 600.0 | 11.5 | 795.0 | 14.4 | 1,047.4 | 16.6 | 1,118.0 | 16.0 | 1,366.3 | 17.2 |
| 2.5. 20 முதல் 25 ஆண்டு கள்வரை | 1,501.0 | 28.9 | 1,595.9 | 29.0 | 1,468.5 | 23.3 | 1,151.4 | 16.5 | 725.0 | 9.1 |
| 3. மொத்தம் | 5,196.5 | 100.0 | 5,512.4 | 100.0 | 6,294.8 | 100.0 | 6,982.5 | 100.0 | 7,926.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) அரசாங்கத்தின் நிதியாண்டு ஒற்றோபர் 1ந் திகதி தொடக்கம் செத்தெம்பர் 31ந் திகதி வரையாக இருந்தது. ஆனால் 1971/72 இல் இது 1971 ஒற்றோபர் 1 தொடக்கம் 1972 திசெம்பர் 31 வரையாகி விருந்தது.

(ஆ) திறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குச் சான்றிதழ்கள், மத்திய வங்கி முற்பணங்கள், தேசிய அபி விருத்தி முறிகள் ஆகியவற்றைக் கொண்டது.

(இ) முதிர்ச்சியின் அண்மைத் திகதியிலுள்ளபடி.

படுகடனின் பங்கிலேற்பட்டு வந்த படிப்படியான வீழ்ச்சி சென்ற ஆண்டறிக்கையிற் கவனத்திற்கு ஈர்க்கப்பட்டதற்கிணங்க[1] ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது போலத்தோன்றுகிறது. உள்நாட்டுப் பொதுப்படுகடன் அமைப்பிலேற்பட்ட மாற்றங்கள் பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதியீட்டப்பட்ட படுகடனுக்கு நிதியீட்டப்படாத படுகடனின் விகிதம் கடந்த அண்மையாண்டுகளிலிருந்ததைப் போலவே, ஏறக்குறைய 2:3 ஆகத் தொடர்ந்திருக்கிறதென்பது அவதானிக்கப்படலாம்.

1971-72 நிதியாண்டில் வழங்கப்பட்ட எல்லா ரூபாக் கடன்களும் 10-12 ஆண்டு கால இடைவெளியைக் கொண்டிருந்தன. 1970-71 காலப்பகுதியின் போது இருமடங்குக்கு மேலாக அதிகரித்த 10-15 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட பிணைத்தொகுதியின் பங்கு, இதன் விளைவாக மேலும் அதிகரித்தது. இப்பொழுது, மொத்த உள்நாட்டுப் படுகடனில் ஏறக்குறைய 30 சதவீதத் துக்குவகை கூறுகிறது. 20-25 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் பிணைகளின் பங்கு 1968-69 இறுதியிலிருந்த 29 சதவீதத்திலிருந்து, 1971-72 இறுதியில் 9 சதவீதமாகக் குறைவடைந்தது. நீண்டகால ரூபாப் பிணைகள் வழங்குவதன் மூலம் படுகடன் திருப்பிக்கொடுத்தற்கமைமையை மேலும் பரவலாக்குவதற்கான வாய்ப்பு நிலவுகிறதென்பதை நிதியீட்டப்பட்ட படுகடன்களின் முதிர்ச்சிப் பண்பு எடுத்துக்காட்டுகிறது. குறிப்பிட்ட சிலவாண்டுகளிலே திருப்பிக் கொடுப்பனவுத் தொகைகள் பெருகுவதைத் தவிர்க்கும் பொருட்டு முக்கிய கவனமெடுக்க வேண்டும். இல்லையெனில், இத்திருப்பிக் கொடுப்பனவுகள் என்றும் அதிகரித்து வரும் நிதித்தேவையையுடைய அரசாங்கத்துக்கு மேலும் பல வரவுசெலவுத் திட்டப் பிரச்சினைகளை உருவாக்கும். கடந்த அண்மையாண்டுகளிற் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிதி மூலங்கள் அரசாங்கக் கடன் ஒழுங்குத் திட்டத்தில் முக்கிய பங்கைப் பெற்று வந்துள்ளமை, பொதுப்படுகடனை நிருவகிக்கும் இந்த நடவடிக்கையை இலகுவாக்க வழிசெய்ய வேண்டும். பொதுப்படுகடன் மீதான அதிகரித்துவரும் வட்டிச் சுமை பற்றி, கவனமும் இவ்வறிக்கையில் ஈர்க்கப்பட்டுள்ளது[2].

### (அ) ரூபாப்பிணைகள்

1971—72 நிதியாண்டுக் காலத்தின்போது, இருபது ரூபாக் கடன்கள் தொடக்கப்பட்டன. அவை யாவும், 10—12 வரையான ஆண்டு நிகழ்ச்சிக் காலத்தையும், ஆண்டுக்கு 9 சதவீத வட்டி வீதத்தையும் கொண்டிருந்தன. இவற்றில், ஏழு மாற்றற் கடன்களாகும். திரட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 7,470 இலட்சமாகும். இதில் ரூ. 970 இலட்சம் மாற்றற் கடன்களாகும். முன்னைய நிதியாண்டாகிய 1970—71இல் ரூபாக் கடன்களின் வெளியீடு மூலமாகத் திரட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 6,810 இலட்சமாகவும், இதில், மாற்றற்கடன்கள் ரூ. 860 இலட்சமாகவுமிருந்தன.

---

1. ஆண்டறிக்கை 1971 பக்கம் 183
2. பக்கங்கள் 166 உம் 167 உம்.

1971-72 இலே தொடக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாய் கடனுக்குமான கட்டணங்களின் விவரங்கள் பின்னிணைப்பு 11 இலுள்ள அட்டவணை 41 இலே தரப்பட்டுள்ளன. கடந்த நான்கு நிதியாண்டுகளிலே தொடக்கப்பட்ட ரூபாக் கடன்களுக்கான கட்டணங்களை 11 (ஏ) 9 சுருக்கமாகத் தருகின்றது.

1971-72 நிதியாண்டுக் காலத்தின்போது, ரூபாப் பிணைகள் வழங்குவதன் மூலம் அரசாங்கத்தாற்றிரட்டப்பட்ட வளங்கள், 12 மாத விகிதசம அடிப்படையில், ரூ. 5,970 இலட்சமாகும். இத்தொகை, முன்னைய ஆண்டில் திரட்டப்பட்ட ரூ. 6,810 இலட்சத்தினைவிடக் கணிசமானவளவு குறைவாக விருக்கின்றபோதும், ஆய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட[1] மூல மதிப்பீட்டில் இம்மூலத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விகிதசமக்கடன் பாட்டினை விடச் சிறிது அதிகரித்துள்ளது.

முன்னைய ஆண்டோடு ஒப்பிடுமிடத்து, ஏற்பட்ட இவ்வீழ்ச்சி வங்கியல்லாத் துறையிலிருந்து, குறிப்பாகச் சேமிப்பு நிறுவனங்களிலிருந்து, அரசாங்கக்கடன் ஒழுங்குத் திட்டத்துக்கு ஆதரவு குறைவாகக் கிடைத்தமையினாலேயே முக்கியமாக ஏற்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ஓரளவு காரணமாக, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், களரிகள், நிறுவனங்கள் என்டனவற்றுடன் தனியாட்களும் இருந்தனர்.

வங்கியல்லாத் துறையின் ரூபாப் பிணைக் கொள்வனவுகள் ரூ. 1,400 இலட்சத்தால் வீழ்ச்சியடைய, வங்கித் துறையின் கொள்வனவுகள் ரூ. 470 இலட்சத்தால் அதிகரித்தன. கடந்த சிலவாண்டுகளில், ரூபாப் பிணைகளுக்கு நேரடியாக உதவுதொகை வழங்குவதினின்றும் வங்கி முறையானது விலக்கப் பட்டிருந்தது. இதன் விளைவாக, கடந்த ஈராண்டாண்டுகளாக, வங்கித் துறையினாற் செய்யப்பட்ட முதலீடுகள் முழுவதும், முதிர்ச்சியடைந்த இருப்புக்களின் மாற்றல்களால் உருவாக்கப்படும் கடன்களாகவிருந்து வந்துள்ளன. 1969-70இலுங்கூட வர்த்தக வங்கிகளின் உதவுதொகை, அரசாங்கத்தாற் செய்யப்பட்ட ரூ. 1,250 இலட்சத்துக்கு வகைகூறிய வெளி நின்ற (இறக்குமதி) உண்டியல்களின் தீர்ப்பனவுகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருந்தது. வர்த்தக வங்கிகளின் உதவுதொகை, ரூபாப்பிணை களுக்கான மொத்தக் கட்டணத்தின் 6 சதவீதமாகவேயிருந்தது.

வங்கியல்லாத்துறையிலுள்ள சேமிப்பு நிறுவனங்கள், இலங்கைக் காப் புறுதிக் கூட்டுத்தாபனம், கடன்கரைப்பு நிதியங்கள், திணைக்கள நிலையங்கள், ஊழியர் சேமநிதியம் ஆகிய அரசாங்க அரசாங்கச் சார்புடைய மூலங்கள்,

1. 1970-71இலும், 1971-72இலும் மாற்றற் கடன்கள் நீங்கலாக, ரூபாப்பிணைகள் மூலமாகத் திரட்டப்பட்ட தொகைகள் முறையே ரூ. 5,950 இலட்சம், ரூ, 6,500 இலட்சம் (12 மாதங்களுக்கு ரூ. 5200 இலட்ச மாகும்) ஆகவிருந்தன. 1971-72 வரவு செலவுத்திட்டத்தில் ரூபாப் பிணைகள் மூலமாகத் திரட்டப்பட வேண்டிய தொகை ரூ. 6,400 இலட்சமென எதிர்பார்க்கப்பட்டது. 12 மாத விகிதசம அடிப்படையில் இத்தொகை ரூ. 5,120 இலட்சமாகும்.

## அட்டவணை I (எ) 9

### ரூபாப் பிணைகளுக்கான உதவுநர்களின் பகுப்பு (அ)

| உதவுநர்கள் | 1967/68 | | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | 12மாதங்கள் தொகை ப. இ. ரூ. | 15மாதங்கள் தொகை ப. இ. ரூ, | % |
| 1. வங்கித்துறை ... | 0.8 | 0.2 | 0.6 | 0.2 | 117.5 | 20.3 | 12.7 | 1.9 | 37.4 | 46.7 | 6.3 |
| 1.1 வர்த்தக வங்கிகள் ... | 0.8 | 0.2 | 0.6 | 0.2 | 117.5 | 20.3 | 12.7 | 1.9 | 37.4 | 46.7 | 6.3 |
| 2. வங்கியல்லாத்துறை ... | 358.9 | 99.7 | 339.4 | 99.8 | 461.7 | 79.7 | 668.1 | 98.1 | 559.9 | 699.9 | 93·7 |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் ... | 48.8 | 13.6 | 36.0 | 10.6 | 156.1 | 26.9 | 216.0 | 31.7 | 97.4 | 121.7 | 16.3 |
| 2.2 கடன்கரைப்பு நிதியம் ... | 114.1 | 31.7 | 111.8 | 32.9 | 83.0 | 14.3 | 161.8 | 23.8 | 168.0 | 210.0 | 28.1 |
| 2.3 திணைக்கள நிதியங்களும் ஏனைய அரசகரும நிதியங்களும் | 9.5 | 2.6 | 8.4 | 2.5 | 6.2 | 1.1 | 9.4 | 1.4 | 12.7 | 15.9 | 2.1 |
| 2.4 ஊழியர் சேமநிதியம் ... | 92.4 | 25.7 | 101.3 | 29.8 | 97.9 | 16.9 | 143.0 | 21.0 | 158.2 | 197.7 | 26.5 |
| 2.5 காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 53.2 | 14.8 | 42.5 | 12.5 | 45.5 | 7.9 | 60.8 | 8.9 | 55.3 | 69.1 | 9.3 |
| 2.6 தனியார் சேமநிதியங்களும் ஓய்வூதிய நிதியங்களும் ... | 29.2 | 8.1 | 36.8 | 10.8 | 53.9 | 9.3 | 62.1 | 9.1 | 64.6 | 80.8 | 10.8 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 4.4 | 1.2 | 0.6 | 0.2 | 16.1 | 2.8 | 6.3 | 0.9 | 0.4 | 0.5 | 0.1 |
| 2.8 ஏனைய கூட்டுநிலையங்கள் .. | 0.8 | 0.2 | 0.2 | 0.1 | 0.6 | 0.1 | 0.8 | 0.1 | 0.2 | 0.3 | ... |
| 2.9 தனியார்களும், சங்கங்களும் நிறுவனங்களும்... | 6.6 | 1.8 | 1.5 | 0.4 | 2.5 | 0.4 | 7.9 | 1.2 | 3.1 | 3.9 | 0.5 |
| 3. மொத்தம் | 359.7 | 100.0 | 340.0 | 100.0 | 579.2 | 100.0 | 680.7 | 100.0 | 597.1 | 746.4 | 100.0 |

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஆய்வுக்குட்பட்ட ஆண்டிலும் அரசாங்கக் கடன் ஒழுங்குத்திட்டங்களுக்குக் கணிசமானளவு ஆதரவைத் தொடர்ந்து கொடுத்து வந்துள்ளன. 1967/68 இலிருந்து 1970-71 வரையான காலப்பகுதியின்போது, ரூபாக் கடன்களுக்கான மொத்த உதவுதொகையில், இத்தகைய மூலங்களிலிருந்து கிடைத்த உதவுதொகையின் பங்கு சராசரியாக 82 சதவீதமாகவிருந்துள்ளது. ஆய்வுக்குட்பட்ட ஆண்டிலும் இந்த வீதத்தில் எவ்வித மாற்றமுமிருக்கவில்லை. எனவே. ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகளின் முக்கிய வழிகளாக இம்மூலங்கள் அமைகின்றன. மேலும் அரசாங்கக் கடன்திட்டங்களின் நிறைவேற்றல் இவற்றிற் பெருமளவு தங்கியிருக்கின்றன. அதேவேளையில் வங்கியல்லாத் தனியார் துறையும் அதன் ரூபாப் பிணைகள் கொள்வனவைத் தொடர்ந்து அதேயளவில் வைத்திருந்தது

1971-72 நிதியாண்டில் ரூபாப் பிணைகளுக்கான முக்கிய உதவுநர்களாக, கடன்கரைப்பு நிதியங்கள் (ரூ 2,100 இலட்சம் அல்லது 28 சதவீதம்), ஊழியர் சேமநிதியம் (ரூ. 1,980 இலட்சம் அல்லது 27 சதவீதம்) சேமிப்பு நிறுவனங்கள் (ரூ. 1,220 இலட்சம் அல்லது 16 சதவீதம்) தனியார் ஓய்வூதிய சேமநிதியங்கள் (ரூ. 810 இலட்சம் அல்லது 11 சதவீதம்), இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ரூ. 690 இலட்சம் அல்லது 9 சதவீதம்) ஆகியவை இருந்தன.

கடன்கரைப்பு நிதியங்களே, ரூபாப்பிணைகளுக்கான மிகப்பெரிய உதவுநராக விளங்கின. அண்மையாண்டுகளில், கடன்கரைப்பு நிதியங்களின் ரூபாப் பிணைகளுக்கான உதவுதொகைகள் கணிசமானதாகவிருந்துள்ளன. கடந்த அண்மையாண்டுகளில் கடன்களின் தொகை அதிகரிப்போடு சேர்ந்து, கடன் கரைப்பு நிதியங்களின் முதலீட்டு இயலளவு முக்கியமாக அதிகரித்துள்ளமை, கடன்களின் கால எல்லையை 10-12 ஆண்டுகளாகக் குறைத்தமை என்பன இதற்குக் காரணங்களாகும். பின்கூறிய காலவெல்லைக் குறைப்பானது, அத்தகைய ஒவ்வொரு கடனுக்குமான கடன்கரைப்பு நிதியங்களின் உதவு தொகை விகிதத்தை ஆண்டுக்கு 5 சதவீதமாகக் கூட்டியுள்ளது. மேலும் கடன்கரைப்பு நிதியங்களின் மீதான அண்மைக்கால முதலீடுகளிற் கிடைத்த கூடிய வட்டியும் இதற்கு உதவியுள்ளது. 1971இன் கூட்டு முதலீட்டு நிதியத்தின் தாபிப்புப் பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். இந்நிதியம் கடன்கரைப்பு நிதியங்களின் முதலீடுகளிலிருந்து சிறந்த விளைதிறனை நிச்சயமாக்குவதற்கு உதவி வந்துள்ளது[1].

1971-72இல் ரூபாப் பிணைகளுக்கான அடுத்த அதிகளவிலான உதவு தொகை, ஊழியர் சேமநிதியத்திலிருந்து கிடைத்தது. 1971-72இல் (15 மாதங்கள்) இம் மூலத்திலிருந்து கிடைத்த உதவுதொகைகள் ரூ. 1,980 இலட்சத்துக்கு வகைகூறின. 1970-71 காலப் பகுதியின்போது முதலாவதாக உதவுதொகை வீதங்களில் செய்த அதிகரிப்பின் விளைவாகவும், அடுத்து இத்திட்டத்தின் எல்லைப் பரப்பை விசாலித்ததனாலும், அவ்வாண்டில் இவ்வுதவு தொகை கணிசமானளவு அதிகரித்திருந்தது. 1971-72இலும், ஊழியர் சேமநிதியத்தின் உதவுதொகை, ரூபாப் பிணைகளுக்கான மொத்தக் கட்டணத்தின் 27 சதவீதமாக அதிகரிக்க அதேகாரணிகள் உதவியுள்ளன.

---

1. கூட்டுமுதலீட்டு நிதியம் தொடர்பான கூடிய விபரங்கட்கு, 201 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

1972 ஏப்பிரலிலே தேசிய சேமிப்பு வங்கி நிறுவப்படும் வரை, அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ்கள் நிதியம் என்பவற்றினுல் செய்யப்பட்டு வந்த சேமிப்பு நிறுவனங்களிடமிருந் தான உதவு தொகைகள், இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக ஒருங்கே வழி நடாத்தப்படுகின்றன. பெரும்பாலும், நாணய மதிப்பு நீக்கத் தின் விளைவாக வைப்புக்களிலேற்பட்ட கணிசமானளவு அதிகரிப்புக் காரண மாக, 1970 71இல் ரூ. 2,160 இலட்சங்கொண்ட மிக உயர்ந்த மட்டத்தை யடைந்த இவ்வுதவுதொகைகள், 15 மாதங்களைக்கொண்ட 1971-72 நிதியாண் டில் ரூ. 1,220 இலட்சத்துக்கு மட்டுமே வகைகூறின. நாணய மதிப்பு நீக்கத் தின் காரணமாக 1970-71 காலப்பகுதியின்போது பெறப்பட்ட அசாதாரண அதிகரிப்பு வீதம், ஆய்வுக்குரிய ஆண்டில் அதிக காலத்துக்குத் தொடர்ந்து நீடிக்கப்படமுடியாமையே இம்மூலத்திலிருந்து கிடைத்த குறைந்தளவிலான ஆதரவுக்கு முக்கிய காரணமாகும்.

ரூ. 550 இலட்சமாக விளங்கிய (12 மாதங்களுக்கு) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உதவு தொகைகளும் 1970-71இன் ரூ. 610 இலட்சங் கொண்ட தொடர்பான உதவுதொகைகளைவிடக் குறைவானதாகும். அதிகரித்த வரி ஏற்பாடு, (வருமானவரி வீதத்தை 50 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் விளைவு) கூட்டுத்தாபனத்தினுலே திரட்டு நிதியத்துக்கு நேரடியாகச்செய்யப்பட்ட உதவுதொகைகள், அநேக வகையான காப்புறுதி தொழில்களிலேற்பட்ட அதிகரிப்பு வீத வீழ்ச்சி, காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தினுலே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த கோரிக்கைகளின் அதிகரிப்பு என்பனவற்றின் கூட்டுவிளைவாகவே இக்குறைப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டு இப்போது பத்தாண்டுகள் நிறைவெய்திவிட்டன. அதன் பெரியளவு தொழிலாக இருந்து வரும் ஆயுட் காப் புறுதியைப்பொறுத்தவரையில், கூட்டுத்தாபனத்தாலே தீர்க்கப்படவேண்டிய தான கோரிக்கைகளின் அளவு அதிகரிப்பும் நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய தொன்றுகும் கூட்டுத்தாபனத்தின் புதிய தொழில், போதிய வேகத்தோடு, நிலைகுலையாது தொடர்ந்திருக்காவிடின் வருங்காலத்தில் அரசாங்கக் கடன் ஒழுங்குத் திட்டத்திற்கு இம்மூலத்திலிருந்து கிடைக்கும் ஆதரவிற் படிப்படியான குறைப்பைத் திரவத்தன்மைக் காரணங்கள் ஏற்படுத்தக்கூடும்.

1971-72இல், 12 மாத விகிதசம அடிப்படையில் ரூ. 680 இலட்சத்துக்கு வகைகூறிய, வங்கில்லாத் தனியார் துறையின் கட்டணங்கள், 1970-71இல் ரூ. 750 இலட்சத்தோடு ஒப்பிடும்போது வீழ்ச்சியைக் காட்டின. எனினும், தனியார் சேம, ஓய்வூதிய நிதியங்களிலிருந்து கிடைக்கும் உதவு தொகைகள் 1970-71இன் ரூ. 620 இலட்சத்திலிருந்து, 1971-72இல் (12 மாதங்கள்) ரூ. 750 இலட்சமாக அதிகரித்தன. 1970/71இல் நடைமுறைக்கு வந்த, சேமநிதிய உதவுதொகை வீத அதிகரிப்பைவிட மற்றும் உயர் வட்டி வீதக் கவர்ச்சியும், ரூபாப் பிணைகளின் முதிர்ச்சிக் காலத்தைக் குறுக்கியமையும் சேர்ந்து இம்மூலத்திலிருந்து உதவிதொடர்ந்து கிடைக்க வழிவகுத்திருக்கலாம். கூட்டுநிலையங்களின் அதிகரித்த திரவச்சொத்துத் தேவை, அதன் விளைவாக அவர்களின் முதலிடக் கூடிய நிதிகளிலேற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின்

பிரதிபலிப்பாக, கடந்தாண்டுகளிலே தனியார் காப்புறுதிக் கூட்டுநிலையங்களிலிருந்து கிடைக்கும் உதவுதொகைகள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளையில், களரிகள், மற்றும் நிறுவனங்கள் என்பனவற்றிலிருந்தும் தனியாரிடமிருந்தும் கிடைக்கும் உதவு தொகைகளும், *1970-71*இல் முக்கிய அதிகரிப்பைக் காட்டிய பின் வீழ்ச்சியடைந்துள்ளன.

அட்டவணை 11 (எ) 10 இல், கடந்த ஐந்து நிதியாண்டுகளினிறுதியில், ரூபாப் பிணைகள் பற்றிய உடைமைப் பாகுபாடு தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (எ) 10

### ரூபாப் பிணைகளின் உடைமைகள் (அ) — 1967/68—1971/72 நிதியாண்டுகளின் இறுதியிலுள்ளபடி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 |
|---|---|---|---|---|---|
| **1. வங்கித் துறை** | **328.8** | **367.0** | **586.0** | **588.2** | **536,1** |
| 1.1 மத்திய வங்கி | 70.0 | 111.8 | 249.0 | 247.5 | 197.3 |
| 1.2 வர்த்தக வங்கிகள் | 258.8 | 255.3 | 337.0 | 340.7 | 338.8 |
| **2. வங்கியல்லாத்துறை** | **2,789.0** | **3,042.0** | **3,338.9** | **3,923.7** | **4,567.3** |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் (ஆ) | 641.2 | 641.7 | 651.5 | 832.6 | 951.9 |
| 2.2 கடன் கரைப்பு நிதியம் | 532.3 | 614.1 | 696.2 | 846.9 | 1,042.6 |
| 2.3 திணைக்கள ஏனைய அலுவலக நிதியங்கள் | 147.1 | 150.8 | 156.2 | 163.2 | 165.2 |
| 2.4 ஊழியர் சேமநிதியம் | 612.1 | 713.5 | 811.4 | 954.4 | 1,159.6 |
| 2.5 ஏனைய சேமநிதியங்கள் | 394.5 | 423.2 | 469.3 | 513.1 | 572.5 |
| 2.6 காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 234.5 | 276.9 | 322.4 | 383.1 | 552.1 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் | 140.7 | 139.0 | 149.8 | 145.5 | 136.2 |
| 2.8 ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 2.9 | 2.9 | 2.2 | 2.2 | 2.2 |
| 2.9 ஏனையவை (இ) | 83.7 | 79.8 | 79.8 | 82.7 | 85.1 |
| **3. மொத்தம்** | **3,117.9** | **3,409.1** | **3,924.9** | **4,511.9** | **5,103.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்

(ஆ) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ்கள் நிதியம் ஆகியவற்றின் சொத்துக்களையும் பொறுப்புக்களைவும், 1972-ஏப்ரல் 1 தொடக்கம் தேசிய சேமிப்பு வங்கி கையேற்றுள்ளது.

(இ) கூட்டுறவு வங்கிகள், ஏனைய கூட்டு நிலையங்கள், களரிகள், நிறுவனங்கள், தனியார் ஆகியவற்றை உள்ளடக்கும்.

*1971-72*இன் இறுதியில் பொது மக்களால் வைத்திருக்கப்பட்ட ரூபாப் பிணைகளின் மொத்தத் தொகைகள் ரூ. *51,030* இலட்சமாகவிருந்தன. இத் தொகை, இந்நிதியாண்டுக் காலத்தின்போது (*15* மாதங்கள்) ரூ. *5,920* இலட்சம் அல்லது *13* சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வங்கில்லாத் துறையின் உடைமைகளிலேற்பட்ட அதிகரிப்பே, இவ்வதிகரிப்புக்குக் காரணமாகும். வங்கியல்லாத் துறையின் உடைமைகளிலேற்பட்ட ரூ. *6,440* இலட்சங்கொண்ட

அதிகரிப்பின் ஒரு பகுதி வங்கித் துறையின் உடைமைகளிலேற்பட்ட ரூ. 520 இலட்சங்கொண்ட வீழ்ச்சியினால் எதிரீடு செய்யப்பட்டது.

வங்கியல்லாத் துறையின் அதிகரிப்புக்கு, சேமிப்பு நிறுவனங்கள் (தற்போது தேசிய சேமிப்பு வங்கி), கடன்கரைப்பு நிதியங்கள், ஊழியர் சேமநிதியம் ஏனைய சேமநிதியங்கள், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் உடைமைகளிலேற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இவ்வதிகரிப்புக்கள், முறையே ரூ. 1,190 இலட்சம், ரூ. 1,960 இலட்சம், ரூ. 2,050 இலட்சம், ரூ. 590 இலட்சம், ரூ. 690 இலட்சமாகவிருந்தன. வங்கித்துறையின் உடைமைகளிலேற்பட்ட வீழ்ச்சி, பெருமளவுக்கு மத்திய வங்கியின் உடைமைகளிலேற்பட்ட ரூ 500 இலட்சங்கொண்ட வீழ்ச்சியினாலேற்பட்டதாகும். மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட முதிர்ச்சியடைந்த இருப்புக்களின் திருப்பிக் கொடுப்பனவுகளின் விளைவாகவே இவ்வீழ்ச்சியேற்பட்டது: வர்த்தக வங்கிகளின் கட்டணங்கள் ரூ. 470 இலட்சமாகவிருந்தபோதும், இத்தொகை மாற்றப்பட்ட முதிர்ச்சியடையும் பிணைகளைக்கொண்டிருந்ததனால் வர்த்தக வங்கிகளின் உடைமைகளில் எதுவித அதிகரிப்புமேற்படவில்லை.

கடந்த நான்கு நிதியாண்டுகளினிறுதியில், ஊழியர் சேமநிதியமே பிணைகளின் மிகவுயர்ந்த தொகைகளை வைத்திருந்தது. 1971/72 இனிறுதியில், நிதியம் வைத்திருந்த தொகை ரூ. 11,600 இலட்சமாகும். வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான மொத்த ரூபாப் பிணையில் ஏறக்குறைய காற்பங்கினை இது கொண்டிருந்தது. ரூ. 10,430 இலட்சமாக விளங்கிய பிணைகளுடனிருந்த கடன் கரைப்பு நிதியங்கள் மொத்தத்தில் 20 சதவீதத்தை வைத்திருக்க, ரூ. 9,520 இலட்சம் பெறுமதியான பிணைகளைக் கொண்டிருந்த சேமிப்பு நிறுவனங்கள் 19 சதவீதத்துக்கு வகைகூறி, முன்னையதை நெருங்கிச் சென்றன. பிணைகளில், முறையே ரூ. 4,520 இலட்சத்தையும் (9 சதவீதம்) ரூ. 5,730 இலட்சத்தையும் (11 சதவீதம்) வைத்திருந்த காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், தனியார் சேமநிதியங்களும், ஏனைய பெரிய பங்குதாரராவர்.

(ஆ) திறைசேரி உண்டியல்கள்

வழங்கப்பட்டதும், வெளிநின்றதுமான திறைசேரி உண்டியல்களின் தொகை, 1971/72 நிதியாண்டின் 15 மாத காலத்தின்போது, ரூ. 3,000 இலட்சங் கொண்ட அதிகரிப்பைக்காட்டி, 1972 திசெம்பர் இறுதியில் ரூ. 23,250 இலட்சமாகவிருந்தது. 1970 செத்தெம்பர் 25 தொடக்கம் ரூ. 20,500 இலட்சத்தில் தொடர்ந்திருந்து வந்த திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட மேலளவானது தேசிய அரசுப்பேரவைத் தீர்மானமொன்றின்படி, 1972 யூலை 21 இல் ரூ. 25,500 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

கடந்த நிதியாண்டின்போது, திறைசேரி உண்டியல் வெளியீடுகள் தொடர்பான விவரங்கள் பின்னிணைப்பு II இன் அட்டவணை 42 இற்றரப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் முடிவில், திறைசேரி உண்டியல் உடைமை தொடர்பான ஒரு பாகுபாடு, அட்டவணை II (எ) 11 இற்றரப்பட்டுள்ளது

அட்டவணை II (எ) 11

**இறைசேரி உண்டியல்களின் உடைமைகள் — 1967/68—1971/72 நிதியாண்டுகளின் முடிவிலுள்ளபடி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 |
|---|---|---|---|---|---|
| 1. வங்கித்துறை ... | **1,682.2** | **1,691.4** | **1,880.3** | **1,969.6** | **2,264.7** |
| 1.1 மத்திய வங்கி ... | 1,586.3 | 1,637.3 | 1,833.8 | 1,670.5 | 1,890.8 |
| 1.2 வர்த்தக வங்கிகள் .. | 95.9 | 54.1 | 46.5 | 299.1 | 373.9 |
| 2. வங்கியல்லாத்துறை .. | **67.8** | **58.6** | **69.7** | **55.4** | **60.3** |
| 2.1 கடன்கரைப்பு நிதியங்கள் ... | 60.3 | 41.4 | 55.3 | 40.8 | — |
| 2.2 ஊழியர் சேமநிதியங்கள் ... | — | 0.3 | 0.3 | 0.3 | 0.3 |
| 2.3 ஏனைய சேமநிதியங்கள் ... | 0.1 | ... | .. | 0.8 | 0.1 |
| 2.4 சேமிப்பு நிறுவனங்கள் ... | 1.1 | 1.3 | 2.4 | 2.0 | — |
| 2.5 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 6.0 | 11.2 | 8.9 | 11.4 | 8.6 |
| 2.6 ஏனையவை .. | 0.3 | 4.5 | 2.8 | 0.2 | 50.0 |
| 3. மொத்தம் ... | **1,750.0** | **1,750.0** | **1,950.0** | **2,025.0** | **2,325.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

திறைசேரி உண்டியல் வெளியீட்டிலேற்பட்ட ரூ. 3,000 இலட்சங்கொண்ட அதிகரிப்பின் பெரும்பகுதி, மத்திய வங்கியினுற் கொள்வனவு செய்யப்பட்டது. 1972 செத்தெம்பர்-திசெம்பர் காலப்பகுதியில் நிலவிய வங்கி வேலை நிறுத்தத்தின் விளைவாக இவ்வெளியீட்டுக்கான தேவை பெருமளவுக்கு ஏற்படுத்தப்பட்டது அதிகரிப்பில் ரூ. 2200 இலட்சத்துக்கு மத்திய வங்கியும், ரூ. 750 இலட்சத்துக்கு வர்த்தக வங்கிகளும் வகை கூறின. கடந்த காலத்திலே திறைசேரி உண்டியலில், வங்கித்துறையின் கொள்வனவுகள் எப்போதும் அதிகளவாக இருந்து வந்துள்ளதுடன், 1971/72 இனிறுதியில், இக்கொள்வனவுகள் மொத்தத்தின் 97 சதவீதமாக விளங்கின. இவற்றில், மத்திய வங்கியின் பங்கு 81 சதவீதமாகவும், வர்த்தக வங்கிகளின் பங்கு 16 சதவீதமாகவும் இருந்தது. வங்கி முறையில், குறிப்பாக மத்திய வங்கியில், திறைசேரி உண்டியற் சந்தை பெருமளவுக்குத் தங்கியிருந்தமை சிறப்பாக அவதானிக்கத்தக்கதாயிருக்கிறது.

வங்கியல்லாத் துறையினுள், 'ஏனையவை' என்ற பகுப்பு நீங்கலாக, மற்றைய பகுப்புகளின் திறைசேரி உண்டியல் உடைமைகளிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவுமிருக்கவில்லை. 'ஏனையவை' என்ற இப்பகுப்பானது, இத்துறையினுள் திறைசேரி உண்டியல்களை வைத்திருக்கும் சிறிய தொகுதியிலிருந்து, 1971/72 நிதியாண்டின் போது பெரிய தொகுதிக்கு மாறியுள்ளது. கட்டாய சேமிப்புக்களின் ரூ. 500 இலட்சங்கொண்ட முதலீட்டம், திறைசேரி உண்டியல்களிற் செய்யப்பட்டமையினுலேயே இவ்வதிகரிப்பு பெருமளவுக்கு ஏற்பட்டது.

உயர்ந்த வட்டி வீதங் காரணமாக ரூபாக்கடன்களிலேயே நிதிகள் வழக்க மாக முதலிடப்பட்டு வைத்திருப்பதால், ரூபாக் கடன்கள் தொடங்கப்படாதிருக் கும் வேளையில் அல்லது ரூபாக் கடன்களின் திருப்பிக்கொடுப்பனவு விரைவில் செய்ய வேண்டியிருக்கும்போது திரவப்பணம் தேவைப்படுவதால் உடனடியாக எதிர்காலத்தில் அத்தகைய தேவை ஏற்படும் வேளையிற்றான் வழக்கமாகக் கடன் கரைப்பு நிதியங்களின் முதலீடு திறைசேரி உண்டியல்களிற் செய்யப்படுகிறது. ரூபாக் கடன்கள் திருப்பிக் கொடுப்பதற்கு முன்னருள்ள மூன்று மாத காலத்தின் போது, கடன்கரைப்பு நிதிய முதலீட்டங்கள் திறைசேரி உண்டியல்களில் வழக்க மாகக் குவிக்கப்படுவதுடன், அவை திருப்பிக் கொடுக்கப்படும் காலம்வரை உப யோகிக்கப்படுகின்றன. 1970/71 இன் இறுதியில் ரூ. 410 இலட்சம் பெறுமதி யுடைய திறைசேரி உண்டியல்களை வைத்திருந்த கடன்கரைப்பு நிதியங்கள், 1971/72 இனிறுதியில் அத்தகைய உடைமைகளெதனையும் வைத்திருக்கவில்லை. 1970/71 இன் இறுதியை நோக்கி வைப்புக்கள் குவிந்தமையினாலும், படுகடன் திருப்பிக் கொடுப்பனவுக்காக நடைமுறையாண்டின் பின்னர் இந்நிதிகளைப் பயன்படுத்தியமையினாலுமே இந்நிலைமை ஏற்பட்டது.

ஆய்வுக்குரிய நிதியாண்டின் தொடக்கத்தில் ஆண்டுக்கு 5 சதவீதமாக இருந்த திறைசேரி உண்டியல் வீதமானது, இந்நிதியாண்டு முழுவதிலும் மாற்ற மின்றித் தொடர்ந்திருந்தது. திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கி யின் உதவி வீதமானது, 1969 ஒகத்து 15 இலிருந்து 3.24 சதவீதமாகத் தொடர்ந்திருந்து வந்துள்ளது. இத்திகதியில் இவ்வீதம் 2 சதவீதத்திலிருந்து 3.24 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

(இ) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

அங்கீகரிக்கப்பட்ட வெளியீட்டுத் தொகையாகிய ரூ. 5,000 இலட்சத்தில், 1972 திசெம்பர் இறுதிவரை, ரூ. 4,800 இலட்சந் தொகையான வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அத்திகதியில் வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் கையளிக்கப்படாத தொகை ரூ. 780 இலட்சமாகும். முன்னைய நிதியாண்டின் இறுதியில் கையளிக்கப்படாத தொகை ரூ. 660 இலட்சமாக இருந்தது. எனவே, 1971/72 இன் நிதியாண்டின்போது இவ்வகையான படுகடன் பொறுப்பில் ரூ. 120 இலட்சந்தொகை கொண்ட அதிகரிப்புக் காணப் பட்டது இவ்வதிகரிப்பு முன்னைய நிதியாண்டின்போது ரூ. 210 இலட்சமாக விருந்தது. 1957 இல் வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் தொடக்கப்பட்ட காலத்தி லிருந்து என்றுமில்லாத அளவுக்கு 1971/72 இன் இறுதியிலிருந்த கையளிக்கப் படாத தொகையானது உயர்வானதாகும்.

வரி ஒதுக்குச் சான்றிதழ்களுக்கு வழங்கப்பட்ட 3 சதவீத வட்டி வீத மானது, 1970 மாச்சு 31 இல் அவ்வீதம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து, மாற்றமின்றித் தொடர்ந்திருந்து வந்துள்ளது.

### (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள்

1971/72 நிதியாண்டின் 15 மாத காலப் பகுதியில் அரசாங்கத்துக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட முற்பணங்கள்[1] ரூ 400 இலட்சத்தால் அதிகரித்தன. முன்னைய நிதியாண்டின்போது (12 மாதங்களைக் கொண்டது) இவ்வதிகரிப்பு ரூ. 50 இலட்சமாகவிருந்தது. பன்னாட்டு நாணய நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய இலங்கையின் அனுமதிப் பங்குக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக, முற்பணமாக வழங்கப்பட்ட ரூ 10 இலட்சத்தையும், 1971/72 இன் போது வழங்கப்பட்ட முற்பணங்கள் உள்ளடக்கியுள்ளன.

1972 திசெம்பர் இறுதியில், அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கி முற்பணங்களின் தொகை ரூ. 4,200 இலட்சமாகும். இத்தொகை 1971 செத்தெம்பர் 30 இல் முடிவுற்ற முன்னைய நிதியாண்டின் இறுதியில் ரூ. 3,800 இலட்சமாக இருந்தமை ஒப்பிடத்தக்கது. பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய இலங்கையின் உறுப்புரிமைக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடன்கள், 1970/71 இன் நிதியாண்டின் இறுதியில் ரூ. 930 இலட்சமாக விளங்கியதோடு, ஆய்வுக்குரிய ஆண்டின் இறுதிவரையிலும் அதே மட்டத்தில் தொடர்ந்திருந்தன.

### வெளிநாட்டுப் படுகடன்

1972 திசம்பர் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் (மொத்தம்)[2] கூட்டுத்தொகை ரூ. 23,930 இலட்சமாகும். ஆய்வுக்குரிய நிதியாண்டின்போது மொத்த வெளிநாட்டுப்படுகடனின் அதிகரிப்பு ரூ. 5,920 இலட்சமாகும்.[3] 12 மாத விகிதசம அடிப்படையில், இவ்வதிகரிப்பு ரூ. 4,740 இலட்சமாகும்.[4] ஒப்பிடுகையில், முன்னைய ஆண்டில் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்பு ரூ. 2,220 இலட்சமாகவிருந்தது.

1971/72 நிதியாண்டின்போது, பயன்படுத்தப்பட்ட ரூ. 5,230 இலட்சந் தொகையான வெளிநாட்டுக் கடன்களில், ரூ. 1,170 இலட்சம்[5] (அல்லது 22 சதவீதம்) செயற்றிட்டக் கடன்களாகவும், ரூ. 4,070 இலட்சம் (அல்லது 78 சதவீதம்) செயற்றிட்டமல்லா (பண்டம்)க் கடன்களாகவுமிருந்தன. மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெற்ற ரூ. 500 இலட்சம் பணக் கடனைத் தவிர்க்கும் போது, செயற்றிட்டக் கடன்களின் தொகை ரூ. 670 இலட்சமாகக் குறைவுறும்.

1. நாணய விதிச் சட்டத்தின் 89 ஆம் பிரிவின் கீழ் உள்ளவாறு.
2. திருப்பிக் கொடுப்பனவுகள் நீங்கலாக; ஆனால் ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியத்துக்கான உதவுதொகைகளைக் கழிப்பதற்கு முன்னுள்ளவை;
3. நாணய மீள இணைப்பு காரணமாகப் படுகடனிலேற்பட்ட, ரூ. 2,210 இலட்ச அதிகரிப்பு, இலங்கை ரூபாவில் காட்டப்பட்டு, இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. இந்த அதிகளவிலான அதிகரிப்புக்கான காரணங்கள் 182ஆம் பக்கத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.
5. மத்திய வங்கி, பொதுப்படுகடன் திணைக்களத்தினால் செயற்றிட்டக் கடனாக வகையீடு செய்யப்பட்டதும், மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெற்றதுமான ரூ.500 இலட்சம் பணக் கடனை உள்ளடக்குகிறது.

## அட்டவணை II (எ) 12

## வெளிநாட்டு நிதியின் மூல மதிப்பீடுகளும் உண்மையாகப் பெற்றவைகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உதவிகளின் வகை | 1971/72 (15 மாதங்கள்) | | 1966/67 | | 1967/68 | | 1968/69 | | 1969/70 | | 1970/71 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை | மூல மதிப்பீடுகள் | உண்மையானவை |
| தன்கொடைகள் உட்பட செயற்றிட்டக் கடன் ... | 162.0† | 116.6† | 125.0 | 61.7 | 125.0 | 67.0 | 213.0 | 113.4 | 176.8 | 116.1 | 111.3 | 201.0* |
| செயற்றிட்டமல்லாக் (பண்டம்) கடன் ... | 500.0 | 406.6 | 150.0 | 193.9 | 150.0 | 178.9 | 263.0 | 312.2 | 325.0 | 229.1 | 525.0 | 169.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* மக்கள் சீனக் குடியரசினால் வழங்கப்பட்ட ரூ. 1,000 இலட்சம் பணக் கடனையும் உள்ளடக்கும்.

† மக்கள் சீனக் குடியரசினால் வழங்கப்பட்ட ரூ. 500 இலட்சம் பணக்கடனையும் உள்ளடக்கும்.

முன்னைய ஆண்டில் செயற்றிட்டக் கடன்களாகவும், செயற்றிட்டமல்லா (பண்டம்)க் கடன்களாகவும் பெறப்பட்ட வளங்கள் முறையே ரூ. 1,410 இலட்சமாகவும்,[1] (அல்லது 46 சதவீதம்) ரூ. 1,690 இலட்சமாகவும் (அல்லது 54 சதவீதம்) இருந்தன. ஆய்வுக்குரிய ஆண்டின்போது, வெளிநாட்டு வளங்களின் பயன்படுத்தல் அதிகரிப்பு, பயன்படுத்திய பண்ட உதவித்தொகை அதிகரித்தமையினாலேயே முக்கியமாக ஏற்பட்டதாகும்.

வரவுசெலவுதிட்ட நிதியின் முக்கிய மூலமாக வெளிநாட்டு நிதி பொதுவாகவும், செயற்றிட்டமல்லா (பண்டம்)க் கடன்கள் குறிப்பாகவும் அண்மையாண்டுகளில் இருந்து வந்துள்ளன. வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்காக, வெளிநாட்டு நிதியின் கிடைக்கத்தக்க பெறுகைகள், அவற்றின் பயன்படுத்துதல் தொடர்பான மிகத் திருத்தமான முற்கூறலினைச் செய்யவேண்டிய தேவை பற்றி 1971ஆம் ஆண்டறிக்கையில் கூறப்பட்டது[2]. 1971/72இலும் வெளிநாட்டு நிதியின் உண்மையான பெறுகைகள் வரவுசெலவுத்திட்டத்தில் எதிர்பார்த்ததை விடக் குறைந்துள்ளன. குறிப்பாக, செயற்றிட்ட உதவிகளின் உண்மையான பயன்பாடு, வரவுசெலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகைகளைவிட, கடந்த சிலவாண்டுகளாகத் தொடர்ச்சியாகக் குறைந்து வந்துள்ளது.[3]

குறிப்பிட்ட நிதியாண்டில் வெளிநாட்டு நிதி தொடர்பாக வரவுசெலவுத் திட்டத்தில் மதிக்கப்பட்ட மூலமதிப்பீடுகளையும். அவ்வாண்டுகளில் உண்மையாகப் பெற்றவைகளையும் கீழேயுள்ள அட்டவணை 11 (எ) 12, 1966/67 தொடக்கம் காட்டுகின்றது.

1971/72இல் வெளிநாட்டுக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவு ரூ. 1,550 இலட்சமாகும். இதனில் அரைப் பங்கு செயற்றிட்டக் கடன்கள் தொடர்பாகவும், மிகுதி அரைப்பங்கு செயற்றிட்டமல்லா (பண்டம்)க் கடன்கள் தொடர்பாகவும் செய்யப்பட்டன. இத்திருப்பிக் கொடுப்பனவுகளை நீக்கின், மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ. 5,920 இலட்சத்தால் அதிகரித்தது. ஸ்ரேலிங் கடனுக்குரிய "கடன்கரைப்பு நிதிய" த்திலேற்பட்ட ரூ. 70 இலட்சம் அதிகரிப்பைக் கணக்கிலெடுப்பின் தேறிய பொறுப்புக்கள் ரூ. 5,850 இலட்சத்தால் அதிகரித்தன.

ஸ்ரேலிங், செயற்றிட்ட, செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன் ஆகிய கடன்கள் தொடர்பான திருப்பி எடுப்பனவுகள், திருப்பிக் கொடுப்பனவுகள் கடன் பொறுப்புக்கள் பற்றிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணை 11(எ) 13 இற் கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. மக்கள் சீனக் குடியரசிடமிருந்துபெற்ற ரூ. 1,000 இலட்சம் பணக் கடனை உள்ளடக்குகின்றது.
2. 1971ஆம் ஆண்டறிக்கை பக்கம் 193
3. எவ்வாறிருப்பினும், 1970/71இல் செயற்றிட்டக் கடனுகப் பெறப்பட்ட ரூ. 1000இலட்சம் பணக்கடனையும் சேர்த்தால், அவ்வாண்டுக்கான உண்மையான பெறுகைகள் மூல மதிப்பீட்டைக் கூடுதலானதாக்கும்.

## அட்டவணை II (எ) 13

### வெளிநாட்டுக் கடன்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்களின் வகை | 1971/72 இல் எடுப்பனவுகள் | 1971/72 இல் திருப்பிக் கொடுப்பனவுகள் | 1971/72 இல் அதிகரிப்பு | 1972 திசெம்பரில் உள்ளபடியான பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. **ஸ்ரேர்லிங் கடன்கள்** | — | — | 6.6 | 78.0(அ) |
| கடன் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு உலக நாணய மீள இணைப்பினால் ஏற்பட்டதாகும் | | | 6.6 | |
| 2. **செயற்றிட்டக் கடன்கள்** | 116.6 | 77.4 | 95.6 | 705.5 |
| 2.01 ப. பு. அ. வ. | 0.7 | 13.7 | -12.9 | 131.0 |
| 2.02 சேர்மன் சனநாயகக் குடியரசு | 0.7 | 24.1 | -23.4 | 94.6 |
| 2.03 ஐ. சோ. சோ. கு. | 3.1 | 12.1 | - 9.0 | 68.8 |
| 2.04 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | 1.0 | 9.5 | - 8.5 | 68.9 |
| 2.05 கனடா (இ) | 0.1 | 5.7 | - 5.6 | 29.0 |
| 2.06 மக்கள் சீனக் குடியரசு | 50.0 | 5.5 | 44.5 | 167.8 |
| 2.07 ஐ. அ. நா. (ஈ) | — | 0.5 | - 0.5 | 23.4 |
| 2.08 தென்மாக்கு | 5.0 | — | 5.0 | 20.2 |
| 2.09 பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம் | 21.5 | — | 21.5 | 48.9 |
| 2.10 ஐக்கிய இராச்சியம் | 11.9 | 4.2 | - 7.7 | 11.5 |
| 2.11 நாஷனல் அன்ட் கிறின்லேஸ் வங்கி | — | — | — | 3.2 |
| 2.12 போலாந்து மக்கட் குடியரசு | — | 1.6 | - 1.6 | 0.7 |
| 2.13 யூகோசிலாவிய மக்கட் கூட்டாட்சிக் குடியரசு | — | 0.3 | - 0.3 | 1.1 |
| 2.14 பிரான்சு | 0.2 | 0.2 | — | — |
| 2.15 ஆசிய அபிவிருத்தி வங்கி | 22.4 | — | 22.4 | 33.3 |
| கடன் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு உலக நாணய மீள இணைப்பினால் ஏற்பட்டதாகும். | | | 56.3 | |
| 3. **செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள்** | 406.6 | 77.8 | 490.0 | 1,609.0 |
| 3.01 ஐ. அ. நா. (உ) | 136.5 | 8.5 | 128.0 | 564.3 |
| 3.02 ஐக்கிய இராச்சியம் | 38.9 | 5.2 | 33.7 | 289.9 |
| 3.03 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | 20.4 | — | 20.4 | 198.3 |
| 3.04 யப்பான் | 83.7 | 20.6 | 63.1 | 219.6 |
| 3.05 பிரான்சு | 33.0 | 23.4 | 9.6 | 73.7 |
| 3.06 இந்தியா | 23.1 | 11.7 | 11.4 | 69.2 |
| 3.07 கனடா | 27.6 | — | 27.6 | 74.8 |
| 3.08 மக்கட் சீனக் குடியரசு | 43.5 | 5.4 | 38.1 | 106.7 |
| 3.09 இத்தாலி | — | 3.0 | - 3.0 | 12.5 |
| கடன் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு உலக நாணய மீள இணைப்பினால் ஏற்பட்டதாகும். | | | 161.1 | |
| 4. **கூட்டு மொத்தம்** | 523.2 | 155.2 | 592.2 | 2,392.5 (அ) |

மூலம்: இலங்கை த்திய வங்கி.

(அ) இத்தொகையில் ரூ.400 இலட்சம், ஸ்ரேலிங்கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களால் உள்ளடக்கப்படுகின்றன.

(ஆ) கிறடிற்றன்ஸ்டேரல்ற் பேர்விடரேபு கடன்களை உள்ளடக்கும்.

(இ) ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கொடுகடன்களை உள்ளடக்கும்.

(ஈ) (I) பன்னாட்டுக் கூட்டுறவு நிருவாகம், (II) அபிவிருத்திக் கடன் நிதியம் ஆகியனவற்றிலிருந்து பெற்ற கடனை உள்ளடக்குகிறது.

(உ) பன்னாட்டு அபிவிருத்திக்கான முகவரிடமிருந்து பெறப்படும் கடன்களையும், பன்னாட்டுக் கூட்டுறவு நிருவாகத்திடமிருந்து பெறப்படும் கடன்களையும், பொதுச் சட்டம் 480 கடன்களையும் உள்ளடக்கும்.

### (அ) ஸ்ரேலிங் கடன்கள்

ஆய்வுக்குட்பட்ட நிதியாண்டுக் காலப் பகுதியின்போது, ஸ்ரேலிங் கடன்களின்பேரில் கடன்பாடுகளோ திருப்பிக் கொடுப்பனவுகளோ இடம்பெறவில்லை. எவ்வாறிருப்பினும் முன்னைய நிதியாண்டினிறுதியில், ரூ. 710 இலட்சமாக விருந்த, வெளிநின்ற மொத்தப் படுகடனுனது, 1971/72இன்போது நாணய மீளஇணைப்பின் விளைவாக ரூ. 70 இலட்சத்தால் அதிகரித்தது. எனவே, 1972 திசெம்பர் இறுதியில், ஸ்ரேலிங் கடன் பொறுப்புக்கள் ரூ. 780 இலட்சமாக விருந்தது இவ்வாறிருந்தபோதும், ஸ்ரேலிங் கடனுக்குரிய, ''கடன்கரைப்பு நிதியத்தில்'' ஏற்பட்ட ரூ. 70 இலட்சம் அதிகரிப்பினுல், வெளிநின்ற தேறிய படுகடனுனது, ரூ. 710 இலட்சத்திலிருந்தது.

### (ஆ) செயற்றிட்டக் கடன்கள்

1971/72இல் பயன்படுத்தப்பட்ட செயற்றிட்டக் கடன்கள் ரூ. 1,170 இலட்சமாகும்.[1] ரூ. 770 இலட்சம் திருப்பிக் கொடுப்பனவுகளை [2] நீக்கினுல், செயற்றிட்டக் கடன்களின் கீழ்ச் செய்யப்பட்ட கடன்பாட்டுப் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு ரூ. 400 இலட்சமாகும். எனினும், உலக நாணய மீளஇணைப்பின் விளைவாகக் கடன் பொறுப்பிலேற்பட்ட, இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ள, ரூ. 560 இலட்சம் அதிகரிப்பின் காரணமாக, செயற்றிட்டக் கடன் பொறுப்புக்கள் ரூ. 960 இலட்சத்தினுல் அதிகரிக்கப்பட்டன. முன்னைய நிதியாண்டின்போது ரூ. 1,410 இலட்சங்கொண்ட பெறுகையும்[3] ரூ. 530 இலட்சங் கொண்ட திருப்பிக் கொடுப்பனவும் சேர்ந்து அத்தகைய பொறுப்புக்களை ரூ. 880 இலட்சத்தால் அதிகரிக்கச் செய்தன.

ஆய்வுக்குரிய ஆண்டுக் காலப்பகுதியின்போது ஆசிய அபிவிருத்தி வங்கியும், பன்னுட்டு அபிவிருத்திச் சங்கமும், பெறப்பட்ட செயற்றிட்ட உதவிகளின் முக்கிய உதவுநர்களாக விளங்கின. இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் அத்தகைய உதவித் தொகை ரூ. 220 இலட்சமாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்ற செயற்றிட்ட உதவியில், ரூ. 120 இலட்சம் உடவளவைச் செயற்றிட்டத்துக்காகவும், ரூ. 90 இலட்சம் எண்ணெய்க் கப்பல் தங்குமிடச் செயற்றிட்டத்துக்காகவும் பெறப்பட்டது. பன்னுட்டு அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து பெற்ற உதவி, மகாவலி செயற்றிட்டத்துக்கான ரூ. 170 இலட்சத்தையும், உயர்நில நீர்ப்பாசனச் செயற்றிட்டம், வடிகால் நிலச் சீர்திருத்தச் செயற்றிட்டம் ஆகிய ஒவ்வொன்றுக்குமான ரூ. 20 இலட்சத்தையும் கொண்டிருந்தது.

1971/72இன் நிதியாண்டின் இறுதியில், பயன்படுத்தப்பட்ட செயற்றிட்டக் கடன்களின் பொறுப்புக்கள் ரூ. 7,060 இலட்சமாக விளங்கின. இது வெளிநின்ற

---

1. மக்கள் சீனக்குடியரசிடமிருந்து பெற்ற ரூ. 500 இலட்சம் பணக்கடனை உள்ளடக்குகின்றது.
2. வெளிநாட்டுக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுகள் மீது, கொடுக்கவேண்டிய வெ. செ. உ. சான்றிதழ்கள் இங்கு கணக்கிலெடுக்கப்படாமையினுல், இவ்வெண் தொகை, அட்டவணை 11 (எ)
2. இலும், பின்னிணைப்பு 11இன் அட்டவணை 31 இலும் உள்ள தொடர்பான எண்தொகைகளுடன் ஒத்துவராது.
3. மக்கள் சீனக்குடியரசிடமிருந்து பெற்ற ரூ. 1,000 இலட்சம் பணக்கடனை உள்ளடக்குகின்றது.

மொத்த வெளிநாட்டுப் படுகடனின் 30 சதவீதத்தைப் பிரதிபலித்தது. முன்னைய நிதியாண்டினிறுதியில் இக்கணக்கில் வெளிநின்ற தொகை ரூ. 6,100 இலட்சமாகும். இத்தொகை, அந்நிதியாண்டின் இறுதியில் வெளிநின்ற மொத்தப் படுகடனில் 34 சதவீதமாகும்.

(இ) செயற்றிட்டமல்லாக் (பண்டம்) கடன்கள்

1971/72இல் பண்ட உதவிப் பயன்பாட்டுத் தொகை ரூ. 4,070 இலட்சமாகும். 12 மாத விகிதசம அடிப்படையில் இத்தொகை ரூ. 3,250 இலட்சமாக விளங்க, முன்னைய ஆண்டின்போது ரூ. 1,690 இலட்சம் பயன்படுத்தப்பட்டிருந்தது. திருப்பிக் கொடுப்பனவுகள் நீங்கலாக, பண்ட உதவித் திட்டத்தின் கீழ்ப் பெறப்பட்ட கடன் பொறுப்புக்களின் அதிகரிப்பு ரூ. 4,900இலட்சமாகும்.[1] திருப்பிக் கொடுப்பனவுகள் இருந்த போதும், பொறுப்புக்களின் அதிகரிப்பு இவ்வுதவிப் பயன்படுத்தலினை விடக் கூடுதலாக இருந்தது. இந்நிலைமை, உலக நாணய மீள இணைப்பின் விளைவாகக் கடன்பொறுப்புக்களில் (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) ஏற்பட்ட ரூ. 1,610 இலட்சம் அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டதாகும்.

கோதுமை மா, உரம், கைத்தொழில் மூலப் பொருட்களும் எந்திரங்களும், மோட்டார் உதிரிப்பாகங்கள், இழுபொறிகள் (டிராக்டர்), கருவிகளும் உதிரிப்பாகங்களும் என்பன 1971/72 நிதியாண்டில் பண்ட உதவித் திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட முக்கிய இறக்குமதிகளாகவிருந்தன. இத்தகைய உதவிகளின் முக்கிய உதவுநர்களாக, ஐக்கிய அமரிக்க நாடுகள் (ரூ. 1,370 இலட்சம்), யப்பான் (ரூ. 840 இலட்சம்), மக்கள் சீனக் குடியரசு (ரூ. 440 இலட்சம்) பிரான்சு, ரூ. 330 இலட்சம்) கனடா (ரூ. 280 இலட்சம்), இந்தியா (ரூ. 230 இலட்சம்), சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ரூ. 200 இலட்சம்) ஆகியன இருந்தன.

1971/72 நிதியாண்டின் இறுதியில் செயற்றிட்டமல்லாக் (பண்டம்) கடன்களின் பேரில், வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களின் தொகை ரூ. 16,090 இலட்சமாகும். முன்னைய நிதியாண்டின் இறுதியில் இத்தொகை ரூ. 11,190 இலட்சமாக இருந்தது.

ஆய்வுக்குரிய ஆண்டில், இலங்கை அரசாங்க வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிக்கு[2] ரூ. 3,940 இலட்சம் வரவு வைக்கப்பட்டு, வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்காக அதேயளவு தொகை எடுப்பனவு செய்யப்பட்டது. இதனால், இந்நிதியாண்டின் இறுதியில் சிறிதளவு மீதியே நிதியத்திலிருந்தது. 12 மாத விகிதசம அடிப்படையில், வரவு வைக்கப்பட்டதும் எடுப்பனவு செய்யப்பட்டது

1. வெளிநாட்டுக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுகளின் மீது கொடுபடவேண்டிய வெ. செ. உ. சான்றிதழ்கள் இங்கு கணக்கிலெடுக்கப்படாமையினால் இவ்வெண்தொகைகள், அட்டவணை 11 (எ) 2 இலும் பின்னிணைப்பு 11 இன் அட்டவணை 31 இலுள்ள தொடர்பான எண்தொகைகளுடன் ஒத்துவரா.

2. பின்னிணைப்பு 11இல் உள்ள அட்டவணை 43 உக்குரிய குறிப்பைப் பார்க்கவும்.

மான தொகை ரூ. 3,150 இலட்சமாகவிருக்கும். ஒப்பிடுகையில், முன்னைய நிதியாண்டின்போது வரவு வைக்கப்பட்டதும், எடுப்பனவு செய்யப்பட்டதுமான தொகை ரூ. 2,830 இலட்சமாகவிருந்தது.

செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்களின் கீழ்ச் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரில் உண்டாக்கப்பட்ட ரூபா நிதியங்கள் தொடர்பானதும், வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்கான அவற்றின் பயன்படுத்தல் தொடர்பானதுமான தரவுகள் பின்னிணைப்பு 11 இலுள்ள அட்டவணை 43 இற்றரப் பட்டுள்ளன.

**வெளிநாட்டு நிரம்பல் செய்வோர் கொடுகடன்[1]**

அரசாங்கத் திணைக்களங்களினூற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரிலுள்ள அரசாங்கத்தின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள், 1971/72 நிதியாண்டின் இறுதியில் ரூ. 820 இலட்சமாக விளங்கின. முன்னைய நிதியாண்டின் இறுதியில் அத்தகைய பொறுப்புக்கள் ரூ. 650 இலட்சமாகவிருந்தன. எனவே, 1971/72 நிதியாண்டின் 15 மாத காலப் பகுதியின்போது, இக்கணக்கிலுள்ள வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 170 இலட்சத்தால் அதிகரித்தன. இக்காலப் பகுதியின் இறுதியில் வெளிநின்ற மொத்தப் பொறுப்புக்களில் இலங்கை அரசாங்கப் புகைவண்டிப் பகுதியும், அஞ்சல் தொலை தொடர்புத் திணைக்களமும் முறையே ரூ. 450 இலட்சத்துக்கும் (அல்லது 54 சதவீதம்) ரூ. 340 இலட்சத்துக்கும் (அல்லது 42 சதவீதம்) வகை கூறின.

**கடன்கரைப்பு நிதியங்கள்**

1971/72இன் இறுதியில் ஸ்ரேலிங் கடனுக்குரிய 'கடன்கரைப்பு நிதியத்தினதும்' ரூபாக் கடனுக்குரிய 'கடன்கரைப்பு நிதியத்தினதும்' அண்ணளவான சந்தைப் பெறுமதி முறையே ரூ. 400 இலட்சமாகவும், ரூ. 8,300 இலட்சமாகவுமிருக்க, முன்னைய நிதியாண்டின் இறுதியில் அவை முறையே ரூ.330 இலட்சமாகவும், ரூ. 6,420 இலட்சமாகவுமிருந்தன.

1971/72இல் ஸ்ரேலிங் கடனுக்குரிய 'கடன்கரைப்பு நிதியத்தின்' சந்தைப் பெறுமதி ரூ. 70 இலட்சத்தால் அதிகரித்தது. இது புதிய உதவு தொகைகளை முதலீட்டம் செய்தமையினூலும் (ரூ. 10 இலட்சம்) முந்திய முதலீட்டங்களிலிருந்து பெற்ற வட்டி வருவாயினூலும் (ரூ. 20 இலட்சம்) முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பாலும் (ரூ. 40 இலட்சம்) ஏற்பட்டதாகும்.

ரூபாக் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களின்' சந்தைப் பெறுமதி ரூ. 1,880 இலட்சத்தால் அதிகரித்தது. புதிய முதலீட்டங்களினூலும் (ரூ. 1,690 இலட்சம்) முந்திய முதலீட்டங்களிலிருந்து பெற்ற வட்டி வருவாயினூலும் (ரூ. 610 இலட்சம்) முந்திய முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பாலும்

---

1. அரசாங்கத் திணைக்களங்களினூற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பேரிலுள்ள வெளிநாட்டு நிரம்பல் செயவோர் கொடுகடன் பொதுப்படுகடனின் பகுதியாகச் சேர்க்கப்படவில்லை.

(ரூ. 160 இலட்சம்)ஏற்பட்ட அதிகரிப்பு,கடன்களின் திருப்பிக்கொடுப்பனவினுல் (ரூ. 580 இலட்சம்) ஓரளவு எதிரீடு செய்யப்பட்டமையின் கூட்டுவிளைவாக, இத்தேறிய அதிகரிப்பு ஏற்பட்டது.

**கூட்டு முதலீட்ட நிதியம்**

கூட்டு முதலீட்ட நிதியம் என்று வழங்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டு நாணயச் சபையின் நம்பிக்கைப் பொறுப்பின் கீழ், 1972 செத்தெம்பர் 1 தொடக்கம் செயற்படத் தொடங்கியது. அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான கடன்கரைப்பு நிதியங்களின் கணக்கு வைப்பு முறைகளையும், முதலீட்டத்தினையும் சிக்கனமாக ஒழுங்கு செய்தலே இதன் தாபிப்புக்கான நோக்கமாகும். 1972 செத்தெம்பரில் இதன் தாபிப்பின் போதிருந்த கடன்கரைப்பு நிதியங்களின் எல்லா முதலீட்டங்களையும் இக்கூட்டு முதலீட்ட நிதியம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் கடமைகள் பின்வருமாறு (அ) அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான கடன்கரைப்பு நிதியங்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல் (ஆ) அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட கடன் இருப்புக்கள், பிணைகள், திறைசேரி வைப்புக்கள் என்பனவற்றில், நிதியத்தின் பணத்தினை முதலீட்டஞ்செய்தல் (இ) நிதியத்தினுல் செய்யப்படக்கூடிய முதலீட்டங்களைப் பணமாக்குதல் அல்லது விற்பனவு, கொள்வனவு மூலமாக அத்தகைய முதலீட்டங்களை மாற்றுதல் (ஈ) கடன் இருப்புக்கள் அல்லது பிணைகளினது மீட்புக்காக கடன்கரைப்பு நிதியத்துக்கு அவ்வப்போது, நிதி தேவைப்படும் போது, நிதியத்திடம் வைப்பாக உள்ள கடன்கரைப்பு நிதியங்களின் பணத்தினை மீளளித்தல்.

**5. அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களினுற் பெறப்பட்ட கடன்பாடு**

**(அ) தேசிய வீடமைப்பு நிதியம்**

1971/72இன் நிதியாண்டின்போது, தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் வெளியீடு எதுவுமிருக்கவில்லை. இருந்தபோதும், 1971 திசெம்பர் 1 இலும், 1972 யூன் 1இலும் முறையே ரூ. 50 இலட்சம், ரூ. 100 இலட்சம் தொகையான தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுகள் இரண்டு இருந்தன. எனவே, முன்னைய நிதியாண்டினிறுதியில் ரூ. 1,060 இலட்சமாக விளங்கிய, வெளியிடப்பட்டதும், வெளிநின்றதுமான தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் மொத்தம் 1972 திசெம்பர் இறுதியில் ரூ. 910 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. தொகுதிக் கடன்களின் அங்கீகரிக்கப்பட்ட வெளியீட்டெல்லையாகிய ரூ.2,200இலட்சம் இந்நிதியாண்டின் போது, மாற்றமின்றித் தொடர்ந்திருந்தது. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் மீட்புக்காகத் தொடக்கப்பட்ட கடன்கரைப்பு நிதியங்களின் அண்ணளவான சந்தைப் பெறுமதி, 1972 திசெம்பர் இறுதியில் ரூ. 340 இலட்சமாக விளங்கியது.

(ஆ) அரச ஈட்டு வங்கி

1971/72 நிதியாண்டின்போது, அரச ஈட்டு வங்கித் தொகுதிக் கடன்களின் வெளியீடோ, திருப்பிக் கொடுப்பனவோ இருக்கவில்லை. எனவே, வெளியிடப் பட்டதும் வெளிநின்றதுமான தொகுதிக்கடன்கள் 1970/71 நிதியாண்டின் இறுதியில் இருந்த மட்டமாகிய ரூ. 320 இலட்சத்திலேயே 1971/72 நிதியாண்டின் இறுதியிலும் தொடர்ந்திருந்தது.

6. வரவு செலவுத்திட்டம் 1973

1973 ஆம் ஆண்டு நிதி ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டமானது 1972 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி தேசிய அரசப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, 1972 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி அங்கீ கரிக்கப்பட்டது. முந்திய ஆண்டுகளைப் போலல்லாமல், இந்நிதியாண்டிற்குரிய வரவு செலவுத்திட்டமானது, கலண்டர் ஆண்டையே நிதியாண்டாகப் பயன் படுத்தியமையால், 1973 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள 12 மாத காலப் பகுதியினை உள்ளடக்குகிறது.

1973 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டமானது, ஐந்து ஆண்டுத் திட்டத்தில் கூறப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உண்மையாக முயற்சி எடுத்துள்ளது என நிதி மந்திரி தம்து வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டார். வரவு செலவுத்திட்ட உரையானது, முதலீட்ட திட்டத்திற்கு நிதியீட்டம் செய்வதற்கும், நேரடியாகவும், மறைமுகமாகவும் விளைதிறனை அதி கரிப்பதற்கும் வேண்டிய மேலதிக மூலவளங்களைத் திரட்டுவதற்குப் பலவழிகளை எடுத்துக் காட்டியுள்ளது. இறுதியில் இவ்வாறாக, 5 ஆண்டுத் திட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கு, மூலவளங்கள் திரட்டப்படும். வரவு செல வுத்திட்டத்தில் எடுத்துக் கூறப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தின் மொத்த செலவீட்டினை கிடைக்கக்கூடிய மூலவளங்களுக்குள் மட்டுப்படுத்துவதுடன், குறைவினை நிதியீட்டம் செய்வதற்கு வங்கி முறையினை நாடுவதையும் மட்டுப் படுத்துவதன் மூலம் கணிசமான அளவு நிதி சம்பந்தமான ஒழுங்கினை ஏற்படுத் தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1971/72 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு மட்டுமே, மரபு ரீதியாக தரப்படுத்தப்பட்ட வாக்கு முறைக்குப் பதிலாகக் கொண்டுவரப் பட்ட திட்டமிட்ட வரவு செலவுமுறை, 1973 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும் 19 அமைச்சுகளுக்கான மதிப்பீடுகளையும் உள்ளடக்கக்கூடியள வுக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகளினால் விதந்துரைக்கப்பட்ட நியம முறைப்பாகுபாட்டினைப் பயன்படுத்துவதன் மூலம், சிக்கனச் செயல்பாட்டு அடிப்படையில் 1971/72 ஆம் ஆண்டினைப் போல், வருமான மதிப்பீடுகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

**பொதுவான வரவுசெலவுத்திட்ட நிலைமை**

வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் அங்கீகாரம் பெற்ற புதிய வருமானம் செலவு பற்றிய எடுத்துரைப்புகளையும் உள்ளடக்கி, 1973 ஆம் ஆண்டு நிதி ஆண்டிற்குரிய பொதுவான வரவு செலவுத்திட்ட நிலைமையினை அட்டவணை II (எ) 14 சுருக்கமாகக் காட்டுகின்றது.

வரவுசெலவுத்திட்ட உரைக்கு முன்பு, தேசிய அரசப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் மதிப்பீடுகள் கொண்டுள்ளவாறு, "வரவு செலவுத்திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகள்" என்ற அடைப்புக்கோடானது வருமானம், செலவு, குறை பற்றிய எண் தொகைகளைக் காட்டுகின்றது. இது புதிய நிதியாண்டிற்குரிய, வரவுசெலவுத்திட்டத்திற்கு முந்திய வீதத்தில் வரியிடுவதன் மூலமும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமும் சேரக்கூடிய மொத்த வருமானத்தைக்காட்டுவதுடன், செலவினம் பற்றிய எண்தொகைகள் கிட்டத்தட்ட முழு மூலதனத்தையும் அரசாங்கத்தினுடைய நடைமுறைச் செலவுத்திட்டத்தினையும் பிரதிபலிக்கின்றன.

"அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்" என்று குறிக்கப்பட்ட அடைப்புக் கோடானது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, வருமானம், செலவு ஆகியவற்றின் நிதியீட்டம் பற்றிய எடுத்துரைப்புகளைக் குறிக்கின்றது.

1971/72 ஆம் ஆண்டிற்குரிய உண்மையான விகிதசம்மான வருமானத்திலும் பார்க்க, 1973 ஆம் ஆண்டிற்குரிய ரூ. 38,800 இலட்சம் மொத்த வருமானம் புதிய எடுத்துரைப்புகளையும் உள்ளடக்கி, 18 சதவீதத்தால் உயர்ந்து காணப்படும் என எதிர்நோக்கப்படுகிறது. அத்துடன், 1973 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கு முன் காணப்பட்ட மதிப்பீடுகளுடன், 15 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகிறது.

எதிர்பார்க்கப்பட்ட குறைச்செலவுக்கு ஏற்றவாறு சீராக்கப்பட்ட மொத்தச் செலவு ரூ. 51,610 இலட்சம் தொகையாகின்றது. இது 1971/72 ஆம் ஆண்டிற்குரிய உண்மையான விகிதசமமான செலவிலும் 1' சதவீத அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் காட்டப்பட்டவாறான மீண்டெழும் செலவு, வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு முந்திய நிலையிலும் பார்க்க, ரூ. 630 இலட்சத்தினால் அதிகரித்துள்ளது. இது கூலியும் சம்பளமும் அதிகரித்தமையினாலும் (ரூ. 300 இலட்சம்) ஏற்றுமதிப்பயிர்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடியிலும் (ரூ. 260 இலட்சம்) வெளிநாட்டு உரிமைச் சான்றிதழ் வெளிக்கொடுப்பனவுகளாலும், (ரூ. 320 இலட்சம்) அதிகரித்தன. அதிகரித்த இம்மொத்தச்செலவு உணவு மானியச்செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் (ரூ. 250இலட்சம்) ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டது. 1971/72 ஆம் ஆண்டிற்குரிய உண்மையான செலவு விகித சமத்திலும், 1973 ஆம் ஆண்டிற்குரிய மீண்டு எழும் செலவானது 3,410 இலட்சத்தால் உயர்ந்து காணப்படலாம் என எதிர் நோக்கப்படுகிறது.

## அட்டவணை II (எ) 14
## வரவுசெலவுத்திட்ட பொதுப்படையான நிலைமை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | வரவுசெலவுத் திட்டத்துக்கு முந்திய மதிப்பீடுகள் | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|
| 1. மீண்டெழுஞ் செலவுகள் ... ... | 3,776.6 | 3,840.0 |
| கழிவு: குறைச் செலவு[அ] ... ... | 113.3 | 113.3 |
| | 3,663.3 | 3,726.7 |
| 2. மூலதனச் செலவு ... .. | 1,658.3 | 1,691.1 |
| கழிவு: குறைச் செலவு[அ] ... .. | 256.9 | 356.9 |
| | 1,401.4 | 1,334.2 |
| 3. முற்பணக் கணக்கு ... .. | 100.0 | 100.0 |
| 4. மொத்தச் செலவு ... ... | 5,164,7 | 5.160.9 |
| 5. மொத்த வருவாய் ... .. | 3.367,4 | 3,880.4 |
| 6. வரவு செலவுத்திட்டக் குறைவு ... ... | 1,797 | 1,280.5 |
| கழிவு: கடன்கரைப்பு நிதியம் முதலிய வற்றுக்கு உதவு தொகைகள் ... ... | 373.6 | 406.4 |
| 7. தேறிய பணக் குறை ... ... | 1,423.7 | 874.1 |
| 8. வரவு செலவுத்திட்டக் குறைவிற்கு நிதியீட்டம் செய்தல் | | |
| 8.1 வங்கியல்லாத மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுக் கடன்பாடு ... ... | | 600.0 |
| 8.2 நிருவாகக் கடன்பாடுகள் ... ... | | |
| 8.3 வெளிநாட்டு நிதி ... ... | | 50.0 |
| 1. 3. 1. செயற்றிட்டக் கடன்களும் கொடைகளும் ... ... | | 141.0 |
| 8. 3. 2. செயற்றிட்டமல்லா (பண்டம்) கடன்கள் ... ... | | 400.0 |
| 8.4 நிரப்பப்படாத இடைவெளி (வங்கிக் கடன்பாடு) ... | | 89.5[ஆ] |
| 9. தேறிய பணக் குறையை நிதியீட்டஞ் செய்தல் | | |
| 9.1 வங்கியல்லா மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... ... | | 425.1 |
| 9.2 நிருவாகக் கடன்பாடுகள் ... ... | | |
| 9.3 வெளிநாட்டு நிதி ... ... | | 50.0 |
| 9. 3. 1 செயற்றிட்டக் கடன்களும், கொடைகளும் ... ... | | 38.0 |
| 9. 3. 2 செயற்றிட்டமல்லா (பண்டம்) கடன்கள் .. ... | | 271.5 |
| 9.4 நிரப்பப்படாத இடைவெளி(வங்கிக் கடன்பாடு) ... ... | | 89.5[ஆ] |

அ வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னரான மதிப்பீடுகளின்படி மீண்டெழுஞ் செலவினத்துக்கும் மூலதனச் செலவினத்துக்கும் முறையே 3%, 20% குறைச்செலவுகளுக்கு இடமளிக்கப்பட்டன. குறைச்செலவானது மூலதனச் செலவிலிருந்து, கடன்கரைப்பு நிதியங்கள், பொதுப்படுகடனுக்கான நேரடி மீளக்கொடுப்பனவுகள் என்பவற்றைக் கழித்துக் கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படியான மூலதன செலவினக் குறைச்செலவு, மூலதனச் செயற்றிட்டங்களில் பன்முகப்படுத்தலின்மூலம் எதிர்பார்க்கப்படும் பொருளாதாரச் சிக்கனமான ரூ. 1,000 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

ஆ எனினும், பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ரூ. 1,000 இலட்சம் கொண்ட வங்கிக் கடன்பாடுகளுக்கு இடமளித்துள்ளன. வங்கிக்கடன்பாட்டில் காட்டப்பட்டுள்ள வீழ்ச்சி, வரவு செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட றப்பரின் அதிகரித்த ஆகக்குறைந்த உற்பத்தியாளர் விலைகளின் பயனாக ஏற்பட்ட ரூ. 100 இலட்சம் கொண்ட செலவு, பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்படாமையினாலேயாகும். இதற்குரிய காரணம், வரவுசெலவுத் திட்டத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் றப்பர் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக இத்தகைய உதவிமீதான மேலதிகச் செலவு அவசியம் அற்றதெனக் கருதப்பட்டமையேயாகும். ஆனால், இன்னும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்பட்ட வங்கியின் கடன்பாடாகிய ரூ. 1,000 இலட்சத்தைக் காட்டுகின்றன.

கடன்கரைப்புநிதிக்கான உதவுதொகைகளையும், பொதுப்படுகடனிற்கான மீளக்கொடுப்பனவும் தவிர ரூ. 9.280 இலட்சமாக எதிர்பார்க்கப்படும் மூலதனச் செலவு 1971/72 ஆம் ஆண்டிற்குரிய உண்மையான விகித மூலதனச் செலவிலும் பார்க்க ரூ. 500 இலட்சம் அதிகமானதாகும் மேலும், 1971/72 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வழக்கத்தைத் தொடர்ந்து, ''உயர் கணக்கியல் தொழிற்பாடுகள்' காரணமாக எதிர்பார்க்கப்பட்ட தேறிய பணக்கொடுப்பனவுகளையிட்டு ரூ. 1,000 இலட்சம் கொண்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்த வருமானத்திலும் பார்க்க மொத்தச்செலவு மிகை ரூ. 12,810 இலட்சம் வரவுசெலவுத்திட்டக் குறையைக் காட்டுகின்றது. இது விகிதசம அடிப்படையில் கணக்கிடப்பட்ட, முந்திய நிதியாண்டிற்குரிய மூல மதிப்பீட்டுக் குறையிலும் பார்க்க ரூ. 1,570 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. இது, 1971/72ஆம் ஆண்டிற்குரிய உண்மையான குறையுடன் ஒப்பிடுமிடத்து ரூ. 850 இலட்சம்வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

ரூ. 12,810 இலட்ச வரவுசெலவுத்திட்டக் குறையில், ரூ. 6,000 இலட்சம் உள்நாட்டு வங்கியல்லாக் கடன்பாடுகளினாலும் ரூ. 500 இலட்சம் நிர்வாகக் கடன்பாடுகளினாலும் ரூ. 5,410 இலட்சம் வெளிநாட்டு நிதியினாலும் நிதியீட்டம் செய்யப்பட்டு, மிகுதியான இடைவெளி ரூ. 900 இலட்சம் வங்கிக் கடன்பாடுகளினாலும் நிதியீட்டம் செய்யப்படும்.

**மேலதிக மூலவளங்களைத் திரட்டுவதற்கான எடுத்துரைப்புக்கள்**

1973ஆம் ஆண்டிற்கு முந்திய வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் நடைமுறையிலிருக்கின்ற வரி வீதங்களின் அடிப்படையிலேயே மேலும் பல வருமான அதிகரிப்புகளையும் சேர்த்துள்ளன[1]. அத்தகைய, அதிகரிப்புகளைவிட வரவுசெலவுத்திட்ட உரை, அநேக புதிய வருமானச் செலவின எடுத்துரைப்புகளையும் எடுத்துக்காட்டியுள்ளது. இத்தகைய வருமானம், செலவினம்பற்றிய எடுத்துரைப்புகள் வருமானத்தில் ரூ. 5,130 இலட்சம் தேறிய அதிகரிப்பினையும், செலவில் ரூ.60 இலட்சம் தேறிய அதிகரிப்பினையும் ஏற்படுத்தும், இத்தகைய எடுத்துரைப்புகளினால், வருமானத்திலும், செலவிலும் ஏற்படும் தாக்கம் கீழேயுள்ள அட்டவணை II (எ) 15 இல் சுருக்கிக்காட்டப்பட்டுள்ளது.

**வரவுசெலவுத்திட்ட உரையில் அடங்கியுள்ள புதிய எடுத்துரைப்புக்கள்**

**1. வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான எடுத்துரைப்புக்கள்**

**(I) வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (வெ.செ.உ சா )**

வெ. செ. உ. சா. வீதம் 55 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. வெ. செ. உ. சா. விற்குள் அடங்கும் இறக்குமதிகள் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் இப்புதிய வீதமே மிகவும் ஏற்கத்தக்க செலாவணி

1. இவை வரவுசெலவுத்திட்ட உரைக்கு முன்னர் 1972 நவெம்பர் 1ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புகையிலை, மதுசார ஸ்பிறிட்டுகள் குடிவகைகள் மீதான அதிகரித்த தீர்வைகளினாலும், சில சாராய வகைகளின் விலைகளின் அதிகரிப்புக்களினாலும் ஏற்பட்ட விளைவுகளையும் உள்ளடக்கவில்லை. இந்த நடவடிக்கைகளின் வருவாய் விளைவுகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டது. ஆனால் இது வரவுசெலவுத் திட்டத்துக்கு முன்னைய மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படவில்லை.

வீதமாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வெ. செ. உ. சா. அறவிடப் படாத அநேக வணிகப்பொருள் இறக்குமதிகள் தற்போது வெ. செ. உ. சா. செலுத்தப்படவேண்டிய இறக்குமதிகளின் பிரிவிற்கு மாற்றப்பட்டன.

**அட்டவணை II (எ) 15**

**வருவாய், செலவு பற்றிய புதிய எடுத்துரைப்புகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| அட்டவணை II (ஊ) 4இலுள்ள விடயங்களைப் பார்க்கவும்* | விடயங்கள் | அதிகரிப்பு (+) அல்லதுகுறைவு(—) | |
|---|---|---|---|
| | | வருவாய் | செலவினம் |
| 1.1.1 | வருமானவரி ... ... ... | + 15 | |
| 1.2.1 | பொது விற்பனவுகளும், தொகை வரியும் | + 44 | |
| 1.2.2(அ) | புகையிலை வரி ... ... ... | + 35 | |
| (ஆ) | தேயிலை வரி ... ... ... ... | — 16 | |
| (இ) | உள்நாட்டில் உற்பத்தியான குடிவகை மீதான வரி ... | + 06 | |
| 1.2.4 | வெ.செ.உ.சா. விற்பனவு மூலமான சேகரிப்புக்கள் ... | + 382 | |
| 1.2.6 | மோட்டார் வண்டிகளின் மீதான விசேட அறவீடு ... | + 10 | |
| 1.2.8 | சாராய விற்பனவு .. ... ... | + 04 | |
| 1.2.9 | சீனி விற்பனவிலிருந்து கிடைக்கும் இலாபம் (அ) ... | + 33 | |
| — | கூலிகளின் அதிகரிப்பு ... ... | | + 30 |
| — | தேயிலை, றப்பர், தெங்குக் கைத்தொழிலுக்கான நிவாரணம் .. ... | | + 36 |
| — | வெ. செ. உ. சா. சென்மதிகள் ... ... | | + 65 |
| — | வருமானவரி செலுத்துநர் இடமிருந்து பங்கீட்டரிசிப் புத்தகங்களை மீளப்பெறுதல் ... ... | | — 25 |
| — | மூலதன செலவுச் சிக்கனங்கள் .. ... | | — 100 |
| | **மொத்த மாற்றம்** ... | + 513 | + 6 |

(அ) 72-11-11 தொடக்கம் தூய்மையாக்கப்பட்ட சீனியின் விலையை இறாத்தலொன்று ரூ. 2.50 ஆக அதிகரிப்பதென எடுத்துரைப்புக் கூறுகிறது. ஆனல் அதைத்தொடர்ந்து 72-12-18 இலிருந்து இறாத்தலொன்று ரூ. 2.00 ஆகவும், 73-01-12 இலிருந்து ரூ. 150 ஆகவும் விலை குறைக்கப்பட்டதனால் இம் மேலதிக வருவாய் கிடைக்காது போகலாம்.

*ஆண்டறிக்கை 1971 பக்கம் 150 ஐப் பார்க்கவும்.

(அ) உணவு இறக்குமதிகள்

அவரையினங்கள், பருப்புவகைகள், மாசிக்கருவாடு, செத்தல் மிளகாய், நொதி, அப்பச்சோடா, பயறுவகைகள், உள்ளி, பெருஞ்சீரகம், நற்சீரகம், மஞ்சள், பேரீச்சம்பழம், நிறையுணவுப் பால்மா.

(ஆ) மற்றைய விடயங்கள்

மரக்கறி, விதைகள், உருளைக்கிழங்கு விதைகள், குளிரினால் உறையிடப்பட்ட விந்திச் சிமிழ், மருந்துவகைகள், விவசாயக் கருவிகள், சிலேற் பென்சில்கள், பள்ளிக்கூடச் சோக்குகள், விஞ்ஞானக் கண்ணுடி வகைகள், அறுவைப்பட்டிகள், பாதுகாப்புப் பட்டிகள், செவிப்புல புலனுக்கும் கருவிகள், உதவிக் கருவிகள், செயற்கை உறுப்புகள், செயற்கைப் பற்கள், கண்கள்.

(இ) பின்வரும் பொருட்களை பதனிட்டுத் தயாரிப்பதற்கு மூலப்பொருட்கள், அடைக்கும் பொருட்கள், இயந்திர வகை, கருவிகள், உறுப்புகள் ஆகியவை தேவைப்படுகின்றன.

(அ) பால்மா, கட்டிப்பால், பால் (குழந்தைகளுக்கான பால் உணவுகள் தவிர);

(ஆ) மருந்து வகைகள்;

(இ) மிருக உணவு வகைகள் (சோளம் நீக்கி).

(ஈ) வெ. செ. உ. சா. திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 1968ஆம் ஆண்டு மே மாதம் 6ஆந் திகதியளவில், ரூ. 1,00,000 இற்குக் குறைவான ஆண்டு மொத்த விற்பனையினைக்கொண்ட கைத்தொழிலாளரால் செய்யப்பட்ட மாற்றமுறுப் பாவனைப்பொருட்களின் உண்மையான இறக்குமதிகள்.

(உ) பின்வரும் நிறுவனங்களால் செய்யப்பட்ட எல்லா இறக்குமதிகளும்:

(i) தேயிலை ஆராய்ச்சி நிலையம்
(ii) இறப்பர் ஆராய்ச்சி நிலையம்
(iii) தென்னை ஆராய்ச்சி நிலையம்
(iv) இலங்கைத் தெங்குச் சபை
(v) தேயிலைப் பிரசாரச் சபை
(vi) தெங்குத் தும்புச் சபை

(ஊ) நிரம்பல் செய்வோரின் கொடுகடனிலான[2] மூலதனத் திருப்பிக் கொடுப்பனவுகளும்.

முக்கிய இறக்குமதிகளான அரிசி, மா, கோதுமைத் தானியம், பசளை, குழந்தைகளுக்கான பாலுணவு, மைசூர் பருப்பு, கருவாடு, கொத்தமல்லி, சீரகம், புத்தகங்கள், புதினத்தாள்களும் சஞ்சிகைகளும், இரட்டையுருளி இழுபொறிகள் என்பன தொடர்ந்தும் வெ.செ.உ.சா. வழங்குவதிலிருந்து தவிர்க்கப்பட்ட பிரிவில் இருந்தன. வெ. செ. உ. சா. வீதம் அதிகரிக்கப்பட்டதனுல், வெ. செ. உ. சா. இவின் மொத்தக் கிடைப்பனவுகள் ரூ. 3,820 இலட்சத்தால் அதிகரிப்பதுடன், வெளிக்கொடுப்பனவுகளும் ரூ. 650 இலட்சத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## II. மாற்றக்கூடிய ரூபாய்க் கணக்குகள்[3]

குறிப்பிடப்பட்ட சில சிறிய, வழமையற்ற ஏற்றுமதிகள்மூலம் ஏற்றுமதியாளர்கள் பெறுகின்ற மொத்த உழைப்பில் ஒரு குறிக்கப்பட்ட சதவீதத்தினை மாற்றக்கூடிய ரூபாய்க்கணக்குவடிவில் விட்டுவைப்பதற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

---

1. 11-11-72இலிருந்து சென்ற காலத்தினையும் உள்ளடக்கியவாறு, மருந்து, மருந்து தயாரிப்பதற்கான பொதிகட்டும் பொருட்கள் என்பனவற்றின்/இறக்குமதிகள் வெ.செ.உ.சா. சான்றிதழிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. 3-1 73ஆந் திகதியுடைய 15/72 இலக்கமுடைய இறக்குமதி, செலாவணி பற்றிய அறிவுத்தலைப் பார்க்கவும்.
2. ஆ, பிரிவிற்கு இறக்குமதிகள் நிறுவனங்களை மாற்றுவதற்கு முன்பு இறக்குமதி உத்தரவுப்பத்திரங்கள் பெற்றிருந்தால், கட்டணங்கள் வெ. செ. உ. சா.வில் இருந்து விலக்கப்படும்.
3. 1-1-73ஆந் திகதியிலிருந்து இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

## (iii) பெரிய ஏற்றுமதிப் பொருட்கள்

### (அ) தேயிலை

தேயிலையின் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, சாதகமற்ற விலை என்பன காரணமாக தேயிலைக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட ஓரளவிலான உதவி விரிவாக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு ஏலத்தில் இறுத்தல் 2 ரூபா அல்லது அதற்குக் குறைந்த விலையில் விற்கப்படும் தேயிலைக்குப் பெறுமான விகித வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலண்டன் ஏலத்தில் விற்கப்படும் தேயிலைக்கு, கப்பற்கட்டணம் காப்புறுதி முதலிய செலவுகளில் தேவையான சீராக்கங்களைச் செய்த பின்னர் அதே அடிப்படையில் பெறுமான விகித வரி செலுத்தப்படும். இம்மாற்றத்தின் பயனாகத் தேயிலை வரியிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் ரூ. 160 இலட்சத்தால் வீழ்ச்சியடையு மென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தேயிலை ஏற்றுமதித்தள்ளுப்படித் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வுள்ள ஆகக் கூடிய தள்ளுபடியினை இறுத்தலுக்கு 2 ரூபாவுக்குக் கீழாக விற்கப்படும் தாழ் பிரதேச, நடுப்பிரதேச தேயிலைகளைப் பொறுத்தவரையில் 10 சதத்திலிருந்து 15 சதமாகவும், இதே விலையளவிலுள்ள உயர்பிரதேசத் தேயிலைகளைப் பொறுத்தவரை 5 சதத்திலிருந்து 10 சதமாகவும் உயர்த்த எண்ணமிடப்பட்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய மேலதிக செலவு ரூபா 80 இலட்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஆ) இறப்பர்

உற்பத்தியாளருக்கு ஓரளவு நிவாரணம் அளிக்குமுகமாக உத்தரவாத விலையான ஒரு இறுத்தல் ஆர். எஸ். எஸ். 1 றப்பரின் நடப்பு மட்ட 80 சதத்தையும், ஆர். எஸ். எஸ். 2 றப்பரின் 73 சதத்தையும் 3 சதத்தால் அதிகரிக்க எண்ணமிடப்பட்டுள்ளது. செலவில் ஏற்படும் அதிகரிப்பு ஏறக்குறைய ரூ. 100 இலட்சம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.[1]

### (இ) தென்னை

தெங்கு உற்பத்தியாளருக்கு நிலையானதும், போதியளவு கவர்ச்சிகரமானது மான விலையை வழங்கும் முகமாக, ஏற்றுமதிக்கான எல்லாத் தேங்காய் எண்ணெயும் தொன்னுக்கு ரூ. 1250 விலையில் தெங்கு சந்தைப்படுத்தற் சபையினாலேயே கொள்வனவு செய்யப்பட வேண்டுமென முடிவு செய்யப் பட்டுள்ளது. கப்பலிடுவோர், தெங்குச்சந்தைப் படுத்தற் சபையிலிருந்தே தமது கொள்வனவுகளைச் செய்வதுடன் தெ. ச. சபையிடமிருந்தே தமது ஏற்றுமதி உத்தரவுச் சீட்டுகளையும் பெற வேண்டும். தேங்காய் எண்ணெயின் தொன் ஒன்றுக்கான ரூ. 1,250 விலை கொப்பறா கண்டியொன்றுக்கு ரூ. 200 விலையையும், 1,000 தேங்காய்க்கு ரூ. 150 விலையையும் தரக்கூடும். தென்னைச் சந்தைப்படுத்தற் சபைக்கு உதவி வடிவில் வழங்கப்படும் இத்திட்டத்தினால் எழக்கூடிய மேலதிக செலவுரூ.180 இலட்சம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

1. பக்கம் 204 இல் உள்ள அட்டவணை 11 (எ) 14 இற்குரிய அடிக்குறிப்பைப் பார்க்கவும்

(iv) ஏற்றுமதியாளருக்கான தள்ளுபடித்திட்டம்

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களைப் பொறுத்து அவற்றின் மொத்த விற்பனை வரிச்சுமை சம்பந்தமான சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. உற்பத்தி செய்பவரும் ஏற்றுமதி செய்பவரும் ஒரே ஆளாக இருப்பின் நடைமுறையிலுள்ள சட்டம் அத்தகைய வர்களுக்கு மொத்த விற்பனவு வரிச் சுமையிலிருந்து தெளிவாக விலக்களிக்கிறது. உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து வாங்கும் பொருள்களில் அவர் நேராகச் செலுத்தும் மொத்த விற்பனை வரிக்குச் சமமான தொகையைத் தள்ளுபடியாக வழங்குவதற்கேற்றவாறு 1963ஆம் ஆண்டு 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தைத் திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கொள்வனவு உண்மையில் ஏற்றுமதி செய்யப்படல்வேண்டும். இதனுல் வருமானத்தில் ஏற்படும் நட்டம் புறக்கணிக்கத்தக்க அளவினதாகும்.

2: வருமானமும் மொத்த விற்பனை வரிகளும்

(i) வரிநிர்வாகத்தைச் சீர்ப்படுத்தல்

வரியினின்று தப்பித்துக் கொள்ளும் எல்லா வகையினரையும் வரி வலையில் அகப்படுத்துவதற்காகத் திட்டமிட்டு முயற்சி செய்வதன் மூலம் ரூ. 350 இலட்சத்தைப்பெற முடியுமென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எதிர்பார்க்கிறது. இத்தொகையில் ரூ. 200 இலட்சம் மொத்த விற்பனவு வரியிலிருந்தும் மிகுதியான தொகை வருமான வரியிலிருந்தும் பெறப்படும். இது தொடர்பாக இத்திணைக்களம் கிளைகளை ஆரம்பிப்பதும், உற்பத்தி, வியாபாரங்களுடன் சம்பந்தப்பட்ட புத்தகங்களைக் கண்டிப்பாகப் பரிசோதிப்பது மான தனது கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க எண்ணியுள்ளது.

(ii) மொத்த விற்பனவு வரி வீதத்தில் அதிகரிப்பு

மிகப்பெருந் தொகையான அவசியமற்ற போகத்தன்மைவாய்ந்த பொருட்கள் மீதான மொத்த விற்பனவு வரி வீதம் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது. சில குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் குளிரூட்டிகள், மோட்டார் வாகனப்பாகங்களை இணைத்தல் அல்லது தயாரிப்புத் தேவைகள் (25 இலிருந்து 40 சதவீதம்), செயற்கைத் தும்பு, அணிகளும் ஆடைகளும் (20 இலிருந்து 40 சதவீதம்) மின் விசிறிகள் (15 இலிருந்து 30 சதவீதம்) தையல் இயந்திரங்கள் (10இலிருந்து 25 சதவீதம்) அழகு சாதனங்கள் (25 இலிருந்து 30 சதவீதம்) ஆகிய பொருட்களில் ஏற்பட்டுள்ளன. இந்த அதிகரிப்பிலிருந்து பெறப்படும் மேலதிக வருமானம் ரூ. 200 இலட்சமாகுமென எதிர்பார்க்கப் படுகிறது.

(iii) மொத்த விற்பனை வரி எல்லையை விரிவுபடுத்தல்

வியாபார மொத்த விற்பனவு வரியானது, அரசாங்கம் அண்மையில் கையேற்ற பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட போகல காரீய கொம்பனி ஆகிய வியாபார முயற்சிகள் பொறுத்து

விரிவாக்கப்படவுள்ளது. இவ்வரி எல்லையை விரிவுபடுத்துவதால் ரூ. 40 இலட்சம் மேலதிக வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) நடப்பு ஆண்டு அடிப்படையில் வருமானத்துக்கு வரிவிதிப்பு

*1971*, ஒற்றோபரில் புகுத்தப்பட்ட உழைக்கும் போதே வரி செலுத்தும் திட்டத்தின்கீழ் தொழிலிலிருந்து பெறும் நடைமுறை வருமான அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், தொழில் தவிர்ந்த ஏனைய மூலங்களிலிருந்து வருமானம்பெறும் வரி செலுத்துவோர் முந்திய ஆண்டு அடிப்படையில் வரி விதிக்கப்படுவர்.

நடப்பு முறையிலுள்ள முரண்பாடுகளின் நேரத்திலும், அழுத்தமான வரி நடைமுறைப்படுத்தலுக்கு உதவும் வகையிலும் மதிப்பாண்டாக *1975/76* தொடக்கம் நடப்பு வருட அடிப்படையிலேயே எல்லா வருமானங்களுக்கும் வரி விதிக்க எண்ணமிடப்பட்டுள்ளது.

(V) சொந்த வீட்டின் தேறிய ஆண்டுப்பெறுமதி மீதான வருமான வரிவிதிப்பு:

ஒரேயொரு வீட்டிற்குச் சொந்தமானவர்களது மதிப்பீட்டு வீதங்களை அண்மையில் உயர்த்தியதனால் ஏற்பட்ட சுமையை எளிதாக்கும்பொருட்டும், கட்டட அமைப்பை ஊக்குவிக்கும் பொதுவான நோக்குடனும் மதிப்பாண்டான *1973/74* தொடக்கம் சொந்தக்காரர் வசிக்கும் வீட்டின் தேறிய ஆண்டுப்பெறுமதிக்கு வரி விலக்கு அளிக்கப்படுமென வரவு செலவுத்திட்டத்தில் கூறப்பட்டுளது. இவ்விலக்களிப்பினால் வருமானத்தில் ஏற்படக்கூடிய நட்டம் புறக்கணிக்கத்தக்கதாகும்.

(VI) முன்னோடிக் கைத்தொழில்களுக்கான வரி விடுதலை

நிதி மந்திரியினால் அறிவிக்கப்பட்ட சில ஏற்றுமதிப்பொருட்கள் அல்லது பண்டங்களிலிருந்து பெறப்படும் வருமானத்திலுள்ள இலாபங்களுக்கு 1972 உள்நாட்டு இறைவரி (திருத்த) சட்டம் இல. 17 விலக்களித்துளது. இந்நிலையில் *1973* உள்நாட்டு இறைவரிச்சட்டம் இல. 4 இல் உள்ள *(6) (1) (7)* பிரிவில் கூறப்பட்ட முன்னோடிக் கைத்தொழில்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டமை ஓரளவு தேவையற்றதாகும். எனவே ஏற்றவொரு திருத்தத்தைச் சட்டத்துக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுளது.

**உள்நாட்டுந் தீர்வைகள்:**

(I) ***புகையிலை வரி***

உற்பத்தி செய்த புகையிலை மீதான உள்நாட்டு தீர்வை இருத்தலுக்கு 47ரூபா 50சதத்திலிருந்து 52 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டது. இதனால், சிகரெட் ஒன்றின் விலை ஒரு சதத்தினால் உயர்வடைந்தது. புகையிலை வரி மூலம் ரூபா 350இலட்சம் மேலதிக வருமானமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(II) மதுபானங்கள், குளிர்பானங்கள் மீதான வரி விதிப்பு

தானியவகை, குடிவகை மீதான உள்நாட்டு வரி கலனுக்கு 3 ரூபாவால் 12 ரூபாவுக்கு உயர்த்தப்பட்டது. நாட்டில் செய்யப்படும் ஜின், ரம், விரண்டி, விஸ்கி போன்ற வெளிநாட்டுக் குடிவகைகளின் உள்நாட்டுத் தீர்வையும் கல னுக்கு 81 ரூபா 10 சதத்திலிருந்து 106 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டது. இதன்மூலம் ரூபா 60 இலட்சம் கொண்ட மேலதிக வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் 1972 நவெம்பர் 10ஆந் திகதி சமர்ப் பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திற்கு முன்னரே 1972 நவெம்பர் மாதம் 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. எவ்வாறுயி னும் இந்நடவடிக்கைகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் நகல் மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளிலேயே அவற்றின் வருமான விளைவுகளைக் காண முடிகிறது.

4. ஏனைய எடுத்துரைப்புகள்:

(I) உணவு மானியம்:

(அ) அரிசி: வருமானவரி செலுத்துவோருக்கும், அவரில் தங்கி வாழ் வோருக்கும் இலவச அரிசி வழங்குவதை நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தகைய உணவு மானியக் குறைப்பினுல் ரூ. 250 இலட்சம் பெறப்படலா மென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) குடும்பப் படித்திட்டம் : தன் விருப்ப அடிப்படையில் தம்து அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தைத் திருப்பி ஒப்படைக்க விரும்பும் ஒவ்வொரு ஆளும் ஆண்டுக்கு 40 ரூபா வரையான படி ஒன்றைப் பெறுவதற்கு உரித் தாக்கப்படுவர். இது 4 காலாண்டுத் தவணைப் பணங்களில் 10 ரூபா வீதம் கொடுக்கப்படும். வருமான வரி செலுத்துவோர் இத்திட்டத்தின்கீழ் எதுவித நன்மையும் பெற உரித்துடையவரல்லர்.

(இ) உத்தரவாத விலைத்திட்டம் - நெல் : உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல்லுக்கு வழங்கப்பட்ட விலை புசலொன்றுக்கு 14 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ்ப் பெறப் படும் புசலொன்றுக்கான 1 ரூபா மேலதிகத் தொகையானது கமக்காரர் களுக்கு ஆண்டு மிகைப் பணமாக மட்டும் பயன்படுத்தப்படும்.

(II) உணவுப்பொருள் விற்பனையிலிருந்து பெறும் இலாபம் - சீனி

தூய்மையாக்கப்பட்ட சீனி விற்பனை, பங்கீட்டுத் திட்டத்திலிருந்து நீக்கப் பட்டு இருத்தல் ரூபா 2.50 க்கு கிடைக்கக் கூடியதாக ஆக்கப்பட்டது.

(III) **சாராய விற்பனையிலிருந்துபெறும் இலாபம்**

மிகச் சிறப்புவாய்ந்த சாராயத்தினதும், இருமுறை காய்ச்சி வடிக்கப்பட்ட சாராயத்தினதும் விற்பனை விலைகள் 1972 நவெம்பர் மாதம் 1ஆந் திகதியிலிருந்து 50 சதவீதத்தால் உயர்த்தப்பட்டன. வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுமுன்னரே, இம்முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டபோதும், எதிர்பார்க்கப்பட்ட 40 இலட்சம் ரூபா வருமானம் வரவுசெலவுத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ஏனைய வருமான வருமதிகளுடனும் சேர்த்தே கணிக்கப்பட்டது.

(IV) **தனியார் மோட்டார் வாகனங்கள்**

புதிதாகப் பதிவுபெறும் வாகனங்களைப் பொறுத்து, அதிகரிக்கும் அடிப்படையில் சிறீ இலக்கம் தாங்கிய மோட்டார் வாகனங்கள்மீது ஒரே ஒருமுறைமட்டும் வரி விதிக்கப்படும். இவ்வழியால் பெறப்படும் மேலதிக வருமானம் ரூ. 100 இலட்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(V) **மூலதனச் செலவுகளிலான சிக்கனம்**

மத்திய அரசின் மூலதனச் செலவைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் மூலம் ரூ. 1000 இலட்சம் சேமிக்கப்படலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(I) **சம்பள உயர்வுகள்**

அரசாங்கச் சேவை, அரச கூட்டுத்தாபனங்கள், சட்டசபைகள் என்பன வற்றிலுள்ள சில வகுப்புகளைச் சேர்ந்த ஊழியர்களின் வேதனங்கள் சென்ற மூன்றுண்டு காலத்தில் எதுவித மாற்றமுமின்றி இருந்துவந்துள்ளன. தற்போது 180 ரூபாவிற்குக் குறைவான மாதச்சம்பளம் பெறும் எல்லா ஊழியருக்கும் ஒரு விசேட படி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படி மாதமொன்றிற்குக் குறைந்தது 7 ரூபா 50 சதவீதமாக அமையும். மாதமொன்றுக்கு எல்லாமுட்பட 180 முதல் 250 வரை மாதச்சம்பளம்/கூலிபெறும் ஊழியர்கள் எல்லோரும் மாதமொன்றுக்கு 7 ரூபா 50 சத விசேட படியொன்றைப் பெறுவர். ரூபா 250க்கும் ரூபா 257/50 சதத்துக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுவோருக்கு ஒரு எல்லை வேறுபாட்டுத்தொகை வழங்கப்படும். அரசாங்க சேவை ஊழியர்கள் தொடர்பான இத்தீர்மானத்திற்கான செலவுகளுக்கென ரூ. 300 இலட்சம் வழங்கப்படுகிறது.

(II) **அரசாங்க சேவையிலுள்ள பதவி உத்தியோகத்தர்களுக்குக் கட்டாய உடல் உழைப்பு**

அலுவலக ஊழியர் யாவரும் ஓராண்டில் இரண்டொரு கிழமைக்கு உடல் உழைப்பில் ஈடுபட அழைக்கப்படுவர்.

**(III) நிதிக்கம்பனிகள்**

நிதிக்கம்பனிகளினுல் வழங்கப்படும்பெருமளவு கடன்தொகை உற்பத்தித் தன்மையற்ற நோக்கங்களுக்காகக் குறிப்பாக உத்தேச, அவசியமற்ற நுகர்வுகளில் செலவிடப்படுவதால் அந்நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் நோக்குடன் புதிய சட்டமொன்று புகுத்தப்படவுள்ளது.

**(IV) அடைவு பிடிப்போர்**

1971-72 வரவுசெலவுத்திட்ட உரையில் வரிவிலக்களிக்கப்பட்டபடி அடைவு பிடிப்போரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

**7. ஏனைய நிதி வழிமுறைகள்**

1971–72 நிதியாண்டில் கடைப்பிடிக்கப்பட்ட ஏனைய குறிப்பிடத்தக்க வழிமுறைகள் பின்வருமாறு;

(அ) 1971–72 வரவுசெலவுத்திட்டத்தில் ஒரு இறுத்தல் மாவை 15 சதத்தினுல் 48 சதமாக உயர்த்துவதற்குச் செய்யப்பட்ட எடுத்துரைப்பு 1971 நவெம்பர் மாதம் 13ஆந் திகதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது.

(ஆ) 1971-72 வரவு செலவுத்திட்டத்தினுல் புகுத்தப்பட்ட இரு முறைகளாக அமைந்த சீனியின் விலை அமைப்பு (இது ஒரு தனி ஆளை ஒரு வாரத்துக்கு அரை இறுத்தல் சீனியைப் பெறுவதற்கு உரித்துடையவராக்கிறது. இவ்வரை இறுத்தல் சீனி பங்கீட்டடிப்படையில் கட்டுப்பாட்டுவிலையான இறுத்தல் 72 சதத்தில் வழங்கப்படும். பங்கீட்டு முறையில் இல்லாத சீனியை இறுத்தல் ரூ. 1.50 சதப்படி வேண்டிய அளவில் பெறமுடியும்) 1971 நவெம்பர் மாதம் 13ஆந் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்கு 3 இறுத்தல் சீனியைப் பெறும் வகையில் திருத்தியமைக்கப்பட்டது. 1972 பங்குனி மாதத்திலிருந்து மாதம் 2 இறுத்தல் சீனியாக இப்பங்கீட்டளவு குறைக்கப்பட்டுள்ளது.

(இ) 1973 வரவு செலவுத்திட்டத்துடன் பங்கீட்டு முறைக்கு வெளியே விற்கப்படும் தூய்மையாக்கப்பட்ட சீனியின் விலை இறுத்தல் 2.50 ஆக உயர்த்தப்பட்டது. தொடர்ந்து 1972 திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து ஒரு இறுத்தல் சீனியின் விலை 2 ரூபாவாகக் குறைக்கப் பட்டது.